ஜனவரி - மார்ச் 2014

# கலைமுகம்

கலை இலக்கிய சமூக இதழ்


இதழ் 57

**சிறுகதைகள்**

துர்கதை

பரிசு

தொலைவு




சமகால இலங்கைப் பெண்ணியக் கவிதைகள்

குறித்துச் சில பார்வைகள்



யாழ்ப்பாணத்தில்
ஓவியக் கூடம்



பாலு மகேந்திரா:
நினைவுப் பதிவு



திருமறைக் கலாமன்றத்தின்
நாடக விழா

100/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட மாகாணத்தில் முதல் தர சாரதி பயிற்சிப் பாடசாலை



# கிருபா லேணர்ஸ்

(அரச அங்கீகாரம் பெற்ற A தர சாரதி பயிற்சிப் பாடசாலை)

**மும்மொழிகளிலும் வாகன பயிற்சி அளிக்கப்படும்**

**இப்பொழுது வவுனியாவில்**

இல. 216, A9 வீதி, (வசந்தி திரையரங்கு முன்பாக)

024 222 7777, 0777 100 444



வவுனியா மண்ணில்
முதன் முறையாக ஓட்டோ கியர் கார் மூலம்
விசேட பயிற்சி வழங்கப்படுகிறது.

(பெண்களுக்கு நவீன காரில்
பயிற்சி வழங்கப்படும்)

- வாகன பயிற்சிகள் சகல கிளைகளிலிலும் வழங்கப்படும்.
- குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.
- எழுத்துப்பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள் நடைபெறும்.
- அனுபவம் வாய்ந்த வாகன பயிற்றுனர்களால் வாகன பயிற்சிகள் வழங்கப்படும்.
- தாங்கள் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சி வழங்கப்படும்.
- தவணை முறைக் கட்டணங்கள்.
- வான், கார், முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள், லான்ட்மாஸ்ரர், ரக்டர், பஸ் என்பவற்றுக்கு பயிற்சியுடன் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.
- ரெயலில் சித்தியடையத்தவறின் தொடர்பயிற்சி இலவசமாக வழங்கப்படும்.


எழுத வாசிக்க கஸ்ரமானவர்களுக்கும் மற்றும் சிறந்த சாரதிகளை
உருவாக்குவதற்கும் நவீன முறை வீதிச் சட்டம் பற்றிய வீடியோ வகுப்புக்கள் நடைபெறும்.
(வகுப்பாசிரியர் இ.ம.செல்வராஜா 077 6206675)

# KIRUBA LEARNERS

(Govt. Approved A Grade Driving Training School)




தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
021 222 4353, 021 492 3200




**எமது கிளைகள்**

| பருத்தித்துறை | சாவகச்சேரி | நெல்லியடி | சுன்னாகம் | கிளிநொச்சி | விசுவமடு |
|---|---|---|---|---|---|
| 021 492 3201 | 021 492 3202 | 021 300 6550 | 021 224 2022 | 021 228 5505 | 021 320 1515 |
| 071 454 6958 | 021 227 0700 | 071 454 6957 | 071 454 6956 | 071 454 6955 | 071 454 6955 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமுகம்

கலை, இலக்கிய, சமூக இதழ்





ISSN 1391-0191

இதழ் 57


## உள்ளே

### கட்டுரைகள்


| | |
|---|---|
| அனார் | 05 |
| மதுரா | 32 |
| சி. விமலன் | 59 |
| செந்தூரன் | 65 |


### கவிதைகள்


| | |
|---|---|
| ந. சத்தியபாலன் | 23 |
| யாத்ரிகன் | 24 |
| கிரிஷாந் | 25 |
| ஜபார் | 31 |
| சூரியநிலா | 42 |
| நெற்கொழுதாசன் | 54 |
| காரைக்கவி | 63 |
| சு.க. சிந்துதாசன் | 68 |


### சிறுகதைகள்


| | |
|---|---|
| திசேரா | 26 |
| கருணாகரன் | 37 |
| கீதா கணேஷ் | 56 |


### பத்தி


| | |
|---|---|
| அ.யேசுராசா | 17 |


### நூல் மதிப்பீடுகள்


| | |
|---|---|
| ஈஸ்வரநாதபிள்ளை குமரன் | 43 |
| வேலணையூர் தாஸ் | 45 |
| ராஜ்குமார் | 46 |
| நேசன் | 47 |
| எம். இந்திராணி | 48 |
| தரிசனன் | 50 |
| சி. ரமேஷ் | 50 |
| ந. சத்தியபாலன் | 53 |


### மற்றும்


| | |
|---|---|
| தலையங்கம் | 02 |
| வரப்பெற்றோம் | 55 |
| கடிதங்கள் | 67 |


### சிறப்புப் பக்கம்


| | |
|---|---|
| கலைத்தூது கலாமுற்றம் ஓவியக் கூடம் | 32-36 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலாண்டுச் சஞ்சிகை

# கலைமுகம்

கலை, இலக்கிய, சமூக இதழ்

கலை 25 முகம் 01

ஜனவரி - மார்ச் 2014

பிரதம ஆசிரியர்
**நீ. மரியசேவியர் அடிகள்**

பொறுப்பாசிரியர்
**கி. செல்மர் எமில்**

முகப்போவியம்
**கோ.கைலாசநாதன்**

அட்டைப்பட கணினிவடிவமைப்பு
**அ. ஜூட்ஸன்**

இணையத்தளத்தில் இருந்து
கவிதைகளுக்கான ஒளிப்படங்கள்
**பீ. சே. கலீஸ்**

இதழ் வடிவமைப்பு
**கி. செல்மர் எமில்**

கணினி அச்சுக்கோர்ப்பும், பக்க அமைப்பும்.
**ஜெயந்த் சென்ரர்**
28, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.

விளம்பரம்
**கி. எமில்**
**கொ.கரன்சுன்**
**எ. ஸ்ரெலா**

தொடர்புகளுக்கு
**திருமறைக் கலாமன்றம்**
*238, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம், இலங்கை.*
Tel. & Fax : 021-222 2393
E-Mail: cpajaffna@yahoo.co.uk

## தலையங்கம்

வணக்கம்!

இரண்டாவது உலகப் போரின் போது, ஆயிரமாயிரம் யூத இன மக்கள் திட்டமிட்டு தீக்கிரையாக்கப்பட்ட அகோர நிகழ்ச்சி, அன்றைய உலகத்தின் மனச்சான்றை உலுப்பியது. அதன் பின்னணியில், 1950ஆம் ஆண்டு டிசெம்பர் 10ஆம் நாள், ஐக்கிய நாடுகள் மன்றம், உலகளாவிய அடிப்படை மனித உரிமைகள் பற்றிய கோட்பாட்டைப் பிரகடனம் செய்தது. அதில், "வாழ்வுக்கும், சுதந்திரத்திற்கும், பாதுகாப்பிற்குமான" உரிமை மனித இனத்தைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் உண்டு என ஆணித்தரமாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும், 'சிந்திப்பதற்கான சுதந்திரம்', 'மனச்சான்றுக்கான சுதந்திரம்', 'சமயத்திற்கான சுதந்திரம்', 'அமைதியான முறையில் ஒன்று கூடவும், ஒன்றியங்களில் இணைவதற்குமான சுதந்திரம்', 'நடமாடும் சுதந்திரம்', 'அரசில் பங்கேற்பதற்கான சுதந்திரம்' போன்ற அடிப்படைக் கொள்கைகள் கோடிட்டுக் காட்டப்பட்டன. காலப்போக்கில், மனித உரிமைகள் பற்றிய விளக்கங்களும் விரிவாக்கங்களும் முன்வைக்கப்பட்டன.

ஐம்பதுகளிலிருந்து இன்று வரைக்கும், மனித உரிமைகளைப் பேணிக்கட்டிக் காக்க பல்லாயிரக்கணக்கான தன்னார்வ அமைப்புக்களும், அரச சார்புள்ள நிறுவனங்களும், அகில உலகமெங்கும் மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி மனித மாண்புக்கு சான்று பகர்ந்து வருகின்றன. அப்படி இருந்தும், உலகின் ஒரு முனையிலிருந்து மறு முனை வரையும் அப்பட்டமான மனித உரிமை மீறல்களில் பல நாடுகளும் அமைப்புக்களும் ஈடுபட்டு வருவது வேதனைக்குரியது.

பெரும்பான்மை - சிறுபான்மை என்றும், உயர்ந்தவர்-தாழ்ந்தவர் என்றும், வலிமையுள்ளவர்-வலுவற்றவர் என்றும், ஆள்பவர்கள்-ஆளப்படுபவர் என்றும், பணம் படைத்தவர்-வசதி அற்றவர் என்றும் வேறுபாடுகள் ஆழமாக வேர்விட்டு இயங்கும் நாடுகளிலும், சமூகங்களிலும் மனித மாண்பைக் காப்பது கடினம்! இவ்வேறுபாடுகளைக் களைந்து விட முடியாதாயினும், இத்தகைய சூழ்நிலையிலும் மனிதத்தை பேணுவது பண்புடையோரின் கடனாகும். சிறப்பாக, மனித உரிமைகள் குறிப்பிட்ட ஒரு சூழலில் காலால் போட்டு நசிக்கப்படுகிறது. அது தான் போர்க்களம். உலகின் பல நாடுகளிலும் நடந்து கொண்டிருக்கும் போர்களிலும், ஆயுதப் போராட்டங்களிலும் 'போர்மை' என்ற அறப்பண்பு பலியாகிப் போவதைப் பார்க்கலாம். போரிலும், அறம் காக்கப்பட வேண்டியதை தமிழ் இலக்கியம் எடுத்துரைக்கும்; மனித நேய அமைப்புக்கள் வலியுறுத்தும் அறவோரை, வயதானவர்களை, பெண்களை, சிறுவர்களை குறிவைக்கக் கூடாது என்பதும், இத்தகையோர் எத்தகைய சூழ்நிலையிலும் காக்கப்பட வேண்டியவர் என்பதும் அகிலம் முழுவதிலும் ஏற்றுக் கொள்ளப்படும் காலம் எப்போது தான் உருவாகும்?

மேலும், மனித உரிமைகள் பற்றிய விவாதத்தில் இரு குழுமத்தினர் சிறப்பிடம் பெறுவர்: சிறுவர்கள், பெண்கள். சிறுவர்களுக்கும் உரிமைகள் பல உள்ளன என்பதை மறந்து வாழ்கின்றதாக நமது சமூகம் காணப்படுகின்றது. சிறுவர்கள் ஓய்வில்லாது, பாடசாலை தவிர்ந்த வியாபார நோக்குடன் இயங்கும் பின்னூட்டல் வகுப்புக்களுக்கு செல்ல நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். பெரும்பாலான பெற்றோர் தமது விருப்பங்களைப் பிள்ளைகள் மேல் திணித்து அவர்களை தமது கைப்பொம்மைகளாக மாற்றி வருகின்றனர். ஓய்வெடுப்பதற்கும், ஓடியாடி விளையாடுவதற்கும், உறவுகளுடன் அளவளாவுவதற்கும், தமது பல்வகை ஆற்றல்களையும் ஆளுமைகளையும் வளர்ப்பதற்கும் ஓய்வு நேரமெல்லாம் சிறுவர்களுக்கு வாய்ப்புக்கள் அளிக்கப்படாதுவிடின் அது மனித உரிமை மீறலாகக் கணிக்கப்படும்.

அடுத்து, பெண்களுக்கு ஆணாதிக்க சமூக நெறிமுறைகளிலிருந்து விடுபட்டு, சுதந்திரமாக இயங்குவதற்குரிய தளங்கள் அளிக்கப்படுவதில்லை. நமது சமூகத்தில், பாலியல் துன்புறுத்தல் எவ்வளவு தூரம் புரையோடிப்போயுள்ளது என்பதை அன்றாடச் செய்திகள் அழுத்திச் சொல்கின்றன. இரவு பன்னிரண்டு மணியிலும் பெண்கள் நடமாடக் கூடிய சூழ்நிலை ஒரு கால கட்டத்தில் நமது மண்ணில் இருந்தது. இன்று அது மறைந்து போனது வேதனைக்குரியதே! பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் அளிக்கப்படும் மதிப்புத் தான் மனித உரிமைகள் ஒரு சமூகத்தில் எந்நிலையில் உள்ளது என்பதன் உரைகல்.

*நீ. மரியசேவியர் அடிகள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாலமான இடத்தில் யாழ் நகரில் புதியதோர் உதயம்

# அம்பிகை புத்தக நிலையம்



இந்திய வெளியீடுகளான அகராதிகள்,
இலக்கிய, இலக்கண வரலாற்று நூல்கள்,
ஆங்கில இலக்கண நூல்கள், சிறுகதைகள், நாவல்கள்,
சரித்திர நாவல்கள், தத்துவ நூல்கள், சமய சாஸ்திர யோகாசன நூல்கள்,
சமையல் நூல்கள், சிறுகைத்தொழில் நூல்கள், மருத்துவ நூல்கள்,
சட்டம் சம்மந்தமாக நூல்கள், CIMA நூல்கள்
மேலும் பலவகையான நூல்களையும்
அப்பியாசப் புத்தகங்கள் ஏனைய பாடசாலை உபகரணங்கள்

**அனைத்தையும் ஒரே இடத்தில பெற்றுக்கொள்ள நாடுங்கள்.**

## அம்பிகை புத்தக நிலையம்

246 ஆஸ்பத்திரி வீதி ( சத்திரச் சந்திக்கு அருகாமையில்), யாழ்ப்பாணம். தொலைபேசி : 0778875357



# LITTLE CHUTTYS' MONTESSORI

*Home Away from Home*

Completely managed under the Montessori concept with sensorial materials designed by Dr.Maria Montessori, along with exercises for practical life, educational videos, annual concerts,elocution training, developing fine and gross motor skills, social interaction, arts and crafts






Transform your child in to independent,
well mannered and responsible adult.
Totally a different place for your chutty's placement.

**No.05, Brodie Front Lane, Kandy Road, Ariyalai, Jaffna.**

TELEPHONE : 0718262603,0779208116,0212226099

neelaran@yahoo.com,info@littlechuttys.com,www.littlechuttys.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SHADONI COURIER SERVICE

SCS

## ஷெடோனி வெளிநாட்டு பொதிகள் சேவை

### வெளிநாட்டுக்கான துரித தபால் பொதிகள் சேவை

- அனைத்து நாடுகளுக்குமான விசேட விலைக்கழிவு.
- கடல் உணவுகள் இரண்டு நாள்களுக்குள் உரிய இடங்களுக்கு வழங்கமுடியும்.
- சகல நாடுகளுக்கும் விமானச் சீட்டுக்களை பெற்றுக்கொள்ள முடியும்.
- கப்பல் மூலம் பொதி அனுப்ப முடியும்.
- பிற நாடுகளில் இருந்து அனுப்பும் பொதிகளை உங்கள் வீடுகளுக்கு வழங்க முடியும்.
- இயற்கையான (Natural flowers) பூக்கள், பூங்கொத்துக்கள் என்பன உரிய நேரத்தில் ஓடர் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

லண்டன் – 650/-
ஜேர்மனி – 700/-
பிரான்ஸ் – 750/-
சுவிஸ் – 900/-
இத்தாலி – 900/-

5Kg இற்கு மேற்பட்ட பொதிகளுக்கு விலைக்கழிவும் 10Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட விலைக்கழிவும் பரிசுப்பொருள்களும் வழங்கப்படும்.

aramex நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்

272, K.K.S Road, Jaffna.
T.P: 021 222 8591, 077 266 6429
E-mail: shadoni.scs@gmail.com

பிரதான கிளைகள்:
7/6, மத்திய கிழக்கு வீதி, குருநகர்
17/1, கடற்கரை வீதி, குருநகர்
37, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்
தேமதுரம் கே.கே.எஸ். வீதி, இணுவில் சந்தி, இணுவில்

## கணனி உலகில் நம்பகமான சேவையில்
## 10 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

TOWN SHOW ROOM
10-14, STANLY ROAD
JAFFNA
021 222 2050

TECHNICAL DIVISION
288, PALALY ROAD.
KANTHARMADAM, JAFFNA.
021 222 9581

MAIN SHOW ROOM
269E, PALALY ROAD,
KANTHARMADAM, JAFFNA
021 222 0388, 0777 570 124

PCP northern PC PARK







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய வானம் புதிய சிறகுகள்

## சமகால இலங்கைப் பெண்ணியக் கவிதைகள் குறித்துச் சில பார்வைகள்

அனார்

**அ. நானும் கவிதைகளும்**

சாய்ந்து எழுந்த விருட்சம்
வந்து செல்லுகின்ற மலைக்குன்று
தள்ளாடுகிற ஆகாயம்
இங்குமங்கும் ஓடியோடித் தேய்ந்த நிலா
ஊஞ்சலில்
தலைகீழாகப் பார்க்கிறேன் உலகத்தை.....

இறுக்கமாகப் பொத்திய கைகளிரண்டையும் தலைக்கு மேல் உயர்த்தியபடி "சுடு சுடு மாம்பழம்" எனப் பாடி விளையாடியவாறு மண் தரையில் கைகளை வைத்து விரிக்கும் போது என்னுடைய முதலாவது கவிதை பறந்து போயிருக்கக்கூடும். -கோப்பி மரத்திற்கும் மூங்கில் மரங்களுக்குமிடையே தேடிய சிவப்பு நிறத் தும்பியைப் போல.

மழை பெய்து ஓய்ந்த ஈர மண் தரையில், தோழி கீறிய சதுர வடிவான கட்டங்களில், ஒற்றைக் காலால் நொண்டி விளையாடும் போது, எதிரே தெரிந்த சிறு கடலையும் பெருங்கடலையும் நான் தாண்டிய கணம்தான் கவிதையோ என்னவோ.

என் சிறுவயதில், ஓலைகளால் கூரை வேய்ந்ததும் களிமண் தரை மெழுகியதுமான சிறு குடிசைக்குள்ளிருந்த ஒரு மூதாட்டியின் அருகாமை கிடைத்தது. முக்காடிட்ட அம் முதிய பெண்மணி களிமண் தரையில், பன் பாயில் கால்களை நீட்டி அமர்ந்தபடி, எப்போதும் நாட்டுப்புறக் கவிகளை ஒவ்வொன்றாக பாடிக்கொண்டேயிருப்பார். அருகே செம்பு வட்டாவும், படிக்கமும், சிறிய வெற்றிலை உரலும், சிவப்பு நிறச் சாயமூறிய பனை ஓலை விசிறியும் ஒரு சுருட்டைத்தலைமுடி சிறு பெண்ணும், அந்திசாயும் வரை அவளருகே அசையாமல் அமர்ந்திருப்போம். வெற்றிலை போட்ட இரத்தச் சிவப்பான நாக்கு, மேலும் கீழுமாக அசையக் காற்றில் மணக்கும் கவி இசையைக் கேட்டு மயங்கியிருப்பேன். பிறகு வந்த நாட்களில், சபைகளில் என்னை யாராவது கவிபாடும்படி கேட்டுக்கொண்டால், ஆர்வமேலீட்டால் மனனமாகியிருந்த அத்தனை நாட்டார் பாடல்களையும் மூச்சுவிடாமல் பாடிக்காட்டும் சிறுமியாக நானிருந்தேன்.

என்னுடைய முதலாவது கவிதை உணர்வுக்குக் கிடைத்த, முதலாவது தண்டனை விசித்திரமானது. நன்றாகப் பழுத்த மிளகாயை இரண்டாகப் பிளந்து, என் உதட்டில் வைத்துத் தேய்த்துவிட்டனர். கெட்ட வார்த்தை பேசுதல் அல்லது கெட்ட நடத்தைகளுக்கான சிறுவர் சிறுமியருக்கு வழங்கப்படும் தண்டனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது. எனவே கவி பாடுவதும் கெட்ட பழக்கம் என்று அவர்கள் எனக்கு உணர்த்தினர்.

என்னுடைய ஊரான சாய்ந்தமருது கிழக் கிலங்கையில் உள்ளது. இன்று முற்று முழுதாக நகர மயமாகிவிட்ட முன்னாள் கிராமம் அது. ஊரின் கிழக்கே வங்காள விரிகுடாவும் மேற்கே வயற்பரப்பும் விரிந்து பரந்து கிடக்கின்றன. இந்த நிலப்பகுதியின் பாரம்பரிய வாழ்க்கை முறைமைகளில், சொற்பமான வற்றைக் கண்கூடாகக் கண்ட, பெரும்பாலானவற்றை முதியோர்களிடமிருந்து செவி வழியாகக் கேட்டறிந்த கடைசிப் பரம்பரை நான். கட்டுப்பாடுகள், பாரம்பரியப் பண்பாடுகள் மிக்க எனது குடும்பத்தில் ஆண்களால் ஏற்படுத்தப்பட்ட வலுவான சட்ட திட்டங்கள் பெண்களைப் பூட்டிய கதவுகளுக்குப் பின்னே வைத்திருந்தது. அத்தகைய உக்கிரமான நடை முறைகளுக்கு உட்பட்ட ஆசிரியரும் எங்களூர் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவராகவும் (*Chief Trustee*) மற்றும் மார்க்கக் கல்வியை நன்கு பயின்ற உலமாவாகவும் இருந்த எனது தந்தை, எனது மூத்த இரு சகோதரிகளை பாடசாலைக் கல்வியை விட்டும் இடைநிறுத்தியது போலவே, பதினோராம் வகுப்புவரை மல்லுக்கட்டிப் பயின்ற என்னையும் இடைநிறுத்தினார். ஊரில் ஏற்பட்டி ருந்த யுத்த நெருக்கடிகள், குழப்பான சூழல், இன மோதல்கள் என்பன மேலதிகமான, வலுவான காரணி களாக அவருக்கு இருந்தன.

என்னுடைய வாழ்க்கை, அத்தம் விட்ட பெரு விரலுக்கும் பழம் விடுகிற சிறுவிரலுக்கும் இடையே இருந்த சந்தோஷங்களிலிருந்தும் விளையாட்டுக்களிலிருந்தும் அன்றாட இயல்புகளிலிருந்தும் தலைகீழாகி சாகசமானதாக எதிர்பாராத அதிர்ச்சிகளோடு என் எதிர் நின்றது.

உண்மையில் மரணம் ஹெலிக்கொப்டரின் (*Helicopter*) இரைச்சலெனத் தென்னை மரங்களிடையே தாழ்ந்து, சூழன்று கொண்டிருந்தது. நிராதரவும், அபாயங்களும், அச்சங்களும் பலவிதமாகத் தாக்கின. உயிர், உடல், மனம், இனம், அரசியல், மதம், பண்பாடு, நிலம், ஊர் எல்லாம் என்னைச் சுற்றி எரிந்தன. சமயத்தில் அந்த நெருப்பு என்னில் தீக்காயங்களை ஏற்படுத்தியது. என்னுடைய இயலாமை, கையறுநிலை, இரவின் ஆழமான பள்ளங்களைக் கண்ணீரால் நிரப்பியபடி வழிந்தோடியது. நான் என் உயிரின் நிறங்களைக் கரைத்துச் சிந்தி, ஓவியங்களாக வரைய முற்பட்டேன்.

ஒவ்வொரு வர்ணமாய்ப் பிரித்துத்
தரையில் கரைத்து
சிந்தும் ஓவியம் இது
இதன் இதயத்திலரும்பிய கவிதைகளும்
பாவப்பட்டவை தான்

வெறும் ஓவியத்தின் வாழ்வில்
என்ன அர்த்தமிருக்க முடியும்
அசைய முடியாக் கைகளும்
நகர முடியாக் கால்களும்
பேச முடியா உதடுகளும்
சந்தேகமேயில்லை
வாயில்லா ஜீவன்
ஆடாதசையாது
சுவரில் மாட்டப்பட்டிருக்கிறது
பல்லிகள் எச்சில்படுத்துவதையும் எதிர்க்காமல்

வருகிறவர்களுக்கென்ன
வரைந்தவனை
வாழ்த்திவிட்டுப் போகிறார்கள்
சட்டங்களால் சிலுவையறையப்பட்டிருக்கும்
ஓவியத்தைப் பார்த்து
உண்மை தெரியாதவர்கள்
உயிரோவியம் என்றார்கள்

**(ஓவியம் - அனார்)**

உண்மையில் அவசர அவசரமாக உயிர் விடப் போகிற ஒருத்தி விட்டுச் செல்வதற்கென எழுதிய இவ்விதமான பல கவிதைகள் என் முதல் தொகுப்பில் உள்ளன. திருட்டுக் காரியம் பண்ணும் பிரயத்தனங் களோடும், எனக்கிருந்த சவால்களோடும், இயலாமை களோடும் எழுதத் தொடங்கியிருந்தேன். எனக்குள் சென்று என் ஆன்மா பேசியதை உற்றுக்கேட்பதற்கு எவரும் தயாராக இல்லாத சமயத்தில், நானே அதைக் கேட்க விரும்பினேன். மிக உன்னிப்பாக, கொஞ்சம் ஆதரவாக என்னை வளர்த்தெடுக்கும் கனவுகளோடு, கவிதையுடன் ஆழ்ந்த உடன்பாட்டிற்கு வந்தேன். யுத்தம் காதலைப் போலவும், காதல் யுத்தத்தைப் போலவும் வீட்டிற்குள்ளும் வெளியேயும் அவ்வப்போது வெடித்துக் கொண்டிருந்தன.

எல்லாவிதக் கட்டாயத் திணிப்புகளிலிருந்தும் கல்வியோ காதலோ கிடையாத உலகத்திலிருந்தும் வெளியேற விரும்பினேன். யாரயேனும் இதற்காகத் தண்டிக்க வேண்டுமென நினைத்தேன். குறைந்த பட்சமாகக் கடவுளையேனும். ஆனால் சாகும் தருணங்களிலிருந்தெல்லாம் என்னை மீட்டெடுத்துக் கொண்டது கவிதை. ஆற்றில் இலக்கற்று மிதந்து செல்லும் இலையொன்றின் மீது விழுந்த எறும்பு, உயிர் தப்பிப் பிழைத்துக் கொண்டது.

அன்று நான் உணர்ந்தேன்
எனக்குக் கவிதை முகம்
என் உடல் பச்சை வானம்
நான் பெண் என்பதையும்...

ஒரு காட்டாறு
ஒரு பேரருவி
ஓர் ஆழக்கடல்
ஓர் அடைமழை
நீர் நான்
கரும் பாறை மலை
பசும் வயல்வெளி
ஒரு விதை
ஒரு காடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலம் நான்
உடல் காலம்
உள்ளம் காற்று
கண்கள் நெருப்பு
நானே ஆகாயம்
நானே அண்டம்
எனக்கென்ன எல்லைகள்
நான் இயற்கை
நான் பெண்

***(நான் பெண் - அனார்)***

நான் கவிதை எழுதத் தொடங்கிய நாட்கள், சமூகம் பலவிதமான இம்சைகளுக்குள் சிக்கியிருந்த கொந்தளிப்பான காலமாகும். சொல்வதற்கு அதிகமிருந்தன. ஆனால் சொல்ல முடியாத இறுக்கம் வெளியிலிருந்தது. இரண்டுக்கும் நடுவில் என்னுடைய இருப்பைக் கவிதையூடாக நிலைநிறுத்தத் தொடங்கினேன். என் குரல் தனிமையெனும் பாறையை ஊடறுத்தபடி ஒளியெனத் தெறித்தது. பெண் மனவெளியை, அதன் வீரியமான எழுச்சியை, பொங்கும் பிரவாகத்தை என்னுள் உணரத் தொடங்கினேன். கவிதை நுண்ணுர்வுகளுடன் சம்மந்தப்பட்டது. அனுபவங்களுக் கூடாகவும் வாசிப்பு, தேடல் போன்றவற்றினாலும் நிகழ்வது. உணர்வின் குரலை, அழகின் பாடலை, மொழியின் கனவை, அதன் உறையும் மௌனத்தை, நோவைப் பகிர்ந்து வருகிறேன். மேலும், கூறினால் என்னுடைய கவிதைகள் தமக்கு அதிகபட்ச உரிமைகளை எடுத்துக் கொள்ள எப்போதும் அனுமதிக்கிறேன்.

இவ்விதமே என்னை அபூர்வமானவளாய், வலிமையானவளாய் மாற்றியது கவிதை. என் அகவெளியைக் கவிதை என்னும் மந்திரப்பூச்சிகள் ஆள்கின்றன. அங்கே எனக்கான உலகம் எல்லாவித சாத்தியங்களாலும் ஆக்கப்பட்டிருக்கிறது. இன்று எனக்குத் தெரியும், வாளுறைக்குள் கனவுகளை நிரப்புவது எப்படி என்று. என்னுடைய ஆனந்தத்தை ஈரம் சொட்டச் சொட்ட உருவாக்குகின்றேன். எல்லையற்ற அதன் எல்லையை நிர்ணயிக்கிறேன். எனது ருசியின் முழுமையை முழுமையின் ருசிக்குப் பரிமாறுகிறேன்.

இரண்டு குன்றுகள்
அல்லது தளும்பும் மலைகள் போன்ற
முலைகளுக்கு மேல் உயர்ந்து
அவள் முகம் சூரியனாகத் தக தகத்தது

இரண்டு விலா எழும்புகளால் படைக்கப்பட்டவள்

பச்சிலை வாடைவீசும் தேகத்தால்
இச்சையெனப் பெருக்கெடுத்தோடும்
மலையாற்றைப் பொன்னாக்குகிறாள்
வேட்டையின் இரத்த வீச்சத்தை உணர்ந்து
மலைச்சரிவின் பருந்துகள் தாளப்பறக்கின்றன
மரக்குற்றிகளால் உயர்த்திக்கட்டப்பட்ட
குடில்களில் படர்ந்த மிளகுப்பற்றை
மணம் கசியும் கறுவாச்செடி
கோப்பிப் பழங்களும் சிவந்திருந்தன

நடுகைக் காலத்தில் தானிய விதைகளை வீசுகிறாள்

சுட்ட கிழங்கின் மணத்தோடு
பாறைகளுடன் மகுடிகளும் சேர்ந்து ஒலியெழுப்ப
ஆரம்பமாகின்றது சடங்கு
களிவெளி.... கள் சுகம்....
மூட்டிய நெருப்பைச் சுற்றி வழிபாடு தொடங்கிற்று
வளர்ப்பு நாய்களும்... பெட்டிப்பாம்புகளும்....
காத்துக் கிடக்கின்றன
மாய ஆவிகளை விரட்டி
பலி கொடுக்கும் விருந்துக்காகத்
தீர்ந்த கள்ளுச் சிரட்டைகளைத் தட்டி
விளையாடுகிற சிறுசுகள்
வாட்டிய சோளகக் கதிர்களைக் கடித்துத்
தின்கின்றனர்
பிடிபட்டு வளையில் திமிறும் உடும்பை
கம்பினில் கட்டி.... தீயிலிட்டு....
அதன் வெந்த இறைச்சியை மலைத்தேனில் தொட்டுக்
கணவன்மார்களுக்குப் பரிமாறுகின்றாள் குறத்தி
தும்பி சிறகடிக்கும் கண்கள் விரித்து
இரவுச் சுரங்கத்தின் கறுப்புத் தங்கமென எழும்
தலைவியை மரியாதை செய்கின்றனர்
மலைத்தேன் அருந்தியவாறு இருப்பவளைப்
புணர்ச்சிக்கு அழைத்தவன் கூறுகின்றான்
'போர் தேவதையின் கண்களாக உறுண்ட
உன் முலைகளால்
குறிஞ்சி மலைகளையே அச்சுறுத்துகின்றாய்'

அவளது குரல்.... மலைகளில் சிதறி ஒலிக்கின்றது

'பெண் உடல் பூண்ட முழு இயற்கை நான்'

காற்றில் வசிப்பவன்....
காலத்தை தோன்றச் செய்பவன்....
இன்றென்னைத் தீண்டலாம்!

***(குறிஞ்சியின் தலைவி - அனார்)***

**ஆ.**

இலக்கிய உலகில் கலகம் செய்வதற்கு ஏற்ற வடிவம் கவிதை இலக்கியமே. ஏனென்றால் கவிதை, மொழியைப் பற்றிய மொழியாக இருக்கிறது. பெண்ணுக்குள் கிடக்கும் எல்லையில்லாக் கற்பனை வளத்தைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் மிக்கது. தனவிலி மனத்தோடு அங்கே கிடக்கும் அடக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான குறியீடுகளுக்கு மிகவும் நெருக்கமானது. மேலும் கவிதை எப்பொழுதும் அமுக்கப்பட்ட ஒரு குழுவின் ஒட்டு மொத்தக் குரலாகப் பதிவாகிறது. எனவே அமுக்கப்பட்ட பெண்ணும் தனக்கான மொழியை உருவாக்கிக் கொள்ள கவிதை வடிவே சிறந்த சாதனமென, **கோராகப்லான்** *(Corakaplan)*, பெண்ணுக்கான மொழியை உருவாக்க வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகிறார். கவிதைதான் காரண காரியம், பகுத்தறிவு, தர்க்கம் என்கின்ற முறையில் பெண்ணை மடக்கிப் போடும் ஆணாதிக்க மொழியைத் தகர்த்துக் கொண்டு எல்லை மீறிய அப்பாலுக்கு அப்பால் அழைத்துச் செல்லும். படைப் பாகத்தின் உச்சக்கட்ட சுவையை எட்டி நிற்கும். எனவே கலகம் செய்ய நினைக்கின்ற பெண் எழுத்தாளர்களுக்குக் கவிதை சிறந்த வடிவமென்ற கருத்தைப் பல பெண்ணியலாளர்கள் முன்வைக்கின்றனர்.

இலங்கைத் தமிழ் இலக்கியத்தின் தீவிரப் படைப்பிலக்கியத் தளங்களில் ஈடுபடுகின்ற பெண்களது பங்களிப்பானது பல்வேறு காரணிகளால் 80களிலும் அதன் பின்னர் அடுத்தடுத்த கால கட்டங்களில் வெவ்வேறு முக்கியத்துவங்களைக் கொண்டும் வெளிப்பட்டிருக் கின்றது. 80களில் உருவாகிய புதிய சமூக அரசியல் பிரக்ஞையின் முக்கிய கூறாக சிவரமணி, செல்வி, சங்கரி, ஊர்வசி, மைத்ரேயி போன்றவர்களுடைய கவிதைகளைக் காணலாம். அக்காலகட்டப் பிரச்சினைகள், பெண்ணி ருப்பு, அரசியல் எழுச்சி மாற்றம், பெண்ணிய விடுதலை, போராட்ட நிலைகள் என்பனவற்றை அக் கவிதைகள் வெளிப்படுத்தின. தற்போது நிலவிவரும் சமகால நவீன பெண் கவிதையின் வளமான எதிர்காலத்தை அன்றைய கவிஞர்கள் தான் இத்தனை வலிமை மிக்க பாதையாக ஆக்கிக் கொடுத்தனர்.

1990கள் முதல் 2000 ஆண்டின் நடுப்பகுதி வரை பெண் கவிஞர்களின் பங்களிப்பானது செறிவும், வடிவச் செழுமையும் மாற்றுக் குரலும் கொண்டதாக, கருத்தாள மிக்க மொழி ஆளுமை பெற்று நவீன முகத்துடன் வளர்ச்சியடைந்தது. இலங்கைப் பெண் கவிஞர்களைப் பொறுத்தவரை இன்றியமையாத முக்கிய காலகட்டங்க ளாக இக் காலப்பகுதிகளைக் குறிக்க முடியும்.

சமகால இலங்கைப் பெண்ணியக் கவிதைகளை ஒற்றைத் தன்மையான குரலாக நாம் அடையாளப்படுத்திக் காண முடியாது. சமகாலம் என்பது கடந்த காலத்தின் பல நிலைப்பாடுகளிலிருந்து முற்றுமுழுதாக மாறி, வேறொன் றாக எம்முன் நிற்கின்றது.

இலங்கைப் பெண்கள் தம்முடைய நிலத்திலிருந்த படியும் அதற்குள்ளேயே அகதிகளாக்கப்பட்டும் புலம் பெயர்ந்து உலகின் பல நாடுகளில் சிதறியும் காணப்படுகின்றனர். ஆணாதிக்கத்திற்கெதிராகவும், பாலியல் வன்முறைகள், குடும்ப வன்முறைகள், நூதன ஒடுக்குமுறை பற்றிய கேள்விகளையும் சுயநிர்ணயம், இடப்பெயர்வு, சமூக அரசியல், வாழ்தலின் நெருக்கடி என்பன போன்ற விடயங்களில் கூர்மையான முனைப்புடன் பல பெண் கவிஞர்கள் கவிதைகளைப் பதிவு செய்து வருகிறார்கள். எப்போதும் மறுக்கப்பட்டு வரும் விடுதலை பற்றியும், சுதந்திரத்திற்கான வேட்கையினையும் தம்மு டைய நிலம் சார்ந்தும் இனம், மதம், பண்பாடுகள் சார்ந்தும் அல்லது சாராமலும் அனுபவங்கள் தொடர்பாகவும் அவர்களுடைய கவிதைகளை ஆயுதமாக ஆக்குகின்றனர். அநீதி, அடக்குமுறை, வன்மப்படுதலுக்கு எதிரான அந்த ஆயுதம், அவர்களது உயிரும் தசைகளும் சிந்திய குருதியால் ஆக்கப்பட்டிருக்கிறது.

80களின் காலகட்ட அரசியல் சூழ்நிலையும் பெண்நிலைவாதம் தொடர்பான சிந்தனைகளும் உணரப்பட்டு வெளிப்பட்ட கவிதைகள் பற்றிப் பேசாமல், சமகாலத்திற்குள் நுழைய முடியாது. வாழ்வும் மரணமும் அன்று அருகருகே இருந்தன. பல சமயங்களில் இரண்டும் ஒன்று போலவும் இருந்தன. இரண்டுக்கும் நடுவே இயங்கிய அன்றைய உச்சமான பெண் கவிதைகள் அவை. அந்த வகையில் 'சொல்லாத சேதிகள்' தொகுப்பில் சிவரமணி எழுதிய 'முனைப்பு' எனும் கவிதை,

பேய்களால் சிதைக்கப்படும்
பிரேதத்தைப் போன்று
சிதைக்கப்பட்டேன்
ஆத்மாவின் உணர்ச்சிகள் எல்லாம்
இரத்தம் தீண்டிய கரங்களால்
அசுத்தப்படுத்தப்பட்டன

என்னை
மேகத்திற்குள்ளும்
மண்ணிற்குள்ளும்
மறைக்க எண்ணிய வேளையில்
வெளிச்சம் போட்டுப் பார்த்தனர்
அவர்களின்
குரோதம் நிறைந்த பார்வையும்
வஞ்சம் நிறைந்த சிரிப்பும்
என்னைச் சுட்டெரித்தன

எனது
ஆசைகள் இலட்சியங்கள்
சிதைக்கப்பட்டன
அவர்களின் மனம்
மகிழ்ச்சி கொண்டது
அவர்களின் பேரின்பம்
என கண்ணீரில் தான்
இருக்க முடியும்

**(முனைப்பு - சிவரமணி)**

'அவர்கள் பார்வை' எனும் கவிதையில் சங்கரி எழுதும் போது,

எனக்கு முகம் இல்லை
இதயம் இல்லை
ஆத்மாவும் இல்லை

அவர்களின் பார்வையில்
இரண்டு மார்புகள்
நீண்ட கூந்தல்
சிறிய இடை
பருத்த துடை
இவைகளே உள்ளன

சமையல் செய்தல்
படுக்கையை விரித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை பெறுதல்
பணிந்து நடத்தல்
இவையே எனது கடமைகளாகும்

கற்பு பற்றியும்
மழை பெய்யெனப் பெய்வது பற்றியும்
கதைக்கும் அவர்கள்
எப்போதும் எனது உடலையே நோக்குவர்

கணவன் தொடக்கம்
கடைக்காரன் வரைக்கும்
இதுவே வழக்கம்

***(அவர்கள் பார்வை - சங்கரி)***

இவர்களைப் போன்றே மற்றொரு ஆளுமைமிக்க பெண் கவிஞர் ஊர்வசி. அவரின் கவிதை என்பது அதன் மொழி நேர்த்தியாலும் கவிதைத் தன்மையான கனவுகளாலும் இயற்கையினைக் கொண்டாடுகிற காதலினாலும் வாசிப்பனுபவத்தையும் சிலிர்ப்பையும் அதிர்வுகளையும் தரக்கூடியது. பசுமையும் பரிவுமான அவரது 'வேலி' என்ற கவிதை மிகுந்த நினைவுத் துயரை ஏற்படுத்துகிறது.

நட்சித்திரப் பூக்களை
எண்ண முடியாமல்
மேலே கவிழ்ந்தபடி கூரை
ஒட்டடைகள் படிந்து
கறுப்பாய்ப் போனது
கம்பி போட்ட சாளரம்கூட
உயரமாய்
ஆனாலும் திறந்தபடி
அதனூடே காற்று
எப்பொழுதும்
மிகவும் இரகசியமாய்
உன்னிடம் என்னை
அழைக்கிற காற்று

என்னைச் சூழவும் சுவர்கள் தான்
நச் நச் என்று
ஓயாமல் கத்திக் கொண்டிருக்கிற
பல்லிகள் ஊர்கிற சுவர்கள்
அவையும்
ஒட்டடைகள் படிந்து
எப்போதோ கறுத்துப் போனவை

உனக்காக நான்
தனிமையில் தோய்ந்தவளாய்
இங்கே காத்திருக்கிறேன்

பழைய பஞ்சாங்கங்களில்
புதிதாக
நம்பிக்கை தருவதாய்
ஒரு சொல்லைத் தேடிப்பார்த்தபடி
எப்பொழுதுதான் என்னால்
நீ வசிக்கின்ற அந்த
திறந்த வெளிக்கு வர முடியும்

உன் இருப்பிடம்
இங்கிருந்து வெகு தொலைவோ
இரண்டு சிட்டுக் குருவிகளை
இங்கே அனுப்பேன்
அல்லது
இரண்டு வண்ணத்துப் பூச்சிகளையாவது

***(வேலி - ஊர்வசி)***

'சொல்லாத சேதிகள்' தொகுப்பிலும் 'மரணத்துள் வாழ்வோம்' தொகுப்பிலும் இடம்பெற்றிருக்கும் பெண் கவிஞர்களின் கவிதைகளையும் இவ்விடத்தில் நினைவுகூர வேண்டும்.

'எல்லை கடத்தல்' எனும் கவிதைத் தொகுப்பிலிருந்து ஔவையின் 'சுயம்' என்ற கவிதையின் இறுதிப் பகுதி இவ்வாறமைகின்றது.

இப்போது; இப்போதுதான் என்னை மீட்டு
எடுத்திருக்கிறேன்.
அடக்கு முறைக்குள்ளிருந்தும்
அச்சம் தரும் இருளிலிருந்தும்
உணர்வுகள் பிடுங்கி எறியப்பட்ட வாழ்விலிருந்தும்
என்னை மீட்டுள்ளேன்
ஒளியைப் பிறப்பித்தபடி செல்லும் சின்னஞ்சிறு
மின்மினிப் பூச்சியாய் என்னைக் கண்டு
எடுத்துள்ளேன்
யாவருமறிய நிலவைப்போல இரவல் ஒளியில்
வாழ்தலில் உயிர்ப்பில்லை
சிறிய மின்மினியாய் சுயஒளியில் வாழ்தலே
இன்று சுகமென்றறிந்தேன்!
பூவின் மலர்விலும் வாழ்வு உயிர்க்கின்றது
காற்றின் அசைவிலும் வாழ்வு விரிகிறது

***(சுயம் - ஔவை)***

1990களின் காலகட்டத்தில் புதிய சிந்தனைப் போக்குகளோடு பல பெண்கள் கவிதைத் துறையில் ஓர் பாய்ச்சலை நிகழ்த்தியிருக்கிறார்கள் எனத் திடமாகக் கூற முடியும். முஸ்லிம் பெண் கவிஞர்களின் தீவிரமான பங்களிப்பு நிகழ்ந்த காலமும் இதுவாகும். இக் காலப் பகுதியானது இன முரண்பாடுகள் அதிகரித்துக் கிழக்கிலும் வடக்கிலும் பல கசப்பான அழியாத வடுக்களையும் தோற்றுவித்தது. 1990 ஒக்ரோபரில் யாழ். குடாநாட்டிலிருந்த முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட பின்னரான இவ்விடைவெளி, புதிய பல முஸ்லிம் கவிஞர்களையும் உருவாக்கியது.

பெண்மொழி, உடலரசியல், உடலைக் கொண்டாடுதல், போர்க்கால நெருக்கடி மிகுந்த அனுபவங்களை முனைப்போடு வெளிப்படுத்தியவர்களாகப் பல பெண்கள் கவிதைத் துறைக்குள் நுழைந்தனர். மைதிலி, ரேவதி, வினோதினி, ஆகர்ஷியா, சுல்பிகா, ஆழியாள், சுமதிரூபன், பெண்ணியா, ரஞ்சினி, தமிழ்நதி, பானுபாரதி, அனார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஃபஹீமா ஜஹான், உருத்திரா எனப் பல பெண்கள் தமக்கெனத் தனித்துவமான பாதையைக் கொண்டவர் களாக வெளிப்பட்டனர். இக் காலத்தில் இடம்பெற்ற முக்கிய அரசியல் சமூகத்தள மாற்றம், புலம்பெயர்தல், தமிழ்ப் போராட்டத்திற்கான ஆதரவுகளாகவும், எதிர்ப்புக் களாகவும் கவிதைகள் தோன்றின. புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்து எழுதிய பெண்கள் எனவும் கிழக் கிலங்கையை மையப்படுத்திச் சில பெண் கவிஞர்களும் மலையகப் பெண்ணெழுத்துக்கள் என வேறு தளத்திலும் வடக்கிலிருந்தபடி போராளிப் பெண்கள் எழுதிய கவிதைகள் என இன்னொரு வகையும் பல பிரிவுகளில் கவனிக்கத்தக்கனவாகப் பெண்கள் தம் கவிதைகளைப் பதிவு செய்தனர். உணர்வுத் தளத்தில் பெண் எனும் இருப்பு மேலோங்கியும் அவரவர்க்கான வாழ்வு நிலைகள், கவிதைகளைத் தீர்மானிக்கின்றவையாகவும் 90களின் பெண் கவிதைகள் அமைந்திருந்தன. சுமார் நூறு பேர்களைத் தாண்டிய பெண் கவிஞர்களின் அனைத்துக் கவிதைகள் பற்றியும் ஒரு கட்டுரையில் எழுதிவிட முடியாது. இங்கு எனது கட்டுரையானது ஆய்வாளரின் பார்வையில் அல்லாமல் சக பெண் படைப்பாளி என்ற அடிப்படையில் சில எல்லைகளுக்குட்பட்டு எழுதப்பட்டிருக்கின்றது என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன். இந்த வகையில் 90களில் எழுதப்பட்ட குறிப்பிடத்தக்க பெண் கவிஞர்கள் சிலருடைய கவிதைகளை அவதானிக்கலாம்.

புலம்பெயர்ந்து வாழ்ந்து வரும் ஆழியாளின் 'உரத்துப் பேச' தொகுப்பு காத்திரமான பெண் மொழி யுடன் வெளிவந்தது. அத் தொகுப்பிலிருந்து 'தேவைகள்' என்ற கவிதையில் ஒரு பகுதி,

ஒற்றைக்கவள உணவுக்காய்
ஒரு பிஞ்சு உயிர் நான்கு ஐந்தாய்ப் பிரிந்து
பேயாய்த் திரியும் அவலம்
தெரியுமா உனக்கு

கோணிப்பையால் உடல் மூடி
வீதிக் குளிரில் முடங்கி நடுங்கும்
எம் குட்டி இளவரசிகளின் சின்னக் கைகளை
அம்மா நீ அறிவாயா

தளிர்த்துக் கனியுமுன் வாடிக்கை ஆள் தேடி
தெருவெங்கும் அலையும்
என் பத்துவயதுத் தங்கைகளின்
வெம்பிய உடலங்கள் பற்றி
உனக்கேதும் தெரியுமா

**(தேவைகள் - ஆழியாள்)**

ஆழியாளின் மற்றொரு கவிதை 'மன்னம்பேரிகள்' பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட பெண்களைக் குறித்து எழுதப்பட்ட கவிதை இது. இலங்கைக் கவிதை வரலாற்றில் குறிப்பாகப் பெண்ணிய அடையாளத்துடன் வெளிவந்த கவிதைகளுள் இக் கவிதையின் இடம் தனித்துவமானது. கோணேஸ்வரிகளுக்கும் மன்னம் பேரிகளுக்கும் நிகழ்ந்த கொடூரம் ஒவ்வொரு பெண்ணுடலின் மீதும் ஆழத் திணிக்கப்படும் அன்றாட நிகழ்வாக உள்ளதை இக் கவிதையில் குறிப்பிடுகிறார்.

அதன் கண்கள்
நான் அறியாததோர்
மிருகத்தின் கண்களைப் பறைசாற்றிற்று
அவற்றின் பாலைத் தாகம்
அறியாப் பாஷையும்
எனக்குள் உணர்த்திற்று

அழகி மன்னம்பேரிக்கும்
அவள் கோணேஸ்வரிக்கும்
புரிந்த வன்மொழியாகத் தான்
இது இருக்கும் என
அவதியாய் எட்டிக் கடந்து போனேன்

அன்றைய அலைச்சலும்
மனக்குமைச்சலும் கூடிய
தூக்கத்தின் இடையில்
நானும் அவள்களுக்குப் புரிந்த
அதே அதே ஆழத்திணிக்கப்பட்ட
பாஷையைப் புரிந்து கொண்டேன்

அருகே கணவன்
மூச்சு ஆறிக்கிடக்கிறான்

**(மன்னம்பேரிகள் - ஆழியாள்)**

வினோதினியின் சிறப்பான கவிதைத் தொகுப்பு 'முகமூடி செய்பவள்' தன்னுடைய காலத்தில், பெண் வாழ்வின் யதார்த்தத்தையும் மூடுபனியற்று துலங்கும் மொழியால் எழுதி வந்தவர். அவருடைய 'முகமூடி செய்பவள்' கவிதையில், முகங்களையும் முகமூடிகளையும் மெல்லிய படிமமாக்கியுள்ளார்.

அவளது வீட்டின் சுவர்களெங்கும்
அவள் செய்யும் முகங்கள்.

தனது
குருதியிலொரு துளி
மூச்சின் ஒற்றைத் துணுக்கு
மூப்புறுந் தசைத்திரள் சிறிது சேர்த்து
முகங்கள் செய்கிறாள்.

நடு நிசியில் பகலின் வெளிச்சத்தில்
எனது ஊரில்
எங்கோ ஓர் உயிர் இறக்கையிலும்
மற்றொன்று பிறக்கையிலும்
யாரோ ஒருவர் கொல்லப்படுகையில்
கேள்வி கேட்கும் உரிமை தொலைத்து
அவர்கள் தலைகள் தாழ்கையில்
அவள் முகங்கள் செய்கிறாள்.

ஒரு பெண்ணின் காதல் மறுக்கப்படுகையில்
அவள் பலவந்தமாக இச்சிக்கப்படும்
பொழுதுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகள் பயந்து அழ மறக்கையில்
வெடிச்சத்தங்கள் பறவைகளின் கூடுகளை
உலுப்புகையில்
காரணமேதுமற்றுக் கடத்தப்பட்டவன்
தன் வாழ்வு பற்றி அச்சமுறுகையில்
வீடொன்று ஆளற்றுத் தனிக்கையில்
கிராமமொன்று கைவிடப்படுகையில்
அங்கே நாயொன்று
உணவின்றி அலைந்து உயிர்விடுங் கணத்தில்
பாலந் தேனுங் குடிக்கும் எமது கடவுளர்
இல்லை எனத் திட்டப்படுகையில்
அவள் முகங்கள் செய்கிறாள்

முகங்களின் மூச்சும்
மூடாத கண்களின் பார்வையும்
குழந்தைகளது என ஏமாந்து
அவள் உயிரூட்டும் முகங்கள் எப்படியோ
அவளது கனவுகளைக் களவாடி விடுகின்றன
அவ்வப்போது

**(முகமூடி செய்பவள் - வினோதினி)**

'மேலும் சில இரத்தக் குறிப்புகள்' கவிதை பற்றி எழுத்தாளரும் பெண்ணியச் செயற்பாட்டாளருமான வ.கீதா குறிப்பிடும்போது "பெண்மையை வரையறுக்கும் மாதாந்த இரத்தப்போக்கு வாடையும் வரலாற்றின் மீது படிந்துள்ள குருதிக்கறையை நினைவூட்டும் விபரீதத்தைக் கவிதையாக்கி, அகமும் புறமும் ஒன்றை மற்றொன்று ஊடுருவியுள்ள நிலையை, அரசியலுக்கு நூதனப் பொருள் வழங்கிப் பதிவு செய்கிறது" என்கிறார்.

மாதம் தவறாமல் இரத்தத்தைப் பார்த்துப்
பழக்கப்பட்டிருந்தும்
குழந்தை விரலை அறுத்துக் கொண்டு
அலறி வருகையில்
நான் இன்னும் அதிர்ச்சியுற்றுப் பதறுகின்றேன்
இப்போதுதான் முதல் தடவையாகக் காண்பது
போன்று
'இரத்தம்' கருணையை, பரிதவிப்பினை
அவாவுகின்றது
இயலாமையை வெளிப்படுத்துகின்றது
வன்கலவி புரியப்பட்ட பெண்ணின் இரத்தம்
செத்த கொட்டுப் பூச்சியின் அருவருப்பூட்டும்
இரத்தமாயும்
குமுறும் அவளுயிரின் பிசுபிசுத்த நிறமாயும்
குளிர்ந்து வழியக்கூடும்
கொல்லப்பட்ட குழந்தையின்
உடலிலிருந்து கொட்டுகின்றது இரத்தம்
மிக நிசப்தமாக
மிகக் குழந்தைத்தனமாக
களத்தில்
இரத்தம் அதிகம் சிந்தியவர்கள்
அதிக இரத்தத்தை சிந்த வைத்தவர்கள்
தலைவர்களால் கௌரவிக்கப்பட்டும்
பதவி உயர்த்தப்பட்டும் உள்ளார்கள்
சித்திரவதை முகாம்களின்
இரத்தக் கறைபடிந்திருக்கும் சுவர்களில்
மன்றாடும் மனிதாத்தமாவின் உணர்வுகள்
தண்டனைகளின் உக்கிரத்தில்
தெறித்துச் சிதறியிருக்கின்றன
வன்மத்தின் இரத்த வாடை
வேட்டையின் இரத்த நெடி
வெறி பிடித்த தெருக்களில் உறையும் அதே இரத்தம்
கல்லறைகளில் கசிந்து காய்ந்திருக்கும் அதே இரத்தம்
சாவின் தடயமாய்
என்னைப் பின் தொடர்ந்து கொண்டே இருக்கிறது

**(மேலும் சில இரத்தக் குறிப்புகள் - அனார்)**

இனபேதமற்றுப் போர் மக்களின் இயல்பு வாழ்க்கையைச் சிதைத்து நிர்மூலமாக்கியது. மனித அவலங்களைத் தனித்துப் பேசிய போர்க்கால பெண் கவிதைகள் விரிவாகவும் வேறுபடுத்தியும் பார்க்கப்பட வேண்டியவை. இவற்றில் போராளிப் பெண்கள் தாங்கள் போராளிகளாகவும் கவிதை எழுதுபவர்களாகவும் இருந்து பதிவு செய்த பல கவிதைகளையும் இணைக்க வேண்டும். ஓரளவு பெண் கவிஞர்கள் அனைவரினதும் கவிதைகளைக் காலத்திற்குக் காலம் சக பெண்ணியலாளர்கள் தொகுத்து வந்திருக்கின்றனர்.

2000ஆம் ஆண்டிற்குப் பின்னரும் சமகாலத்திலும் நம்பிக்கை தரும் கவிதைகளை எழுதுகின்ற பெண்கள் பலர் இருக்கின்றனர். அந்த வகையில் பிரதீபா, தான்யா, கற்பகம் யசோதரா, சலனி, ஸர்மிளா ஸெய்யத், பாயிஸா அலி, லறீனாஹக், சமீலா யூசுப்அலி, விஜயலட்சுமி என இன்னும் பலரைக் குறிப்பிட முடியும். இவர்களோடு 80, 90களில் எழுதத் தொடங்கிய குறிப்பிடத்தக்க பெண்கள் சிலர் இன்றும் கவிதைகள் எழுதி வருகின்றனர்.

கவிதை எழுதும் சுயமும் அந்தச் சுயத்தினூடாகக் கண்டெடுக்க விழையும் பெண் எனும் ஆளுமையை வளர்த்தெடுக்கவும் இன்றைய நவீன பெண் கவிதைகள் புதிய வடிவமெடுக்கின்றன. காதல், காமம், ஆண் பெண் உறவு, உடல் அரசியல் எனப் பிரத்தியேகமான பெண் மொழியை, சுயாதீனமும் விடுதலையும் கோரும் கவிதைகளாகவும் கட்டுப்பாடுகளிலிருந்து சுதந்தரம் பெறுதல், தெரிவுகளுக்கான சுதந்தரத்தை அடையும் நோக்கம், பாலியல் சமத்துவம், தனித்துவம், எதிர்ப்பு அரசியல் ஆகிய பெண்ணியத்தின் கூர்மையான பார்வைகளைத் தம்முடைய சமகாலக் கவிதைகளிலும் எழுதி வருகின்றனர். அவரவருக்கான அடையாளம், வித்தியா சமான கோட்பாட்டு ரீதியான அணுகுமுறை என்பனவும் இன்றைய கவிதையின் பொருள்கள் சார்ந்து காண முடிகின்றது. ஆதிக்கக் குரல்களைக் கொண்டவர்களை எதிர்த்தபடியும் பெண் விடுதலைக்கான கலகக் குரலில் முழங்கியவாறு பெண் எனும் கர்வமும் கம்பீரமும் கொண்டவர்களாகவும் பெண் கவிஞர்கள் எழுதி வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாகவே பெண்கள் ஒரே விடயத்திற்காகவே கண்ணீர் சிந்துகிறார்கள், போராடுகிறார்கள், கனவு காண்கிறார்கள், கவிதை எழுதுகிறார்கள், அது அவர்களுடைய விடுதலையை முன்னிட்டேயாகும். நம்பிக்கையினை, தன்னுடைய மன உறுதியினை, சுயத்தை வலிமையாகப் பதிவு செய்யும் பெண்ணியாவின் கவிதை இது.

.....
இறுகிய பாறைகளினூடிருந்து
வீறு கொண்டதொரு புல்லாய் நிமிர்வேன்
கூவத்தான் முடியாதாயினும்
ஈனஸ்வரத்திலேனும்
என் பாடல்களை முனகியபடி
யார் முன்னும் பணிதலன்றி
எனது உணர்வுகளோடும் அவாக்களோடும்
எவ்வகை வாழவெனப் புரியாத இது
குழப்பமிகு வாழ்வேதானாயினும்
வாழ்வேன்
வாழ்வேன்
வாழ்வேன் நான்

**(புத்துயிர்த்தல் - பெண்ணியா)**

சமுதாய அக்கறையும் கரிசனமும் கொண்டு தன் பெண்ணிய வெளிப்பாட்டு மொழியோடு எழுதியவர் ஃபஹீமா ஜஹான். அவருடைய 'பேறுகள் உனக்கு மட்டுமல்ல' கவிதையில் சிறு பகுதி,

போரிலும் பகையிலும் முதல் பொருளாய்
அவளையே சூறையாடினாய்
அவளுக்கே துயரிழைத்தாய்
உன்னால் அனாதைகளாக்கப்பட்ட
குழந்தைகளையெல்லாம்
அவளிடமே ஒப்படைத்தாய்
தலைவனாகவும் தேவனாகவும் நீ
தலை நிமிர்ந்து நடந்தாய்

**(பேறுகள் உனக்கு மட்டுமல்ல - ஃபஹீமா ஜஹான்)**

ஃபஹீமாவின் மற்றொரு கவிதையில் பெண்ணுடல், மனம், அவளுடைய அனுபவங்கள், நசுக்கப்படும் உள்ளுணர்வு, அவருடைய புறவெளி என்பவற்றைப் பதிகிறார்.

அவளது தலைமீது
குருவிகள் தங்கிச்செல்லலாம்
அவளது தோள் மீதமர்ந்து கிளிகள் சத்தமிடலாம்
எனினும்
பட்சிகளைப் பயங்காட்டவே
ஓங்கிய தடியொன்று
அவளது கரங்களில் தரப்பட்டிருக்கலாம்
யாருடைய விளைநிலமோ அது
விதிமுறைகள் வேறில்லை
அவள் காவல் புரிந்தாக வேண்டும்
.............
..............
யாருமற்ற அமைதியான இரவுகளில்
நிலவின் மெல்லிய கிரணங்கள்
அவளை விசாரிக்க வந்து போகும்
அவள் அண்ணார்ந்து பார்த்ததேயில்லை
நட்சத்திரங்கள்
திசைகளையும் வாழ்வின் திருப்பங்களையும்
ஓயாது சொல்லும்
அவள் காதுகொடுத்துக் கேட்டதேயில்லை
விடியலின் பூபாளம் அவளைச் சுற்றியே எழும்
அவள் வரவேற்றதேயில்லை
இவர்களின் விதிமுறைகள்
அவளை அசையவிடமாட்டாது

அவளைத் தாங்கி நின்ற பூமியே!
அவளைப் பரிதாபமாய்ப் பார்த்திருந்த வானமே!
அவளது மௌனமும் ஒரு நாள் வெடிக்குமா
குமுறுகின்ற எரிமலையாக
அதிரவைக்கும் இடிமுழக்கமாக

**(வயற்காட்டுக் காவற்காரி - ஃபஹீமா ஜஹான்)**

கவிதை அந்தரங்கமானது, நுட்பமானது, ஆழமானது. ஆனால் எவ்வளவு தூரம் மறைத்துப் பேச முடியும்? எவ்வளவு தூரம்தான் சத்தத்தை அடக்க முடியும்?

ஒவ்வொரு சமூகப் பெண்களும் எதிர்கொள்ளக் கூடிய சமூக, சமய நெருக்கடிகள், பிரச்சினைகள் பொதுவானதாகவும் பிரத்தியேகமானதாகவும் இருப்பது போன்றே முஸ்லிம் பெண் ஒருவர் எதிர்கொள்ளும் சமூகப் பிரச்சினைகளிலும் கூடுதலான வேறுபாடுகள் காணப்படுகின்றன. இலக்கியத் துறையைப் பொறுத்தவரை திருமணத்தின் பிறகு தம்முடைய எழுத்துச் செயற்பாட்டை தீவிரமான தளத்தில் முன்னெடுப்பது அவளுக்குச் சாகவும் பிழைக்கவுமான போராட்டம் என்று தான் கூற முடியும். அவள் எழுதுகின்ற கவிதையின் ஒவ்வொரு சொல்லையும் மதத்தோடு சேர்த்து அல்லது சந்தேகத்திற்குள்ளாக்கிக் கேள்வி எழுப்புகின்ற ஆண் எழுத்தாளர்களையும் விமர்சகர்களையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. மிக நுட்பமான வலைப்பின்னல்களைப் பின்னி வைத்திருக்கின்ற சமுதாயத்தில் தன்னுடைய கவிதைகளை முன்வைப்பதற்கு மனவுறுதி இரண்டு மடங்காகத் தேவைப்படுகின்றது. மூன்று தெரிவுகள் அவள் முன்னுள்ளன. குடும்பத்தின் ஆதரவைப் பெற்றவாறு அவள் எழுத வேண்டும் அல்லது கணவனின் ஆதரவைப் பெற்றுக் கொண்டவளாக. இல்லையென்றால் இவைகளை முற்று முழுதாக ஒதுக்கிவிட்டுத் தனித்து நின்று செயற்பட வேண்டும். இம் மூன்றையும் ஒருங்கிணைத்தபடி தன் இலக்கியச் செயற்பாடுகளில் ஈடுபடுவது எத்தனை பெண்களால் சாத்தியமாகியிருக்கிறது? நான் கவிதை எழுதுகின்ற பெண் என்பது வெளிப்படாமல் இருக்கத்தான் எனது சூழல் ஆசைப்படுகிறது, நிர்ப்பந்திக்கிறது. ஒரு பெண்ணின் வளர்ச்சியில் எவ்விதமான தடைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யெல்லாம் ஏற்படுத்த முடியுமோ அவற்றையெல்லாம் எவ்விதக் கூச்சமுமில்லாமல் ஏற்படுத்தச் சில ஆண்கள் தவறுவதுமில்லை.

முஸ்லிம் பெண் எனும் அடையாளத்தைப் பேணிக் கொண்டு கவிதை எழுதும் பெண்கள் தங்களுடைய சமுதாயத்தின் முன்பு எதிர்கொள்ளக் கூடிய பிரச்சினைகள், மனநெருக்கடிகள் ஆழந்த வலியைத் தரக்கூடியவை. கவிதை எழுதுகின்ற ஒரு முஸ்லிம் பெண் என்ற அடையாளத்திற்காக மாத்திரம் நேர்கொள்கின்ற இத்தகைய அசௌகரியங்களையும் தாக்குதல்களையும் பொறுத்தவர்களாகவே தொடர்ந்தும் கவிதைத் துறையில் ஈடுபட வேண்டியிருக்கிறது. நானும் பிற பெண்களும் சிக்கலான பல தருணங்களை, எதிர்ப்புக்களை அதிகம் எதிர்கொண்டே வருகின்றோம். ஆண்களுடைய ஆதிக்கமானது பெண் எழுத்துக்களின் குரல்வளையை நசுக்குவதற்கான முன்னெடுப்புக்களை இடைவிடாது மேற்கொள்கின்றது. உலகம், சமூகம், ஆதிக்கப்பண்பாடு, குடும்ப அமைப்பு இவற்றில் எவை பெண்ணைப் புரிந்து வைத்திருக்கின்றன? அதுவும் நேர்மையான வகையில்? அவளுடைய இறுக்கமான மூடுண்ட வாழ்வினது சிறிய ஒளித்துவாரங்களுக்கூடாகத் தெரியும் அந்தச் சுதந்திரத்தை உணர்வதற்காகப் பெண் பலியாகும் இடங்கள்தான் எத்தனை?

நுண்மையான பெண் மனத்தின் மென்னுணர்வுகள் காயப்படும் ஒரு தருணத்தை அஷ்ரபா நூர்தீன் 'நானும் நீயும்' கவிதையில் சொல்லும் விதம் எளிமையான, அதே சமயம் இன்றியமையாத பதிவுமாகும்.

நானும் நீயும் அருகருகிருந்து
பயணம் செய்கிறோம்
கறுப்புப் பர்தாவுக்குள்
முகம் மறைத்தவளாய் நான்
எனினும் எனக்கு
இவற்றின் மீது வெறுப்பில்லை
பால் அருந்தும் என் சிறு குழந்தை
மடியில் இருந்து வதைக்கிறது

பக்கத்தே மூத்தவனும்
அதற்கு மூத்தவளும்
காற்றுப்புகா நெரிசல்
நீ சுதந்திரமானவன் ஆண்
சிறகில்லையெனினும் நீ வான்வெளி மிதப்பாய்
அக்கணம் உனக்கு
மனைவியும் சிறுகுழந்தைகளும் இருக்காது

படகின் மேல்தளம் செல்வாய்
காற்றை முகர்வாய் களிப்புறுவாய்
சற்றே அலுக்கையில் இருக்கையிலும் அமர்வாய்
என்னருகில் ஓர் அந்நியனைப்போல
சிலவேளை எதிர்த்திசைப் பெண்களைக்கூட
நீ ரசித்த வண்ணம் பயணிக்கலாம்
அழகான நீலக்கடலும்
அதனைத் தொட்டுக் கொண்டு தெரிகின்ற
வெண்நீலவானும்
சிறிய மலைக் குன்றுகளும்
துள்ளுகின்ற மீன்களும்
பார்ப்பதற்கு அழகாய் இருக்கும்

எனினும்
நான் முகத்திரை அகற்றிடில்
அந்நிய ஆடவன் பார்த்திடல் கூடும்
அது ஹறாமானதென
எனது கணவனாகிய நீ தண்டிப்பாய்

***(நானும் நீயும் - அஷ்ரபா நூர்தீன்)***

மற்றொரு பெண்ணின் கவிதை....

இதோ
விலக்கப்பட வேண்டிய
இலத்திரனியல் ஆப்பிள்களோடு
வரவேற்பறையில் உட்கார்ந்திருக்கிறான்
உறைநிலைச் சாத்தான்
அவன் காந்தக் கவர்ச்சியில் ஈர்க்கப்பட்டே
ஏக்கமாய் முன்னமர்ந்து கிடக்கின்றன
சில ஏவாள் குஞ்சுகள்
இன்னோர் வீசலுக்கான
ஆதி விளைவுகள் மறந்து

***(எஸ்.பாயிசாஅலி கவிதைகள்)***

பொய்மையும்
குரோதமும் அழியாத என் விழிகளைச்
சிந்திக்கிறேன்
பல இரவுகளாக பல பகல்களாக
போராடி எனக்குள் வருந்தி அழுகிறேன்
என் பிரயத்தனம் முழுவதும்
பிரக்ஞை அற்ற என் சரீரத்தைக்
களைந்தெறிவது பற்றியது
நான் எண்ணுவது சாத்தியமாகின்
நதிகளின் கால்களில் நடந்தும்
கடல்களின் அடியில்
பாறைகளின் முகட்டில் படுத்தும்
மீன் கூட்டங்கள் கொத்தும்
பாசிகளில் குந்தி இளைப்பாறியும் திரிவேன்
கைகளுக்கு எட்டாத இன்பங்களை
கட்டப்படாத துயரங்களை சுமந்தலையும்
என்னை
அலைக்கழிக்கும்
சரீரம் துறக்கும் பகீரதத்தின் முடிவில்
நான்
கடவுள் நிலையை அடையக்கூடும்

***(சிறகு முளைத்த பெண் - ஸர்மிளா ஸெய்யித்)***

வாழ்வில் பெண்ணுடைய உணர்வுகள் எத்தனை எளிய காரணங்களுக்காக எந்தப் பொறுப்புமற்றுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறக்கணிக்கப்படுகின்றன! இது மதம், பண்பாடு என்ற போர்வையில் பெண்ணை ஒடுக்கும் ஆணின் அதிகாரத் திணிப்பை வெளிப்படுத்துகிறது. இத்தகைய சுயவிசாரணைக்கு உள்ளாகும் பொழுது ஏற்படும் கோபம் பெண்ணை அந்நியப்பட்டு நிற்பவளாய் ஆக்குகின்றது. அனாரின் 'பெண்பலி' என்ற கவிதை,

அது போர்க்களம்
வசதியான பரிசோதனைக் கூடம்
வற்றாத களஞ்சியம்
நிரந்தர சிறைச்சாலை
அது பலிபீடம்
அது பெண் உடல்

உள்ளக் குமுறல்
உயிர்த் துடிப்பு
இரு பாலருக்கும் ஒரே விதமானது
எனினும்
பெண்ணுடையது என்பதனாலேயே
எந்த மரியாதையும் இருப்பதில்லை அதற்கு
என் முன்தான் நிகழ்கின்றது
என் மீதான கொலை

***(பெண்பலி - அனார்)***

புலம்பெயர்ந்த இளம் தலைமுறைப் பெண் கவிஞர்களின் கவிதைகள், புலம்பெயர் வாழ்க்கையில் அவர்கள் எதிர்கொள்ளும் அன்னியப்பாடு, அடையாள மிழத்தல், தனிமை, தாம் இழந்து விட்ட மண்சார்ந்த, மரபு சார்ந்த வாழ்வு பற்றிய நினைவுகளையும் துயரங்களையும் இன வன்முறையால் இடம்பெறும் போரின் அவலங்களையும் வெளிப்படுத்துபவை. இக் கவிதைகள் யுத்த அவலங்களையும் ஒடுக்கு முறையின் வெவ்வேறு வடிவங்களையும் பேசுகின்றன. தான் வாழ்ந்த நிலத்தின் மீதான பிணைப்பையும் சொந்த இருப்பிடத்தை இழந்த நிலையையும் விடுதலை உணர்வையும் தாம் இழந்து விட்ட அடையாளத்தைப் பற்றிச் சிந்திக்கத் தூண்டுகின்றன. அகதி நிலை, புகலிட அனுபவம் அதனால் ஏற்பட்ட அந்நியப்பாடு, நிறவாதம் அவர்கள் எதிர்கொள்ளும் பண்பாட்டு முரண்கள் என்பன இக் கவிதைகளில் வெளிப்படுத்தப் படுகின்றன.

எலும்புக் குருத்தை ஊடறுக்கும் குளிரில்
வசந்தத்தை எதிர்பார்த்து
வெளிநாட்டு வாழ்வில் அள்ளுண்டு
சீட்டாட்டம்
ஏமாற்று
போதைப் பொருட் கடத்தல்
பல்வேறாய்ப் பிளவுண்ட
குழு மோதல்கள்
குடி
மேற்குலக யாத்திரிகத்தின்
விஸ்வரூபம்.....

***(மைத்திரேயி)***

வெள்ளிப்பனி படிந்த
இலையுதிர்த்த நெடுமரங்கள்
பெருங்கட்டடச் சாலைகளில்
ஊசிப்பனித்துளிகள்
............
மனிதம் எங்கே
நாளையும் இருப்பேனோ
கேள்விக் குறிகளின்
பூதாகர நெரிசலால்
பனிச்சாரலில்
நடுங்கும் கூதலில்
நீண்ட வரிசைகளில் நாம்
ஆயுட்தண்டனைக் கைதிகளாக
அகதியான குற்றத்திற்காக

***(சந்தியா)***

தூரத்தில் ஊளையிடுகிறது ஒரு விமானம்
தடித்த அங்கியின் கீழாகத்
துடித்துக்கொண்டிருக்கிற
உன் இதயம் பற்றி நான் அறிவேன்
..............
ஏதும் சொல்வதற்கில்லை
தொலைவில் உறுமல் இடுகின்ற
விமானத்தைத் தவிர
நிசப்தமானது இந்த இரவு

நண்பனே
என்னை நினைத்திருக்க
ஆயிரம் காரணங்கள் இருப்பது போல
உன்னை நினையாதிருக்கப்
பல்லாயிரம் காரணங்களாய்
என் வாழ்க்கை

***(ஆகர்ஷியா)***

எனது இயக்கம்
எனது ஆற்றல்
எனது சிந்தனை
எனது திறமை அனைத்தும்
எனக்கே இருக்கக் கூடியது
இவற்றை யாரிடமாவது இருந்து பெற்றிருந்தால்
நான் பெண்ணாக இருக்க முடியாது
நீங்கள் உருவாக்கிய பெண்மை
எனது அடையாளமல்ல
நான் பெண் பிறக்கும் போதே

***(ரஞ்சினி)***

மேலும் தமிழ்நதியின் 'சூரியன் தனித்தலையும் பகல்' என்ற கவிதைத் தொகுதியிலிருந்து 'இருப்பற்று அலையும் துயர்' கவிதையின் பகுதி,

பூட்டப்பட்ட வீடுகளைச் சுற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசியோடு அலைந்து கொண்டிருக்கின்றனர்
வளர்ப்புப் பிராணிகள்
சோறுவைத்து அழைத்தாலும்
விழியுயர்த்திப் பார்த்துவிட்டுப் படுத்திருக்கும்
நாய்க்குட்டியிடம் எப்படிச் சொல்வது
திரும்பமாட்டாத எசமானர்கள்
மற்றும் நெடியதும் கொடியதுமான போர் குறித்து

இந்தச் செங்கல்லுள் என் இரத்தம் ஓடுகிறது
இந்தக் கதவின் வழி
ஒவ்வொரு காலையும் துளிர்த்தது
கிணற்றில் பீறிட்ட முதல் ஊற்று
இளநீரின் சுவையொத்திருந்தது
மல்லிகையே உன்னை நான்
வாங்கி வரும் போது நீ சிறு தளிர்

இருப்பைச் சிறுபெட்டிக்குள் அடக்குகிறேன்
சிரிப்பை அறைக்குள் வைத்துப் பூட்டுகிறேன்
எந்தப் பெட்டிக்குள் எடுத்துப் போவது
எஞ்சிய மனிதரை
சொற்களற்றுப் புலம்புமிந்த வீட்டை
வேம்பை
அது அள்ளியெறியும் காற்றை
காலுரசும்
என் பட்டுப்பூனைக் குட்டிகளை

**(இருப்பற்று அலையும் துயர் - தமிழ்நதி)**

இவ்விதமான பல புகலிடப் பெண்கள் தம் வாழ்வனுபவங்களைப் பதிந்து வருகின்றனர். தொகுப்புகளிலும் சஞ்சிகைகளிலும் இணையத்தளங்களிலும் ஒரு தொகைப் புகலிடப் பெண் கவிஞர்கள் எழுதி வருவதைக் காண முடிகின்றது.

ஒரு ஆழமான காயத்திலிருந்து துளித்துளியாக, பொறுமையாகச் சொட்டும் குருதி போல எழுதப்பட்ட கவிதைகள் பற்றி இன்னொரு பெண்ணாகவும் கவிதை எழுதுகின்ற ஒருத்தியாகவும் இருந்தபடி நான் பேசுவது மிகப் பெரும் வலியை மீள உணரச் செய்கின்றது. ஒரு விதமான திகைப்பை, துணுக்குறுதலை, வெப்பிசாரங்களை, மெல்லிய குறுகுறுப்பை, பச்சாதாபங்களைக் கிளறிவிட்டிருக்கிறது. துயரமும், கருணையும், கனவும், அன்பும், திளைத்தலும், வெடிப்பும், விரிசலும், ஆழமும், மாயமும், பெருக்கெடுப்பின் வியாபகமும் எனத் திக்குமுக்காடுமளவுக்குப் பெண் எனும் பிரவாகம் தூக்கி வீசப்பட முடியாத கேள்வியாய்ப் பூமியை மூடுகின்றது.

கவிதைகள் பற்றிப் பேசுவது என்பது என்ன? அது நமக்குப் புரியாத அந்நியமான பழக்கப்படாத ஒன்றைப் பற்றியதல்ல. அது புனிதமானதோ கைக்கெட்டாது அந்தரத்தில் பிடிபடாது தொங்கும் ஜாலமோஅல்ல. பெண் கவிதை இந்த வாழ்வையும் சமூகத்தையும் இயற்கையினையும் மனித அறம் பற்றியும் பேசுவதுதான். தேசம், இயற்கை, கலாசாரம், மனிதன் இவைகள் அனைத்தையும் புரிந்து கொள்ள விளைவதும் கவியொன்றைப் புரிந்து கொள்ள முயல்வதும் ஒரேவிதமானதுதான்.

புரிதலுக்கும் புரியாமைக்கும் நடுவில் மறைந்திருக்கும் நுண்ணுணர்வுகளை திளைப்பிற்கும், காயங்களிற்கும் நடுவேயான அனுபவத்தைக் கண்களுக்கும் உள்ளத்திற்குமான இசையைக் கேட்பது பற்றியே நான் பேச விரும்புகின்றேன். அதாவது பெண் என்பவள் நீருக்கடியே கொண்டு செல்லும் மொழி என்ற நெருப்பைப் பற்றி, ஒன்று போலவே தோன்றும் வெவ்வேறு நதிகள் பற்றியும்.

சமகாலத்தில் பெண் இலக்கியத்திற்கான புதிய மரபும் திறன்களும் நவீன மொழியில் உருவாகியுள்ளன. பெண்களுடைய சிந்தனைத்தளம், படைப்பின் கூறுகள், அவரவருக்கான அடையாளத்தை முன்னிலைப் படுத்துகின்றன. பிரத்தியேகமான குரலுடன் ஒவ்வொரு பெண்ணும் பேச முற்படுகின்றாள். தமிழ்ப் பண்பாட்டுச் சூழலில் பெண்ணின் அடையாள மையம் சிதைக்கப்படும் போது பெண் கவிதையின் உள்முகத் தன்மை புதிய அடையாளத்தைப் பெற்றது. பெண் உடலின் அரசியலை, அகச் சமூக முரண்களை, ஒரு புதிய வெளியில் பெண் மொழிக் கவிதைகள் மிக வலுவாகத் தம்மை நிறுவியுள்ளன. ஒடுக்கப்பட்ட பெண் உடலுக்குள் கிளர்ச்சி, வேட்கை, வலி, கனவு, காயம், வதைகள் என்பனவற்றைச் சுமந்து பெண்ணுடலானது வாழ்வின் முன்னுள்ள களமாகவும் விளங்குகின்றது. அதே நேரம் தனித்துவமான உணர்வுகளை உருக்கமாகவும் உயிரோட்டமாகவும் சொல்கின்ற கவிதைகள் ஏராளமாக எழுதப்பட்டு வந்திருக்கின்றன. பெண் அரசியல் கவிதைகள் அவை கொண்டுள்ள முக்கியத்துவத்தின் அடிப்படையில் முழுமையான கலைப் படைப்பாகவும் மேலோங்கிக் காணப்படுகின்றன. இக் கட்டுரையானது அனைத்துப் பெண் கவிதைகளையும் உணர்வுத் தளத்தில் நின்றே அணுகியிருக்கின்றது. இலங்கைப் பெண் கவிதைகளின் உட்பிரிவுகளையும் கால மாற்றத்தின் நிகழ்வுகளையும் அரசியல் மாற்றங்களையும் வகைப்படுத்திப் பார்க்கின்றது. சார்பற்று இயங்கும் அவதானத்தோடு இக் கட்டுரையை அமைக்க முயன்றிருக்கிறேன்.

முள்ளிவாய்க்காலுக்குப் பின்னரான பெண்கவிதைகள் பற்றிய அவதானத்தில் பெண்களின் கவிதைகள் ஆறுதல் மொழியாக, மாபெரும் துயருக்கான கதறலாக, ஆன்மாவிற்குத் தேவைப்படும் சிகிச்சை மொழியாக எழுதப்பட்டிருக்கின்றதா? மிகப்பெரும் சமூக அவலத்தின் சாட்சிகளாய் அல்லது பாதிக்கப்பட்ட பெண் உடலின் மனதின் குரலாய் அந்த மண்ணிலிருந்து வெளிப்பட்டிருக்கின்றதா? நிசப்தமாக ஒளிந்திருக்கும் அந்த இருதயங்களிலிருந்து வெடித்துக் கிளம்பும் உண்மைகள் மானுட வரலாற்றின் வெளியில் உயிர்மொழியாய் உலவுகிறதா? இங்கு நாம் உரையாடிக் கொண்டிருக்கும் பொழுதில், தான் பெண் என்பதையே மறந்து அங்கு உறைந்து போயிருக்கும் இன்னொரு பெண்ணின் கண்கள், அந்தக் கண்களிலிருந்து சூனியம், சாம்பல் சுழலாய் புகையாய் நம் புன்னகைகளின் மேல், கனவுகளின் மேல், பல்லாயிரம் பல்லாயிரம் கருகிய குரல்களின் தூசிப்படலங்களாக கவிவதாக உணர்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களிடம் இதற்கேதும் பதிலிருக்கின்றதா? இந்தக் கேள்வியை அனைத்துப் பெண் கவிஞர்களிடமும் முன் வைக்கின்றேன்.

### இ.

1990க்கும் 2000 ஆண்டுகளின் பின்னர் இன்று வரையுமான இலங்கையில் வெளிவந்த, பெண்களில் சில கவிதைத் தொகுப்புக்கள் பற்றிய விபரம் மேலதிகத் தகவல்களுக்காகத் தனியே தரப்படுகின்றன.

வானதியின் கவிதைகள் (1990), பாரதியின் காதோடு சொல்லிவிடு (1992), கஸ்தூரியின் ஆக்கங்கள் (1992), சிவரமணி கவிதைகள் (1993), தூயவளின் நிமிர்வு (1993), சுல்பிகாவின் விலங்கிடப்பட்ட மானிடம் (1995), உயிர்த்தெழல் (2001), உரத்துப் பேசும் உள்மனம், செல்வி - சிவரமணி கவிதைகள் (1997), ஆதிலட்சுமி சிவகுமாரின் என் கவிதை (2000), ஔவையின் எல்லை கடத்தல் (2000), ஆழியாளின் உரத்துப் பேச (2000), துவிதம் (2006), தர்மினியின் உதயத்தைத் தேடி (2002), மைதிலியின் இரவில் சலனமற்றுக் கரையும் மனிதர்கள் (2003), லறீனா ஹக்கீன் வீசுக புயலே (2003), லுனுகலை ஹஸீனா புஹாரியின் மண்ணிழந்த வேர்கள் (2003), யோ.கார்த்திகாவின் ஆணிவேராகிவிடுமோ, அம்புலியின் மீண்டும் துடிக்கும் வசந்தம் (2004), ஈழவாணியின் சிதறல் (2004), தலைப்பு இழந்தவை, மைத்ரேயின் கல்லறை நெருஞ்சிகள் (2004), அனாரின் ஓவியம் வரையாத தூரிகை (2004), எனக்குக் கவிதை முகம் (2007), உடல் பச்சை வானம் (2009), பெருங்கடல் போடுகிறேன் (2013), நளாயினி தாமரைச் செல்வனின் நங்கூரம் (2005), உயிர்த்தீ, சுதாகினி சுப்ரமணியத்தின் அடையாளம் (2005), றஞ்சனி கவிதைகள் (2005), தமிழ்நதியின் சூரியன் தனித்தலையும் பகல் (2007), வினோதினியின் முகமூடி செய்பவள் (2007), வி.கலைமகளின் முடிவில்லாப் பேச்சுக்கள் (2007), ஆகர்ஷியாவின் நம்மைப் பற்றிய கவிதை (2007), ஃபஹீமா ஜஹானின் ஒரு கடல் நீரூற்றி (2007), அபராதி (2009), ஆதித்துயர் (2010), மலராவின் புதிய இலைகளால் ஆதல் (2009), பெண்ணியாவின் என் கவிதைக்கு எதிர்த்தல் என்று தலைப்பு வை! (2006), இது நதியின் நாள் (2008), அஷ்ரபா நூர்தீனின் ஆகக் குறைந்த பட்சம்...! (2012), மயூ மனோவின் நாம் பேசிக்கொண்டிருந்த போது பெய்திராத மழை, ஸர்மிளா ஸெய்யித்தின் சிறகு முளைத்த பெண் (2012), எஸ்.பாயிஸா அலி கவிதைகள் (2012), மனோகரியின் மழுங்கடிக்கப்பட்ட அடையாளங் களும் (2013).

### ஈ.

1980களுக்குப் பின் வெளிவந்த பல்வேறு இலங் கைப் பெண் கவிஞர்களின் குறிப்பிடத்தக்க தொகுப்புகள்:

சொல்லாத சேதிகள் (1986), மறையாத மறுபாதி (1992), கனல் (1997), உயிர்வெளி (1999), எழுதாத உன் கவிதை (2001), வெளிப்படுத்தல் (2001), பெயல் மணக்கும் பொழுது (2007), மை (2007), இசை பிழியப்பட்ட வீணை (2007), ஒலிக்காத இளவேனில் (2009), பெயரிடாத நட்சத்திரங்கள் (2011), கவிதைகள் பேசட்டும் (2010) போன்றவற்றைக் கூறலாம். ■

**உசாத்துணை நூல்கள்:**

துவிதம் (2006)
பெயல் மணக்கும் பொழுது (2007)
பூவல் (உலகத் தமிழ் இலக்கிய மாநாடு - 2012, கொழும்பு)
ஞானம் (ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழ் - 2012, கொழும்பு)

---




**யோ.யோண்சன் ராஜ்குமாரின்**

## அமைதிப் பூங்கா

**(சிறுவர் நாடகம்)**

திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநரும், யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலையின் நாடகமும் அரங்கியலும் பாடத்தின் ஆசிரியருமான யோ.யோண்சன் ராஜ்குமாரின் எழுத்துருவில் உருவாகி மேடையேற்றம் கண்ட எட்டு சிறுவர் நாடகங்களின் பிரதிகளை உள்ளடக்கிய தொகுப்பாக 'அமைதிப் பூங்கா' என்னும் சிறுவர் நாடக நூல் யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலையின் முத்தமிழ் மன்ற வெளியீடாக வெளிவந்துள்ளது. இது ஆசிரியரின் மூன்றாவது நூலாகும். ஏனைய நூல்கள் 'கம்பன் மகன்' - தென்மோடி நாட்டுக்கூத்து 'கொல் ஈனுங் கொற்றம்' - கூத்துருவ நாடகம்



**அ.யேசுராசாவின்**

## திரையும் அரங்கும்: கலைவெளியில் ஒரு பயணம்

**(கட்டுரைத் தொகுதி)**

சிறுகதை, கவிதை, இலக்கிய - திரைப்பட - நாடக விமர்சனம், பத்தி எழுத்து, மொழிபெயர்ப்பு, இதழியல், தொகுப்பு முயற்சி எனப் பல்துறைகளில் கவனத்துக்குரிய ஆளுமையாகத் திகழும் அ.யேசுராசாவின் புதிய நூலாக 'திரையும் அரங்கும்: கலை வெளியில் ஒரு பயணம்' என்னும் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளிவந்துள்ளது. தமிழியல், லண்டன்; காலச்சுவடு பப்ளிகேஷன் (பி) லிட் இணைந்த வெளியீடாக வெளிவந்துள்ள இந் நூலில் திரை தொடர்பான 34 கட்டுரைகளும், அரங்கு தொடர்பான 9 கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளதுடன், இக் கட்டுரைகளுக்காக 175 புகைப்படங்களும் இணைக்கப்பட்டு, அழகுற வடிவமைப்புச் செய்யப்பட்டு இந் நூல் வெளிவந்துள்ளது. இது ஆசிரியரின் ஏழாவது நூலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தி

# திரை உலா

அ. யேசுராசா

## அப்பாவின் மிதிவண்டி!

அண்மைக் காலங்களில் நமது பிரதேசத்தில், புதியவர்கள் பலர் குறும்படங்களை உருவாக்குவதில் ஆர்வத்துடன் ஈடுபடுகிறார்கள். நாளேடுகளில் இவை பற்றிய தகவல்கள் வெளிவந்தபடியுள்ளன. சிலவற்றைப் பார்க்கும் வாய்ப்புக் கிட்டுகின்றது; பலவற்றைப் பார்க்க இயலவில்லை.




அண்மையில் ஜோசித்தன் (ஜோசப் மேரி என்பது அவரது சொந்தப் பெயர்; வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நாடகமும் அரங்கியலும், தமிழ் ஆகிய பாடங்களைப் போதிக்கும் ஆசிரியராகக் கடமை புரிகிறார்.) தயாரித்து - நெறியாள்கைசெய்த, 'அப்பாவின் மிதிவண்டி' என்னும் குறும்படத்தைப் பார்த்தேன். அதன் வெளியீட்டு விழாவில் எனது விமர்சனக் கருத்துக்களை வெளிப்படையாக முன்வைக்க வேண்டுமென, வீட்டுக்கு வந்து அவர் வற்புறுத்தியதில், தவிர்க்க இயலாது, 03.02.2014 அன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றினேன்; அந்தப் பேச்சின் சுருக்கத்தை இங்கு பதிவுசெய்கிறேன்.


நாவலைப் போன்றது முழுநீளக் கதைப்படமென்றால், சிறுகதையைப் போன்றது குறும்படமெனலாம். ஒரு சிறிய மையக் கதையை, கூர்மையும் இறுக்கமும் கொண்டதாக குறும்படம் வெளிப்படுத்த வேண்டும். ஒருவிதத்தில், முழுநீளக் கதைப்படத்தின் உருவாக்கத்திலுள்ளதை விடவும், கூடுதலான படைப்புப் பிரக்ஞையைக் குறும்பட வடிவம் வேண்டி நிற்கிறது என்றும் கூறலாம்.


அப்பாவின் மிதிவண்டி இரண்டு விடயங்களை வெளிப்படுத்துகின்றது.

அ) சிதம்பரி என்பவரின் சைக்கிள் மீதான அக்கறையும், அதனை இழக்க நேர்ந்தபோது அவரது இழப்புணர்வும் வேதனையும். சைக்கிள் நீண்ட காலமாக அவரது உணர்வுடன் கலந்துவிட்ட - ஓர் உயிர்ப்பொருள் போல் இருக்கிறது. சிறுபருவத்தில் அவருக்கு அது மகிழ்வைக் கொடுக்கிறது; காதலியோடு தப்பி ஓடுவதில் உதவியாக இருந்திருக்கிறது; ஏனையவர்கள் மோட்டார் சைக்கிளுக்கு மாறும்போதும் அதனை வலியுறுத்தும் போதும், மாறாது - அவர் விருப்புடன் பேணுவதற்குரிய, முதுசம் போலுமுள்ளது. ஓரிடத்தில் அவர் கூறுகிறார்: "வீட்டையும் இடிச்சுக் கட்டினாங்கள்; இப்ப எனக்கு இருக்கிற ஒரே முதுசம் இதுதான். எனக்கு விருப்பமில்ல.... நான் மாறமாட்டன்". எமது சூழலில் - சமூக வாழ்வு, அரசியல், பண்பாடு, வரலாறு முதலிய பல தளங்களில் - 'அடையாளம் பேணுதல்' அவசியமானது என்ற கருத்து, இங்கு மறைமுகக் குறியீடாகவும் அழுத்தமாக வெளிப்படுகிறது!

ஆ) மோட்டார் சைக்கிளை 'லீசிங்'கில் எடுத்த ஒருவர் பணம் கட்டாமல் ஒளித்துத் திரிவதைப் பற்றிய கிளைக்கதை, சமாந்தரமாக நகைச்சுவை என்ற பெயரில் சித்திரிக்கப்படுகிறது!


படத்தின் கதை நேர்கோட்டு முறையில் சொல்லப் படவில்லை. பங்குனி 12, பங்குனி 14, பங்குனி 1, பங்குனி 24, மாசி 28, பங்குனி 10, பங்குனி 26 எனத் திகதிகள் குறிக்கப்பட்டும் - சிலவேளை, அதற்குள்ளும் வேறு காலங்களில் நடைபெறும் நினைவுக் காட்சிகளாகவும் கதை சொல்லப்படுகிறது. ஒருவிதத்தில் பின்நவீனத்துவ நேர்கோடற்ற (nonlinear) வெளிப்பாடு போலுள்ளது. ஆயினும், நெறியாளர் பின்நவீனத்துவப் பிரக்ஞையுடன் இவ்வாறு செயற்பட்டதாகக் கூறமுடியாது. இந்த வெளிப்பாட்டுமுறை, பார்வையாளரிடம் சிறிது குழப்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பத்தை ஏற்படுத்தவும்கூடும். ஆனால், இரண்டாம்முறை பார்க்கும்போது தெளிவாக உணரமுடியும்.

திரைப்படத்தில் காட்சிப்படுத்தல் என்ற அம்சமே அடிப்படையானது. காட்சிரூப வெளிப்பாடு நன்றாக அமையாவிட்டால், எந்தப் படைப்பும் மதிப்பைப் பெறாது. இக்குறும்படத்தைப் பொறுத்தமட்டில், காட்சிப்படுத்தல் சிறப்பாக உள்ளது; பல நல்ல திரைச் சட்டங்களைக் காண முடிகிறது. சில உதாரணங்களைக் குறிப்பிடலாம்.

1. சிறுவனையும் சைக்கிளையும் ஏற்றியபடி மாட்டுவண்டி வருவதைக் காட்டும் தொலைவுக் காட்சி *(LS)*.

2. பங்குனி 14இல், சைக்கிளில் வந்தவருடன் சிதம்பரி கதைத்தலும் தனியே நடந்து வருவதுமான தொலைவுக் காட்சிகள்.

3. பங்குனி 1இல், சிதம்பரி சைக்கிளை உருட்டி வருதல், சைக்கிளை நிற்பாட்டிக் கல்லில் அமர்தல் ஆகியவற்றைக் காட்டும் தொலைவுக்காட்சி (பின்னணியில் காற்று ஊளையிடுவதான இயற்கை ஒலி, மேலும் உணர்வுத் தாக்கத்தைத் தருகிறது!).

பழைய நினைவுக்காட்சியாக மாட்டுவண்டிக் கிழவனையும் சிதம்பரியின் காதலியான இளம்பெண்ணையும் காட்டும் மத்திம *(MS)*/ தொலைவுக் காட்சிகள் *(LS)*. இளைஞனான சிதம்பரியின் அண்மைக்காட்சி *(CU)*. சிதம்பரியும் காதலியும் நடந்துசெல்லும் தொலைவுக் காட்சி.

4. மாசி 29இல், "பெரியவன் மோட்டார்ச் சைக்கிள் வாங்கித் தரப்போறானாம்" என்று மனைவி சொல்கிற போது, அதை நிராகரித்து, "உன்ர அண்ணன்மாரோட மல்லுக்கட்டி உன்னக் கொண்டுவந்த சைக்கிள்.....!" என்று சிதம்பரி சொல்லும்போது இருவரையும் காட்டும் மத்திம/ அண்மைக் காட்சிகள்.

5. பங்குனி 10இல், சைக்கிள் விற்கப்பட்டதை சிதம்பரி அறிந்த பின்னர், அவரையும் மனைவியையும் முகபாவங்களையும் காட்டும், மத்திம/அண்மைக் காட்சிகள்.

கமெராவைக் கையாண்ட சங்கர் பாராட்டுக் குரியவர்.

பாத்திரங்களைச் சித்திரித்த நடிகர்கள் பலரின் நடிப்பு இயல்பாகவும் பாராட்டும்படியாகவுமுள்ளது. முக்கியமாக, மையப் பாத்திரமாக வரும் தவசோதியின் (இவர், நாடகமும் அரங்கியலும் கற்பிக்கும் ஆசிரியரென அறிகிறேன்) நடிப்பு பொருத்தமாகவிருக்கிறது. அவரது அடங்கிய நடிப்பும் உணர்வு வெளிப்பாடுகளும் மனதில் பதிகின்றன. சிறிய பாத்திரமானாலும், மனைவியாக வரும் பகீரதியும் இயல்பாக நடித்துள்ளார். அவ்வாறே 'லீசிங்' நிறுவன ஊழியர்களாக வரும் இருவரது நடிப்பும். மாட்டுவண்டிக் கிழவன், சிதம்பரியின் காதலி, இளம்பருவ சிதம்பரி (ஜோசித்தன்) ஆகிய பாத்திரங்களின் நடிப்பும் இயல்பாகவுள்ளது. நகைச்சுவையாக நடிக்கும் இருவரதும் நாடகப்பாணி மிகைநடிப்பு எரிச்சலைத் தருகிறது!

காட்சிச் சித்திரிப்புகளுக்கு உணர்வுச் செறிவை ஊட்டும் வகையிலான ஆக்க இசையை, கற்பனைத் திறனுடன் அ.கேதீஸ் ஆக்கி அளித்துள்ளார்; படத் தொகுப்பினைச் செய்த ரமேஷ், மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களையும் பாராட்ட வேண்டும்.

இனி, குறைகளைப் பார்க்கலாம்.

நகைச்சுவைக்காக வலிந்து இணைக்கப்பட்ட கிளைக்கதை, குறும்படத்தின் மையக் கருவுடன் ஒட்டாமல் நிற்கிறது; படத்தின் முழுமைத் தன்மையையும் ஊறுபடுத்துகிறது! இந்தப் பகுதி கட்டாயம் நீக்கப்பட வேண்டும். ஆரம்பத்தில் எழுத்தோட்டத்தின்போது ஒலிக்கும் பாடல் இனிமையாக உள்ளபோதும் (ஜோசித்தன் எழுதியும் பாடியுமுள்ளார்), அது அவசியமானதல்ல. மேலும், அதில் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் பலவும், குறும்படத்தின் சித்திரிப்புகளுக்கு வெளியில் நிற்கின்றன! இவ்வாறுதான், படத்தின் இறுதியில் மீள ஒலிக்கும் சில பாடல் வரிகள், இறுதிக் காட்சியின் உணர்வுச் செறிவில் ஆழமாக ஒன்றிக்கும் பார்வையாளனின் மனநிலையைச் சிதைப்பனவாக உள்ளன. தென்னிந்தியத் தமிழ்த் தொலைக்காட்சி நாடகங்களினதும், குறும்படங்களினதும் இத்தகைய தாக்கங்களிலிருந்து, நமது படைப்பாளிகள் விடுபட வேண்டும். படத்தின் தலைப்பும் பொருத்தமான வேறொன்றாக இருந்திருக்க வேண்டும்; ஏனெனில், அப்பாவின் மிதிவண்டி என்று சுட்டிக்காட்டக்கூடிய பாத்திரமெதுவும், படத்தின் கட்டமைப்புக்குள் இல்லை.

எல்லாவற்றையும் தொகுத்துப் பார்க்கும்போது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டத்தக்க அம்சங்களே மிகையோங்கி நிற்கின்றன. குறைகளையும் மீறி, பாராட்டத்தக்க முயற்சியென இக் குறும்படம் அமைகிறது. குறும்படத் தயாரிப்பு, கதை, நெறியாள்கை, பாடல், நடிப்பு எனப் பல அம்சங்களைக் கையாண்ட ஜோசித்தனின் ஆர்வமும் முயற்சியும் ஆற்றலும் பாராட்டுக்குரியவை! திரைக்கதைப் பிரதியின்றிப் படத்தினை உருவாக்கியதாக, இறுதியில் பேசுகையில் அவர் தெரிவித்தார். ஒரு திரைப்பட உருவாக்கத்தில் திரைக்கதைப் பிரதியே அடிப்படையானது; இனிமேல், முறையான திரைக்கதைப் பிரதியுடன் குறும்படங்களைத் தயாரித்து, தனது திறமையை மேலும் அவர் வெளிக்காட்ட வேண்டு மென்று கேட்டு, இப்பதிவினை நிறைவு செய்கிறேன்!

## திரைப்பட நூல்கள்

நல்ல திரைப்படங்கள் உருவாக்கப்படுவதற்கு நல்ல இரசிகர்கள் உருவாக வேண்டும் என்று சொல்லப்படுவதை நாம் அறிவோம். நல்ல திரைப்பட இரசிகராவதற்கு நல்ல திரைப்படங்களை ஏராளமாய் பார்ப்பதுதான் அடிப்படையானது; அதைப்போலவே திரைப்படம் சம்பந்தமான நூல்கள், இதழ்களைப் படிப்பதும் துணை செய்யும். முகநூல், மற்றும் இணையத்தளங்களில் அவ்வப்போது பயனுள்ள கட்டுரைகள் வந்துகொண்டுமுள்ளன. தை மாதம் சென்னையில் நடைபெற்ற புத்தகத் திருவிழாவுக்குச் சென்றிருந்தேன். புதிதாகவும், ஏற்கெனவே வந்தவற்றின் மறுபதிப்பாகவும் திரைப்படம் பற்றிய நூல்கள் பல வந்திருப்பதைக் காண முடிந்தது. பொதுவான திரைப்பட இரசிகருக்கும் குறும்படப் படைப்பாளிகளுக்கும் உதவியாக அமையுமென்ற எண்ணத்தில், அவை பற்றிய தகவல்களை இங்கு தருகிறேன். புத்தகக் கடைகளிலோ, நூலகங்களிலோ இவற்றைத் தேடிப் பெற்றுப் படிப்பது நல்லது. திரைப்படக் கலாசாரம் என்பது நம்மிடையே நன்முறையில் வளர்ச்சி அடைய, 'பார்த்தலும் படித்தலும்' என்ற இரட்டைச் செயற்பாடு பரவலடைய வேண்டும்!

1. சினிமாக் கோட்பாடு - பேல பெலாஸ். உலகெங்கும் முக்கிய நூலாகக் கருதப்படுகிறது.
2. சினிமா: சட்டகமும் சாளரமும் - சொர்ணவேல். ஆவணப்படக் கோட்பாடுகள் மற்றும் முக்கிய திரை ஆளுமைகளைப் பற்றி விரிவாகப் பேசுகிறது.
3. மேதைகளின் குரல்கள் - ஜா.தீபா. கிம் கி துக், சத்யஜித் ரே, ரோமன் பொலன்ஸ்கி, தார்கோவ்ஸ்கி முதலிய உலகத் திரைப் பட மேதைகள் பதினைந்து பேரின் விரிவான நேர்காணல்கள்.
4. திரைப்பட மேதைகள் - எஸ்.ஆனந்த். பல்வேறு மொழித் திரைப் பட மேதைகள் பதினாறு பேரைப் பற்றிய விரிவான கட்டுரைகள்.
5. சினிமா என்ற பெயரில்.... - வெங்கட் சாமிநாதன். தமிழ் ஸ்டுடியோ இணையத்தில் தொடராக வந்த விரிவான கட்டுரைகளைக் கொண்ட நூல்
6. அசையும் படம் - சி.ஜே.ராஜ்குமார். சினிமா ஒளிப்பதிவுத் தொழில்நுட்பம் பற்றிய விரிவான நூல்.
7. பேசும் பொற்சித்திரம் - அம்ஷன்குமார்.
8. மாற்றுப் படங்களும் மாற்று சிந்தனைகளும் - அம்ஷன் குமார்.
9. சினிமா ரசனை - அம்ஷன் குமார்.
10. மீதி வெள்ளித்திரையில்.... - தியடோர் பாஸ்கரன்.
11. சொப்பன வாழ்வில் மகிழ்ந்தே - தியடோர் பாஸ்கரன்.
12. பாம்பின் கண் - தியடோர் பாஸ்கரன்.
13. புதிய அலை இயக்குநர்கள் - வெ.ஸ்ரீராம்.
14. அடூர் கோபாலகிருஷ்ணன் - ஆங்கிலத்தில்: கௌதமன் பாஸ்கரன். தமிழில்: ராணிமைந்தன்.
15. சினிமாவின் இரண்டாம் நூற்றாண்டு - எம்.சிவகுமார்.
16. உலக சினிமா ஓர் பார்வை - குகன்.
17. ரித்விக் கட்டக் - தமிழில்: சு.கிருஷ்ணமூர்த்தி.
18. சினிமா அனுபவம் - அடூர் கோபால கிருஷ்ணன் தமிழில்: சுகுமாரன்.
19. மாற்று சினிமா - கிராபியன் ப்ளாக்.
20. அயல் சினிமா - எஸ்.ராமகிருஷ்ணன்.
21. நிஜத்தின் உரைகல்லில் நிழல் சினிமா - கீழைக்காற்று வெளியீட்டகம்.
22. மூன்றாம்பிறை - மம்முட்டி.
23. பறவைக் கோணம் - எஸ்.ராமகிருஷ்ணன்.
24. நவீன கன்னட சினிமா - விட்டல்ராவ்.
25. நிகழ் திரை - அய்யனார் விஸ்வநாத்.
26. சாப்ளினுடன் பேசுங்கள் - எஸ்.ராமகிருஷ்ணன்.
27. புதிய ஈரானிய சினிமா - தொகுப்பு ச:.பி.
28. உலக சினிமா 1,2,3 பாகங்கள் - செழியன்.
29. தமிழ் சினிமாவில் பெண்கள் - விகடன் பிரசுரம்.
30. கதாநாயகனின் மரணம் - ராஜன்குறை.
31. நமக்கான சினிமா - மாரி மகேந்திரன்.
32. திரையும் அரங்கும்: கலைவெளியில் ஒரு பயணம் - அ.யேசுராசா.
33. திரையில் வரையப்பட்ட தமிழ்நிலம் - பிரேம்.
34. திராவிட சினிமா - இரா.பாவேந்தன், வீ.எம்.எஸ்.சுபகுணராஜன்.
35. இலங்கையின் கொலைக்களம்: ஆவணப்பட சாட்சியம் - யமுனா ராஜேந்திரன்.



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை தவிர நிழல், காட்சிப் பிழை, படப்பெட்டி முதலிய தீவிர சினிமா இதழ்களும் வருகின்றன! மந்திரச் சிமிழ், காலச்சுவடு, உயிர்மை, அம்ருதா, கனவு முதலிய சிற்றிதழ்களும் அவ்வப்போது திரைப்படம் பற்றிய பயனுள்ள கட்டுரைகளைக்கொண்டு வெளிவருகின்றன!


## பாலு மகேந்திரா



பாலு மகேந்திரா 13.02.2014இல், சென்னையில் காலமானார். ஈழம் தமிழ்த் திரை உலகுக்கு அளித்துப் பெருமைப்படும் இரண்டு முக்கிய படைப்பாளிகளில் ஒருவர் பாலு மகேந்திரா; மற்றவர் ஞானரதன் - இவர் ஏற்கெனவே மறைந்துவிட்டார். இருவரும் அறுபதுகளில் கொழும்பில் ஒரே அலுவலகத்தில் கடமைபார்த்தனர்; திரைப்பட ஈடுபாட்டில் கலைத்தரமான உலகத் திரைப்படங்களைப் பார்த்து இரசித்தனர் - கருத்துப் பரிமாறினர்; இலக்கிய ஈடுபாட்டில் இன்னும் சில நண்பர்களுடன் இணைந்து, 'தேனருவி' என்னும் இலக்கிய இதழையும் வெளியிட்டனர். ஞானரதனின் மறைவைப் போலவே இப்போது, பாலு மகேந்திராவின் மறைவும் பெரியதொரு வெற்றிடத்தை உருவாக்கியுள்ளது!

பாலு மகேந்திராவின் ஆற்றல் ஒளிப்பதிவுத் துறையிலேயே மிகுந்த வலிமையுடன் வெளிப்பட்டது. திரைப்படம் ஒரு காட்சிரூப ஊடகம் என்ற அடிப்படை அம்சத்தைத் தமிழ்த் திரைப்படத்துறையில் ஆழமாகப் பதித்தவர் அவர். அதனுடன் நில்லாது, ஹிந்தித் திரைப்படத்துறையில் கோவிந் நிஹலானியும் மலையாளத் திரைப்படத்துறையில் ஷாஜி எம். கருணும் ஒளிப்பதிவுத் துறையில் சாதனை புரிந்து பின்னர் சிறந்த நெறியாளராக மாறியதைப் போல, அவரும் மாறினார். சந்தியாராகம், அழியாத கோலங்கள், வீடு முதலியவை அவரை ஒரு சிறந்த நெறியாளராக வெளிக்காட்டின (இறுதியாக வந்த 'தலைமுறைகள்' திரைப்படமும் விமர்சகர்களால் விதந்தோதப்படுகிறது!; ஆனால், அதைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை.). தனது படைப்பாற்றலினால் ஐந்துமுறை இந்திய திரைப்படத்துறையில் தேசிய விருதுகளை வென்று, தமிழ் மக்களை அவர் பெருமைப் படுத்தினார். கதை நேரம் என்ற தலைப்பில், ஐம்பத்திரண்டு சிறந்த தமிழ்ச் சிறுகதைகளைக் குறும்படங்களாகப் படைத்துள்ளார்; அவற்றில் பல, முன்மாதிரியாகக் கொள்ளத்தக்க குறும்படங்களாகும்! புதிய தலைமுறை இளைஞர் பலரைப் படைப்பாளுமை கொண்டவர்களாக உருவாக்கத் தனது சினிமாப் பயிற்சிப் பட்டறைமூலம் உழைத்தமையும், மதிப்புடன் நினைவுகூரத்தக்க செயற் பாடாகும்!

அவருடன் உரையாட இரண்டு தடவைகள் எனக்கு வாய்ப்புக் கிட்டியது. 1970ஆம் ஆண்டளவில், புனே திரைப்பட - தொலைக்காட்சி நிறுவனத்தில் பயின்று இலங்கை திரும்பியிருந்தபோது, வெள்ளவத்தை சவோய் திரையரங்கில், *A view from the fort* என்னும் குறும்படத்தை அழைக்கப்பட்டவர்களுக்காகக் காட்டினார். புனேயில் பயின்றபோது இறுதிப் பரீட்சைக்காக அவர் ஒளிப்பதிவு செய்த படமே அது; அதற்காகத் தங்கப்பதக்கத்தையும் அங்கு பரிசாகப் பெற்றார். அக்காலத்தில் நாங்கள் இணைந்து இயங்கிய, 'கொழும்பு கலை இலக்கிய நண்பர் கழகத்'துக்குப் பத்து அழைப்பிதழ்கள் கிடைத்ததில், நண்பர்களுடன் சென்றிருந்தேன். கே.எஸ்.சிவகுமாரன் பாலு மகேந்திராவின் நண்பர்; காட்சி தொடங்கு முன்னர் எங்களில் சிலரை அவருக்கு அறிமுகப்படுத்தினார். நான் கதைக்கும்போது, "தமிழில் காத்திரமான திரைப்பட நூலெதுவும் இல்லை; சிங்களத்தில் பல நூல்கள் உண்டு. நீங்கள் ஏன் அப்படியான நூலைத் தமிழில் எழுதக் கூடாது?" என்று கேட்டேன். அவ்வாறான நூலை எழுதும் எண்ணம் இருப்பதாகப் பதில் சொன்னார். அதன் பிறகு, கொழும்பில் இலங்கைத் திரைப்பட விமர்சகர் பத்திரிகையாளர் சங்கம் (FCJAC) ஒழுங்குசெய்த உலகத் திரைப்பட விழா பற்றிய அவரது விமர்சனத்தை, இலங்கை வானொலியில் 'கலைக்கோலம்' நிகழ்ச்சியில் கேட்ட நினைவும் இருக்கிறது.



2011 ஆனி மாதம், 'சுந்தர ராமசாமி - 80' கருத்தரங்குக்காகக் கன்னியாகுமரி சென்றுவிட்டு, சென்னையில் ஒரு கிழமை தங்கியிருந்தேன். அவ்வேளை, பாலு மகேந்திராவுடன் நெருங்கிய தொடர்பை வைத்திருந்த நண்பர் சோமீதரன், அவரைச் சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்தினார்; 15 நிமிடங்களை அவர் எங்களுக்காக ஒதுக்கியிருந்தார். நானும் சோமீதரனும் ஒளிப்பதிவாளரான அவரது நண்பரும், சாலிக்கிராமத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


யுள்ள பாலு மகேந்திராவின் சினிமாப் பயிற்சிப் பட்டறைக்குச் சென்றோம். சோமீதரன் எனது கலை இலக்கியச் செயற்பாடுகள் பற்றிச் சிறிய அறிமுகத்தைச் செய்தார். எளிமையாக எம்முடன் உரையாடினார். நான், எழுபதுகளில் அவரைக் கொழும்பில் சந்தித்தது பற்றியும், அவரது நண்பர் ஞானரதனின் முகங்கள், காற்றுவெளி, நேற்று ஆகிய படங்களின் முக்கியத்துவம் பற்றியும், நிதர்சனம் அமைப்பின் மூலம் இளம் திரைப்படப் படைப்பாளிகள் பலரை உருவாக்கியளித்த அவரது சிறப்பான பங்களிப்பையும் விவரமாக விளக்கியபோது, நெகிழ்ச்சியுடன் அவற்றை உள்வாங்கினார்; பேராசிரியர் இரா.சிவச்சந்திரனின் ஒழுங்கமைப்பில் யாழ்.பல்கலைக் கழகத்தில் இயங்கிய திரைப்படக் கழகத்தில், கதை நேரம் நிகழ்ச்சியில் இடம்பெற்ற ஒன்பது குறும்படங்களைக் காட்டி நாங்கள் உரையாடியமையையும் தெரிவித்தேன். ஈழத்தின் இலக்கிய, அரசியல் சூழல் பற்றியும் உரையாடல் தொடர்ந்தது. ஈழத்து நூல்களில் ஆர்வம் காட்டினார்; தனக்குப் பல நூல்கள் கிடைப்பதில்லை என்ற கவலையையும் தெரிவித்தார். அவரிடம் சிறந்த புத்தகச் சேகரிப்பு உள்ளது; நாங்கள் கதைத்துக்கொண்டிருந்த அறையின் அலுமாரியில் ஏராளம் புத்தகங்களைக் காண முடிந்தது.

பின்னர் 'நம்பிக்கை' என்ற தனது குறும்படத்தைத் திரையிட்டு, அருகில் அமர்ந்து தானும் பார்த்தார். வாஸந்தி எழுதிய சிறுகதைதான் அந்தக் குறும்படம். காலையில் வெளியே சென்று வீட்டுக்குத் திரும்பிவராத - கல்லூரியில் கற்றுக்கொண்டே மாலையில் புத்தகக் கடையில் பகுதிநேர வேலை பார்க்கும் - ஓர் இளைஞனுக்காகப் பதற்றத்துடனும் துயருடனும் காத்திருக்கும் தாயையும் இரண்டு சகோதரிகளையும், அது சித்திரிக்கிறது. தொலைவிலுள்ள இடமொன்றில் நடைபெற்ற குண்டுவெடிப்பில் ஈடுபட்ட தீவிரவாதிகளுடன் அவனுக்குத் தொடர்பிருப்பதாக, காவல்துறை சந்தேகிக்கிறது; அவனது பெயரில் கோப்பு ஒன்று 'கியூ பிறாஞ்ச்' சில் திறக்கப்பட்டிருப்பதாகவும் காவல்துறை ஆய்வாளர் அவனது அக்காவிடம் சொல்லுகிறார். 'அன்றிலிருந்து ஆறு மாதங்கள் கழிந்தும் அவன் திரும்பிவரவில்லை' என, இறுதியில் எழுத்தில் காட்டப்படுகின்றது. கதை நிகழும் களம் சென்னை; ஆயினும், இலங்கை நிலைவரத்தை வெளிப்படுத்துவதே தனது நோக்கம் என, அவர் குறிப்பிட்டதாகவும் நினைவு. முதலில் பதினைந்து நிமிடங்களை மட்டுமே ஒதுக்கியவர், பிறகு சுமார் ஒன்றரை மணித்தியாலத்தை எம்முடன் கழித்தார்!; தனது ஆறு குறும்படங்களைக் கொண்ட இரண்டு DVDகளையும் எனக்கு அன்பளிப்பாகத் தந்தார். மகிழ்வுடன் நன்றி கூறி விடைபெற்றோம்.

ஆனால் இன்றோ, இழப்புணர்வின் துயருடன் அவருக்குப் பிரியாவிடை கூறி நிற்கிறோம்!

## கலைஞனைப் புரிந்துகொள்ளல்

ஜா.தீபாவின் மொழி பெயர்ப்பில், உலகத் திரைப்பட நெறியாளர் பதினைந்து பேரின் நேர்காணல்களைக் கொண்டதான, 'மேதைகளின் குரல்கள்' நூலிலிருந்து, நெறியாளர் ஐவரின் கருத்துக்களின் சில பகுதிகளை இங்கு தருகிறேன். படைப்பாளிகளின் நேர்காணல்களை நான் எப்போதும் விருப்பத்துடன் படிப்பது வழக்கம்; அவர்களின் கருத்துலகையும், படைப்புச் செயற்பாட்டையும் புரிந்து கொள்வதற்குத் துணை செய்பவை அவை.




**சத்யஜித் ரே** *(இந்தியா)*

**1. உங்கள் படத்தின் பெண் கதாபாத்திரங்கள் வலுவானவர்களாக இருக்கின்றனர். வங்காளத்தினுடைய சமூக வரலாற்றின் பாதிப்பா இது?**

○ நான் எந்தக் கதையைப் படமாக எடுக்கிறேனோ அந்தப் படத்தின் எழுத்தாளரின் 'பார்வை'யைத்தான் நான் சார்ந்திருக்கிறேன். தாகூரும், பக்கிம்சந்திரரும் உறுதியான பெண் கதாபாத்திரங்களையே படைப்பார்கள். பெண்களிடம் எனக்கு இருக்கிற தனிப்பட்ட அனுபவங்களும், எண்ணங்களும்கூட இதில் பிரதிபலிக்கின்றது.

அவர்கள் உடலளவில் ஆண்களைப் போல உறுதியானவர்கள் இல்லையென்றாலும், இயற்கை அவர்களுக்கு அதனை ஈடுகட்டிவிடுகிறது. எல்லாப் பெண்களையும் பற்றி நான் சொல்லவில்லை. என்னை ஈர்த்த பெண்களை மட்டுமே சொல்கிறேன். என்னுடைய படங்களில் வருகிற பெண்கள் ஆண்களைக் காட்டிலும் சூழலை லாவகமாகக் கையாள்பவர்கள்.

**2. இந்திய அரசியல் சூழலில் ஒரு திரைப்பட இயக்குநரின் பங்கு, செயல்படுவதா அல்லது பார்வையாளனாக இருப்பதா?**

○ *'The Kingdom of Diamonds' (Hirok rajar Deshe)* படம் பார்த்தீர்களா? அதில் ஏழைகளை அவர்கள் இடங்களிலிருந்து அப்புறப்படுத்துகிற காட்சி ஒன்று இருக்கும். இந்திராகாந்தியின் ஆட்சியின்போது டெல்லியிலும் மற்ற நகரங்களிலும் நடைபெற்றதின் நேரடியான பாதிப்புத்தான் இது. சமகாலக் கதைகளைக் கையாளும்போது ஒரு கட்டத்திற்கு மேல் வெளிப்படையாகச் சொல்ல முடியாது. அதிகாரத்தில் உள்ளவர்களை நேரடியாக தாக்க முடியாது. *'The Story of Chair'* படத்தில் இதை முயற்சித்தேன். என்ன நடந்தது? முழுப்படமும் வீணானது. என்ன செய்ய முடியும் எங்களால்? சுற்றி நடக்கிற பிரச்சனைகள் தெரியும். ஆனாலும் எதற்கும் எல்லை இருக்கிறது. அதைத் தாண்டி நம்மால் போக முடியாது.

**ஜாஃபர் பனாஹி** *(ஈரான்)*

**1. தேசபக்தி, கடமை, கௌரவம் இவைதான் உங்களது படத்தின் மையமாக இருக்கின்றன. இதில் பாராட்டப்பட வேண்டியது, இவற்றை இளைய தலைமுறையினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சத்யஜித் ரே



மார்ட்டின் ஸ்கோர்சிஸ

**வழியாகவே வலியுறுத்துகிறீர்கள்....**

○ ஈரானிய மக்கள் தங்களது தேசிய அடையாளத்தை நோக்கித் திரும்பவேண்டும் என நினைக்கின்றனர். தங்களுக்கென்று நீண்டதொரு வரலாறு இருக்கிறதென்றும், அதில் பெருமைப்படுவதற்குக் காரணங்கள் இருக்கிறதெனவும் சொல்வதற்கு விரும்புகின்றனர். அதன் மூலமாகத் தங்களை ஒரு நாகரிகமான மக்கள் என்றும் சொல்லிக்கொள்ள முனைகிறார்கள்.

**2. மக்களிடம் ஒரு தாக்கத்தை உண்டுபண்ண உங்களுக்குக் கலை தேவைப்படுகிறது இல்லையா?**

○ கலைகள் எப்போதுமே உடனடித் தாக்கத்தை மக்களிடம் ஏற்படுத்தாது. ஒரு கலைக்கு அத்தனை சக்தி இருந்தால், அது மக்களை அணுகிய அடுத்த கணமே சமூக சிந்தனையை மக்களிடம் ஏற்படுத்தி இருக்க முடியும். எந்த மனிதருக்குக் கலைகள் வேண்டுமோ, அவர்களைத்தான் அது போய்ச் சேருகிறது. கொடுத்துப் பெறுகிற பரிமாற்றம்தான் இது. சமூகத்திற்குக் கலை மற்றும் கலைஞனின் தாகம் தேவைப்படுமென்றால், அது தானாகவே நடந்துவிடும்.

**கிம் கி துக்** (கொரியா)

***1. தத்துவம் என்பது உங்கள் படங்களைப் பாதிக்கிறதா? உங்கள் படங்களில் உள்ள கடவுள் என்ன பங்களிப்பைச் செய்கிறார்?***

○ நாம் கண்களால் பார்க்கவும், உணரவும் முடிகிற இயற்கைதான் கடவுள். இயற்கை என்பது பிரமாண்டமானது. அதற்குள் கணக்கு, அறிவியல், தத்துவம், விஞ்ஞானம் என எல்லாமே இருக்கிறது. மனிதம், அன்பு இவை மட்டும்தான் உண்மையானது. வாழ்க்கையின் தேடல், கடவுள் என்பது தனியாக இல்லை எனத் தெரியவரும்போதுதான் முடிவுக்கு வருகிறது.


**2. மாயக் கற்பனைகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

○ ..... என் குழந்தைப் பருவத்தில் மிஷன் பள்ளியில் படித்தேன். அங்கு எனக்கு மூளைச்சலவை செய்யப்பட்டது. கிறித்தவ மனநிலையில் இருந்து வெளியேற மிகவும் பிரயத்தனப்பட்டேன். முடிவில் அது நிகழ்ந்தது. அதில் இருந்து வெளியேறியதன் பின்புதான் தெரிந்தது, கிறித்தவ மதிப்பீடுகள் முக்கியமானது என்பது. என்னைச் சுற்றி அவர்கள் இருந்தபோது அவர்களைப் பின்பற்றுவது கடினமாக இருந்தது. கஷ்டமான சிக்கல்கள் ஒருவர் வாழ்க்கையில் தொடர்ந்தபடி இருந்தால், மாயக் கற்பனைகளால் ஆன உலகில் வாழ்வது என்பது சிறிதளவாவது ஆறுதல் தரும்.

**டேவிட் லீன்** (இங்கிலாந்து)

***1. உங்களுக்குள் இருக்கும் இயக்குநர் எப்போது திருப்தியடைவார்?***

○ எனக்குள் ஒரு பயம் இருந்துகொண்டே இருக்கும். பயம் என்பதை அப்படியே அர்த்தம் எடுத்துக் கொள்ள முடியாது. என்னால் எதைச் சிறப்பாகச் செய்ய முடியுமோ அதை நான் விட்டுக்கொடுக்கவே மாட்டேன். அதற்காக ஒரே ஒரு ஷாட்டுக்காக என்னால் ஆறு நாட்களெல்லாம் வீணாக்க முடியாது. அதே போல் ஸ்க்ரிப்ட் இல்லாமல் படம் பிடிக்கப் போவதையும் நினைத்துப்பார்க்க முடியாது. ஏனென்றால் எது சிறப்பாகச் செய்யவேண்டியிருக்குமோ அவற்றையெல்லாம் ஸ்க்ரிப்ட்டில் எழுதி திருப்தியடைந்த பிறகே, அதைப் படமாக எடுக்கிறேன். ஸ்க்ரிப்ட்டில் உள்ளவையை அப்படியே காட்சிக்குக் கொண்டுவருவது எனது பொறுப்பு மட்டுமே. என்னுடைய 'பெஸ்ட்' எதுவோ அதைச் செய்வதுதான்



ஜாஃபர் பனாஹி



டேவிட் லீன்



கிம் கி துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு நிறைவு.

**மார்ட்டின் ஸ்கோர்சிஸ்** (அமெரிக்கா)

**1. உங்கள் படங்கள் பெரும்பாலும் நீதிகேட்ட மனிதர்களைப் பற்றியும் பாதுகாப்பற்ற பெண்களைப் பற்றியுமே அதிகம் சித்திரிக்கின்றன. அதே நேரத்தில் வன்முறையையும் அதிகம் சார்ந்திருக்கிறது. இதை நீங்கள் உணருகிறீர்களா?**

○ மார்ட்டின் ஸ்கோர்சிஸ் படங்கள் என்றதும் மக்கள் என்ன நினைப்பார்களோ அதையேதான் கேள்வியாகக் கேட்டிருக்கிறீர்கள். வன்முறைக்கு நான் ஆதரவாளன் கிடையாது. '*Mean street*' படத்தில் கணவனால் தொடர்ந்து வன்முறைக்கு ஆளாகும் பெண், அவனை விட்டு வெளியேறுவதாகக் காட்சி இருக்கிறது.

ஒரு மனிதன் தொடர்ந்து சமூகத்தால், சுற்றி உள்ளவர்களால் தாக்கப்படும்போது, வேறு வழியில்லாமல் பதில் சொல்வதற்கு அவன் வன்முறையையே கையில் எடுக்க முடியும். '*Raging Bull*' படத்திலும்கூட மையச் சரடு அதுதான்.....

**2. உங்கள் படங்களில் நீங்கள் பெருமைப்படுகிற படம் எது?**

○ எனக்கு '*Last Temptation of Christ*' படம் பிடிக்கும். அதனுடைய கருத்து, நடிகர்களின் பங்களிப்பு, இசை என எல்லாமே எனக்கு அதில் பிடித்திருந்தது.

**3. இயேசுவை மேலும் தெரிந்துகொள்ளவேண்டி அந்தப் படம் எடுத்ததாகச் சொல்லுகிறீர்களா?**

○ ஆமாம். ஆனால் தெரிந்துகொள்ளவேண்டிய அவசியம் இல்லை. இயேசுவின் செய்திகளின்படி வாழ்வது எனக்குப் பிடித்திருக்கிறது. அதுதான் மிகுந்த சிரமமானது. நம்மால் அப்படி வாழ்ந்துவிட முடியுமா? அப்படி முடியவில்லை என்றால், நமது தோல்வியை நாம் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். ■

*15.02.2014*

---

## சொல்லியும்...

சொல்ல வேண்டியதில்
சொல்லப்பட்டது போக
சொல்லப்படாமலே கிடப்பவை அதிகம்...
சொல்லப் படாததில்
சொல்ல விரும்புவதையேனும்
சொல்லி விட முனைந்து
சொல்லித் திரும்புகையில்
... இன்னமும்
சொல்லப்படாமலே
இருப்பதற்குள் தான்
சொல்லப்பட வேண்டியவை
புதைந்து கிடப்பது தெரியவரும்...
... மீதியையும்
சொல்லி விடத்
தவித்துத் தவித்துச்...
சொல்ல வர...
வார்த்தைகளை
முடமாக்கி
நகரும் காலம்!
சொல்லியும் சொல்லாமல்
உறைந்தவை ஒருபுறம்
சொல்லாமல் சொல்லி
முடிந்தவை ஒரு புறம்...
எப்படியோ
சொல்லப்படாமலே...
போகிறவைகளின்
பெருஞ்சுமையுடனேயே
பயணம் தொடர்ந்து...
முடிந்தும் போகிறது
பலருக்கு...

**ந. சத்தியபாலன்**

---

## கிளிநொச்சி
## மத்திய மகா வித்தியாலயத்தின்
## 'பேரிகை' செய்திமடல்




பாடசாலைகளில் இருந்து வெளிவரும் சஞ்சிகைகளின் வரிசையில் புதிய வரவாக கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் இருந்து 'பேரிகை' என்னும் செய்திமடல் A4 அளவில் 12 பக்கங்களில் வெளிவந்துள்ளது.

மாணவர்களின் எழுத்தாக்கத் திறனை வெளிப்படுத்தும் களமாகவும், கல்லூரியின் நிகழ்வுகளை ஆவணப்படுத்தும் நோக்குடனும் வெளிவர ஆரம்பித்துள்ள 'பேரிகை' இதழின் ஆசிரியராக பாடசாலையின் ஆசிரியர் ந.குகபரன் விளங்குகின்றார்.

பாடசாலை மாணவர்களின் எழுத்தாற்றலை வளர்ப்பதற்கு இதுபோன்ற இதழ்கள் பெரும் பங்காற்றும் என்பது திண்ணம். எனினும், ஏற்கெனவே, இதுபோன்ற இதழ்களை வெளியிட்ட பல பாடசாலைகளில் இம்முயற்சி இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளமை ஏமாற்றம் தருகின்ற விடயமாகவே உள்ளது. 'பேரிகை' இதழும் இந்த வகைக்குள் அடங்கிவிடாது தொடர்ந்து வெளிவரும் என நம்புகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு கவிதைகள் — யாத்ரிகன்

## வலியின் பொருள்



வலியின் வரிகளை
மொழிபெயர்க்க
திராணியற்று
திரும்புகிறது காற்று...
துயர மொழிகளில்
வியாபித்திருக்கும் கடைசி
இரவின் பாடலாய்...
நீள்கிறது காலம்...

வாழ்தலுக்கும்...
சாதலுக்கும்...
இடையில் நீளும்
துயரத்தின் பாடலுக்கு
யாரோ இசையமைக்கிறார்கள்...
ஒட்டாத வரிகளுக்கு
மெட்டமைக்க வற்புறுத்துகிறது
மௌனமாய் கரையும் வெளி...

வற்றிய குளத்தின்
கானல் நீரில்...
ஏமாந்த விழிகளுடன்
கடைசிக் கண்ணீரையும்
விட்டாயிற்று...

மௌனமாய்
மிக மௌனமாய்
சொற்களுக்குள்ளிருக்கும்
வலிகளை மொழிபெயர்க்க
திராணியற்று
மீண்டும் திரும்புகிறது
காற்று

## கலைந்து கலந்து கலந்து கலையும் வர்ணம்

அழகிய சித்திரங்களில்
பொழிகிறது மேகம்..

விழுகின்ற நீர்த்துளிகள்
சித்திரத்தின் மேல்
நிறம் மாறிய சூரியனாய்
உதிக்கிறது..
ஆங்காங்கே
கருமை மென்மை
கலந்த வர்ணங்களாய்...
சித்திரங்கள் ஊமையாகிப் போன
ஒரு பாடலைப் போல
மௌனித்திருக்கின்றன..
தன்னின் மீதான
ஒவ்வொரு அலங்கோலங்களும்
வார்த்தைகளால்
அலங்கரிக்கப்பட்டிருப்பதை எண்ணி...
இன்னுமின்னும்
நிறைய சூரியன்கள்
உதிக்கலாம்
சித்திரத்தில்.
உருமாறி...
நிறம்மாறி...
விகாரமாகி...
கோரமாகி...

சித்திரத்தின் விடியலுக்காய்
சூரியன்கள் உதிப்பதாய்
சொல்லப்படுகிறது.

நீர்ச்சூரியன்களால்
கரைந்தளிக்கின்றது
சித்திரத்தின் வானம்...
சித்திரம் சலனமின்றி
ஊமையாகிப் போன
ஒரு பாடலைப் போல
மௌனித்திருக்கின்றது,
அலங்கோலங்களை வார்த்தைகளால்
அழகுபடுத்த சூரியன்கள்
உதிக்கலாம்...
எனும் விரக்தியுடன்...

சித்திரம் வெறுமையாயிருக்க
வர்ணங்கள் கரைந்தளிகின்றன
சூரியனற்ற வானம் போல...






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு கவிதைகள்

கிரிஷாந்



## மலர்தல்

* எத்தனை தடவை திறந்தாலும்
கண்களுக்குச் சூரியன்
புதுக் குழந்தை
எத்தனை முறை மூடினாலும்
இரவுக்கோ
கதவுகள் இல்லை.

* எந்த ஒரு ரோஜாவையோ அல்லது
பனியையோ
பறித்து விடும் கைகள் தான்
எத்தனை கொடூரமானவை.

* முதலாவது பறவை பாடத் தொடங்கும்போது
பாடுவது
முழுப் பறத்தலும் - அன்பே,
முதலாவது கண் திறக்கும்போது
திறந்து கொள்வது
முழு வானமும்.

* எனினும்
நாம் விட்டுப் போகலாம்
எந்த இடைவெளியையும்
எத்தனை முறையும்.

* என்ன சொல்வேன்,
இதயத்தை விரித்தால்
எல்லா மலரிலும் ஒரே வாசனை.

## ஒளியில்லாக் காடுகளை காதலிக்கும் வனதேவதைக்கு

உனது எல்லைகளுக்குள்
மரங்கள் குழந்தைகளாயிருக்கின்றனர் - அதனால்
மனிதர்கள் வெட்கத்துடன்
உள்ளே நுழைவதில்லை.

உனது தாய்மையின் தகிப்பில் - காடு
நிம்மதியாக உறங்குகிறது
அதன் சப்தங்கள் அதன் எல்லையைத்
தொடுகின்றன
அதன் பனிப் பொழிவுகள்
மலர்களை அவிழ்க்கின்றன.

உனது காட்டில் மட்டும் -
ஆறுகளின் கதவுகள் எங்கும்
அடைத்துக் கொள்வதில்லை
பூக்களின் மகரந்தங்கள்
எதிலும் சிதறுவதில்லை.

நீ பறவைகளின் சரணாலயமாய்
கிடக்கின்றாய்
உனது காடே, காதலில் மிதக்கின்றது
அதன் வாசல்களை
யாரும் கடந்தால், செல்தலுமில்லை
திரும்புதலுமில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# தூர்கதை

திசேரா

சார்ல்ஸ் ஜக்சன் என்ற
ஒற்றைக் காலுடைந்த மாபெரும் இசைக் கலைஞனின்
வேதாகம ஒத்த வாக்கிய விளக்கவுரை
கிழக்கு வானில் உதித்த
வெள்ளைக் குதிரையால் எடுத்துச் செல்லப்பட்டது.
அன்று தொடக்கம்
தூக்கம் களவாடப்பட்ட மனநிலை பீடிக்க
முழுப்பித்தும் பிடித்தவனாய் இருந்தான்.

**பெரும் மழைப்பற்றான நாள் முக்கால் பகுதி முடிவுற்ற போதும் இன்னமும் விழிப்பாக இருந்தது. மறு நாளின் முதல் கணம் புதிய ஆண்டின் முதல் கணமுமாய் போனதால் கந்தகம் பிசுபிசுக்க இரவு பெரும்பாலும் குடைக்குள்ளும் கொஞ்சம் நனைந்தும் இயங்கிக்கொண்டே இருந்தது.**

சார்ல்ஸ் ஜக்சன் 1984இல் பிறக்க நேரிட்டது குறித்து அவனுக்கு எதுவும் தெரியாமல் இருந்தது. 83ஆம் ஆண்டு பிறந்திருக்க வேண்டியவன் அவன் தாயின் பொறுமையினால் ஓராண்டு தாமதமானான். (ஓராண்டென்பது ஒரு கணத்தின் மாற்றம்தான்) சிலவேளை சாபமிடப்பட்ட அந்த ஆண்டு தனக்கு வேண்டாமென அவனே கூட நினைத்திருக்கலாம்.

முலைப்பால் மட்டும் கொடுக்கக் கூடிய நிலையில் இருந்தவள் பால் சுரப்பெடுக்காமல் தின்ன எதுவுமின்றி சேமன் கிழங்கை அல்லது மரவள்ளிக் கிழங்கை அவித்துத் தின்ன பச்சை மிளகாயுடன், புளிச்சக்கீரை சேர்ந்த சம்பல் பெரிதும் சேர்மானமானது. அரிசிக்கும், தானியங்களுக்கும் பெரும் பஞ்சம் நிலவியது. அந்தக் காலப்பகுதியில் கொண்டு வரப்பட்டிருந்த சட்டங்கள் உள் நாட்டை வாழ வைக்க நினைத்தாலும் நாடு காய்ந்துதான் கிடந்தது. எங்களுடையதை எங்களை யாரும் மதிக்காத - மதிக்கக் கூடாத எண்ணங்கள் விதைக்கப்பட்டு வேரூன்றி இருந்தது. கடலுணுவுகள் கிடைக்கக் கூடிய பிரதேசத்தில் அவன் பிறந்திராமையால் என்புகள் உறுதியற்றதாய் மட்டுமன்றி சதைப்பற்றுக் குறைந்ததாகவுமே இருந்தது. ஆனாலும் அவன் பெயர் காற்றில் கொழுத்த முகத்தைப் பதித்துக் கொண்டு அலைந்தது. பாறைகளும் மூங்கிலும் அவனை நினைத்துக் கொண்டே இருந்தன. அவனின் தாய் - முகத்தின் சுற்றளவான தொங்கிக் கொண்டிருந்த கயிற்றை முன்னால் கண்டு கொண்டே இருந்தாள்.

அவன் பிறந்திருக்க வேண்டிய ஆண்டில் தான் அவனின் தந்தை கொல்லப்பட்டான். அப்பாவித் தனத்தைப் போர்த்தியிருந்தவன் தலை நகரமான கொழும்பில் புடைவைக் கடையில் விற்பனையாளனாய் நிறைந்த அனுபவத்தில் முற்றி விற்பனை முகாமையாளனாய் பிரதான வீதியில் இரண்டடுக்கில் கடல் பார்த்து நீண்டிருந்த அதன் பின்புறம் பாங்ஷால் வீதியில் முடிந்த கட்டடத்தின் மேல் மாடியின் அறையொன்றில் தங்கியிருந்தவன் அந் நாட்களில் ஏற்பட்டிருந்த இனக் கலவரத்தினால் பாண் வாங்கச் சென்றிருந்த போது டயர் மூட்டி கிடையாக படுக்க வைத்துக் கொதித்துக் கொண்டிருந்த தார்ப் பீப்பாவினுள் தலை அமிழ்த்தப்பட்டு கறுப்பாய் படர்ந்த முகத்துடன் அவிந்து செத்துப் போனான். அந்த வேதனையின் நிழலில் தற்கொலை பண்ணிச் சாகலாம் என்ற முடிவை எடுத்த மார்க்கிரட் மேரி வயிற்றினுள் குழந்தையின் துடிப்பை உணர்ந்து மனதை மாற்றிக் கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் மழைப்பற்றான நாள் முக்கால் பகுதி முடிவுற்ற போதும் இன்னமும் விழிப்பாக இருந்தது. மறு நாளின் முதல் கணம் புதிய ஆண்டின் முதல் கணமுமாய் போனதால் கந்தகம் பிசுபிசுக்க இரவு பெரும்பாலும் குடைக்குள்ளும் கொஞ்சம் நனைந்தும் இயங்கிக் கொண்டே இருந்தது. பற்களை இறுக்கி தாங்கு திறனின் எல்லையை அடைந்திருந்த மார்க்கிரட்மேரி வலி தாங்கவொண்ணாமல் வாய்விட்டுக் கதற அவளது சகோதரி இசபெல்லா அருகில் சென்று ஆறுதலுக்காக தலைக்குள் விரல்களை நுழைத்தாள். பொறுமைக்குள் நகர்ந்த முனகலுடன் சகதி கலந்த நீரில் வழுக்கிய வாகனம் வைத்திய சாலையின் முன்னால் கால்கள் புதைய உறுமிக் கிடந்தது. இசபெல்லா துணைக்கு வந்திருந்த லூர்துவுடன் சேர்ந்து மார்க்கிரட் மேரியை பலவண்ணக் குடையின் கீழ் கைத்தாங்கலில் பாதி தூக்கிய வண்ணம் வெண் போர்வையிடப்பட்டிருந்த

மெத்தையில் சாய்க்கவும்,

வானம் வெடித்துச் சிதறவும்

மார்க்கிரட் மேரி கீரிட்டுக் கத்தவும்

தாதி ஓடிவரவும்

வைத்தியர் வந்து சேரவும் - கணத்தின் சமாந்தரக் கோடுகளாய் நீள சார்லஸ் ஜக்சனின் பிறப்பு 01.01.1984 எனவும் நேரம் 00.10 மு.ப எனவும் பதியப்பட்டது.

மார்க்கிரட் மேரி அவனை இறக்கிவிட்டு வலிதனை சுமப்பவளானாள். இதுவரை மீளாதவலி அவளைப் பற்றிக் கொண்டு மூடி மறைத்தது. விரல் சூப்பும் பழக்கம் சார்ல்ஸ் ஜக்சனிடம் நிறைந்து போக காலை இழுத்து பெருவிரலை வாய்க்குள் வைக்கும் போதும், குப்புற புரண்டு தான் மூத்திரமடித்த துணியை அவனே வாய்க்குள் திணித்து உறிஞ்சுவதையும் கண்ட மார்க்கிரட் மேரி இயலாமையின் விளிம்பில் தற்கொலை செய்யலாம் என எண்ணிக் கொண்டிருந்தாள். கண்கள் கலங்கி வழிந்த துளி தடவிய விரல்களை இழுத்து வாய்க்குள் வைத்துச் சப்பும் சார்ல்ஸ் ஜக்சனை மாருடன் இறுக்கிக் கொண்டு அவனுக்காக வாழ்வதாக முடிவை மாற்றிக் கொண்டாள்.

இப்படித்தான் இன்னுமொரு நாளும் அவள் இந்த முடிவுக்கு வந்தாள்.

எட்டு வயதான சார்ல்ஸ் ஜக்சன் அவனது கூட்டாளிகளாகிப் போன அதே லயத்திலேயே இருக்கின்ற போலுடனும், கமலுடனும் சேர்ந்து கொண்டு துண்டு பீடிகளைப் பொறுக்கிச் சென்று நெத்திக்கானில் ஒழித்திருந்து பற்ற வைத்திருக்கிறார்கள். அப்போது சார்ல்ஸ் ஜக்சனின் கைகளில் பலகைத் துண்டில் செமன்டின் அடித்து - வரிசையான ஆணிகளில் கம்பி இழுத்துக் கட்டப்பட்டிருந்த நரம்பு இசைக்கருவி இருந்திருக்கின்றது. அவன் பீடித்துண்டை புகைத்தானா என்பது பற்றி தெரியாவிட்டாலும் - அவன் இல்லையென்றே வாதிட்டான். தனக்கு ஆசிரியர் கத்தும் கூப்பாட்டைவிட நரம்புகள் எழுப்பும் இசை காதுகளை குளிரப்பண்ணுவதாலேயே தான் பாடசாலைக்குப் போகாமல் மட்டம் போட்டதாகக் கூறினான். தேயிலைச் செடிகளின் மேலாய் புகை வருவதைக் கண்டு - பிடிக்கப்பட்டவர்கள் கைமாறிக், கை மாறி சார்ல்ஸ் ஜக்சனின் மாமாவினால் இழுத்து வரப்பட்டு மார்க்கிரட் மேரியின் முன்னால் நிறுத்தப்பட்டபோது மட்டியிட்டபடி இதையே தான் திரும்பத்திரும்பச் சொன்னான்.

எதுவும் ஏறாத உயரத்துக்கு அவனது எண்ணங்கள் போய் தான் எட்டாண்டுகளின் ஒவ்வொரு இரவிலும் தொடராகவும் - சில வேளைகளில் புதியதாகவும் வந்து சென்று சந்தோஷத்தை மனது நிறைய ஊற்றி விட்டுச் சென்ற, பத்திரமாக சேர்த்து வைத்திருந்த கனவுகளை விரித்தான். அது மடிப்புக்களை நீட்டி அறை முழுவதும் பரந்தது. சார்ல்ஸ் ஜக்சன் பல வண்ணமாய் அலங்கரிக்கப்பட்டு அங்குமிங்குமாக சுறுசுறுப்புடன் இயங்கினான். புன்னகையைப் பூத்துக் கொண்டே மார்க்கிரட் மேரி பெருமையின் உச்சத்தில் கால் மேல் கால் போட்டு அமர்ந்திருந்தாள்.

விளையாட்டு வீரனாக கழுத்தில் தொங்கும் தங்கப்பதக்கத்துடனும், கையில் மலர்களுடனும் அவளின் கன்னத்துடன் அவனது கன்னத்தை ஒட்டிக்

**எதுவும் ஏறாத உயரத்துக்கு அவனது எண்ணங்கள் போய் தான் எட்டாண்டுகளின் ஒவ் வொரு இரவிலும் தொடராகவும் – சில வேளைகளில் புதியதாகவும் வந்து சென்று சந்தோஷத்தை மனது நிறைய ஊற்றி விட்டுச் சென்ற, பத்திரமாக சேர்த்து வைத் திருந்த கனவுகளை விரித்தான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு நின்றான். - கணினிகளுக்குள் பல கண்கள் புதைந்து கிடக்க, விண்வெளிக்கு செல்லத் தயாரான பெருத்த மண்டையுடன் தாய்க்கு கையசைத்த வண்ணம் போனான். - சத்திர சிகிச்சை அறையிலிருந்து வெளிப்பட்டவனின் கைகளை கண்களில் ஒற்றிக் கொண்டு நன்றியான வார்த்தைகளால் ஒரு மூதாட்டி அவனை அழகுபடுத்த ஒரு மூலையில் பெருமைப்பட நின்றாள். (இப்படியாக நீண்டு செல்ல வரையப்பட்டிருந்த கனவுகளை தொலைக்காட்சி நாடகங்களும், செய்திகளும் நெறியாள்கை செய்திருந்தன. - ஆனால் எந்தக் கனவிலும் அவன் இசைக் கலைஞனாக்கப்படவில்லை).

இத்தனை ஆண்டுகளும் தான் சேமித்த கனவு மூட்டைகளை பீடிப் புகையால் உடைத்தெறிந்த அவனைத் தள்ளிவிட்டு மூலையில் குந்திக் கொண்டு அழுத வண்ணமே எப்படி தற்கொலை செய்யலாம் என எண்ணத் தொடங்கினாள். ஆனாலும் நரம்புகளை மீட்டி சார்ல்ஸ் ஜக்சன் இசைத்த இசைக்கோர்வையிலும், தாயைப் பற்றியதான அவனது வரிகளாலும் அறுந்து போனது அவளது எண்ணங்கள். அவனை இழுத்து மாருடன் இறுக்கிக் கொண்டு மடியில் கிடத்தி தலையை வருடத் தொடங்கினாள்.

நாட்கள் இழைவிட்டு நீண்டு போக சார்ல்ஸ் ஜக்சனிடம் நரம்புகளை அதிர்த்து இசையெழுப்பும் ஆர்வம் கூடிப்போக சிரட்டை, பிளாஸ்டிக் மூடி, பலகைத்துண்டு, தங்கூசி, நைலோன் நூல் என அவன் நரம்புகளை மாற்றி மாற்றி இசையை பரிசோதிக்கத் தொடங்கினான். அப்படியான நாளொன்றில்தான் மேல் நோக்கி வால் தூக்கி வளைந்த மீனின் தலையின் மேற்பகுதியிலும் வாலிலும் இழுத்துக் கட்டப்பட்டிருந்த நரம்புக் கருவியையும் கூட இருந்த பிக்குவையும் கண்டான். (அதொரு புத்தகத்தின் அட்டைப்படம்) அது பற்றிய செய்திகளை வாங்கிக் கொண்டிருந்த போது தான், தன் பாடசாலைக்கு யாழ்ப்பாண ஆசிரியர் ஒருவர் வந்திருப்பதாகவும் அவரிடம் இலங்கையின் சரித்திரமும், நிறையவே தகவலும் பொதிந்து கிடப்பதை அறிந்து கொண்டவன், அவரின் வாலைப் பிடித்து தன் முகத்தை அறிமுகப்படுத்தி - மிலாறு கட்டி, தப்புக் கிழங்கு பொறுக்கி, ஆசிரியருடன் இருந்து கதை அளக்கலானான். மகர யாழும் விபுலானந்தரும் தெரிந்தார்கள். மட்டக்களப்பை கேள்விப்பட்டான். யாழ்ப்பாணத்தில், மட்டக்களப்பை தேடினான். அது கிழக்கே நீர் விரித்துக் கிடந்தது.

நாட்கள் இழைவிட்டு நீண்டு போக சார்ல்ஸ் ஜக்சனிடம் நரம்புகளை அதிர்த்து இசை யெழுப்பும் ஆர்வம் கூடிப்போக சிரட்டை, பிளாஸ்டிக் மூடி, பலகைத்துண்டு, தங்கூசி, நைலோன் நூல் என அவன் நரம்புகளை மாற்றி மாற்றி இசையை பரிசோதிக்கத் தொடங்கினான்.

சார்ல்ஸ் ஜக்சன் மீன்கள் பாடும் ஆச்சரியத்துள் இறங்கியிருந்த போது - மார்க்கிரட் மேரி மீண்டும் கனவுகளை பின்னத் தொடங்கி இருந்தாள். பனி கிள்ளி வெடித்த விரல்கள் ஆறுதல்பட, அவனது விரல்களுக்குள் மரக் காரியம் திணித்து புலமைப் பரிசிலுக்குள் அமர வைத்தாள். அவன் தலைகள் விறைத்துப் போக புத்தகத்தை விரித்து அதனுள் அமிழ்த்தினாள். அவனோ காற்றின் நூலாகி பாடும் மீன்களினதும், நரம்புகளின் இழுப்பிலும் மயங்கி வகுப்பறை மேசையில் காது வைத்துக் கிடந்தான். மேசையில் விரல்களின் நடனத்தில் எழுந்த ஓசையில் அவன் கண்கள் சந்தோஷத்தில் விழித்தன. மீண்டும் மேசையை தட்டி விரல்களால் கொட்டினான்.

அதன் பின்னான நாட்களில் தோல் இசைக்கருவிகளை தட்டுவதில் அவன் ஆர்வம் ஊறிப்போனது. அதைத் தயார்படுத்த லயங்களிலும் - நண்பர்களிடமும், கை - கால் உடைந்த நெஞ்சு வருத்தமான நோயாளிகளைத் தேடத் தொடங்கினான். இறைச்சிக் கடைக்குச் சென்று சவ்வுக்காக கெஞ்சினான். தீபாவளிக்கு ஆட்டைப் பங்கு போடும் பகீரதன் பின்னால் அவனுக்கு 'செய்யது பீடி' வாங்கிக் கொடுத்து அலைந்தான். இதனால் பாடும் மீனைப் பார்க்க சேர்த்திருந்த சில்லறைத் தரகுப்பணமும் செலவானது. - எப்போதும் கையில் இரு தடிகளுடன் காற்றையும், கடந்து செல்ல வேண்டியிருந்த இரண்டு பாலங்களினது ஓரத்துக் கம்பிகளையும் அடித்துக் கொண்டே சென்றான். அவனது ஆர்வத்துக்கு தாக்குப் பிடிக்க முடியாத குச்சிகள் உடைந்து போக காட்டுக்கு அருகிலிருந்த தோட்டத்தில் இருந்து அவன் வகுப்புக்கு வந்த சகாவை சிநேகம் கொண்டு சனிக்கிழமை நாளொன்றில் பாடசாலை வகுப்பை காட்டுக்கு மாற்றினான். -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுக்குள் வலிமையானதும், மெல்லியதும் 'ணங் 'என்று ஒலி எழுப்பக் கூடியதுமான காச்சான் கம்பை தேடிக்கண்டு வெட்டி, கையில் பிடித்து அடிக்கக் கூடியதாக இரண்டு துண்டங்களாக்கி கொண்டு வந்து சேர்த்தான். (இக் கதை மார்க்கிரட் மேரி அறியவுமில்லை. தற்கொலை பண்ணிச் சாகப்போகிறேன் எனச் சொல்லவுமில்லை) அதை அழகாகச் சீவி வெயிலில் காய வைத்து - வெளியில் மறைத்து வைத்திருந்தான். மார்க்கிரட் மேரியின் சுரம் சேராத கரடு முரடான குரலுக்குப் பயந்து புத்தகத்தை விரித்து வைத்திருப்பவன் திடீரென நினைவு தப்பி வெளியே ஓடிச் சென்று இரு கம்புகளையும் கையில் பிடித்துக் கொண்டு கண்ணை மூடி தலையை ஆட்டிய வண்ணம் காற்றில் இசையெழுப்புவான். ஐந்து - பத்து நிமிடங்கள் நீளும் இசையில் கோர்வையை எழுப்பும் மாயக் கூறுகளுடன் காற்று அவனை வருடி பூரிப்பை விதைத்துவிட, மயிர்க்கணுக்கள் புடைத்தெழ நினைவிழந்து நடந்து புத்தகத்தின் முன்னால் கண்களை மூடி தலையை ஆட்டி ரசிப்பான். அவன் ஆழப்புதைந்து கற்பதாக மார்க்கிரட் மேரி கால்களை தூக்கி வைத்து கனவுகளில் ஏறிக் கொண்டிருந்தாள்.

கட்டாயமாக அது ஒரு ஞாயிற்றுக் கிழமையாகத்தான் இருக்க வேண்டும். ஏனென்றால் அதற்கான சாத்தியக் கூறுகள் ஞாபகத்தில் வந்தன. அவனது லயத்திலிருந்து பாடசாலைக்கு செல்லும் பாதையில் நடக்கையில் (வாகனத்தில் செல்கையிலும் கூட) வீதி நிறைய தெப்பக்குளங்கள், அது தவிர இரு பாலம், புனித அசிசிரியர் தேவாலயம், மஞ்சள் மூங்கில் புதர்கள், இறைச்சிக்கடை, தோட்டத்து ஊத்தக் கான் சேரும் கல் பாலத்தின் சந்தியுடன் நகருக்கும், பாடசாலைக்கும் பிரியும் வீதிகள், தேவாலயம் செல்லும் முன்பாக இருந்த இரண்டாம் பாலத்தின் கீழ் ஆற்றில் குளிப்பதற்காகச் சென்றிருந்த சார்ல்ஸ் ஜக்சன், கரையின் பாறையில் உடுதுணியுடன் தன்னிருகம்புகளையும் வைத்துவிட்டு குளியலாடைக்குள் புகுந்தான். அவர்களின் கிரமப்படி நேரம் கொண்டு வந்து சேர்த்த சகாக்களும் குழும ஆறு சலசலத்தது.

உடைகளையெல்லாம் உதறிவிட்டு நீரினுள் பாயும் சத்தமும், நீர்த்துளியின் தெறிப்பும் அவனுக்குள் சிலிர்த்தெழ இரு கம்புகளையும் கையில் எடுத்துக் கொண்டு பாறையில் அமர்ந்தான். கல்லும் கம்பும் கலப்புண்ட இசையில் கண்கள் மூட அவனால் எல்லாமும் மறக்கப்பட்டாயிற்று - கைகள் இயங்கிக் கொண்டேயிருக்க, தலை நடனமிட்டபடி நீளும் இசைச் சுழியுள் மூழ்கிக் கிடந்தான். காலம் நகராமல் அவனுள் இறுகிப்போனது.

**உடைகளையெல்லாம் உதறிவிட்டு நீரினுள் பாயும் சத்தமும், நீர்த்துளியின் தெறிப்பும் அவனுக்குள் சிலிர்த்தெழ இரு கம்புகளையும் கையில் எடுத்துக் கொண்டு பாறையில் அமர்ந்தான். கல்லும் கம்பும் கலப்புண்ட இசையில் கண்கள் மூட அவனால் எல்லாமும் மறக்கப்பட்டாயிற்று**

அடிபட்ட புரடியில் இசை கலைய, சுருண்டு வலியுடன் இழுபட்ட காதுடன் விழித்தான். கையில் சுற்றிய வெள்ளை வலையினுள் வேதாகமம் தெரிய கண்களை சிவப்பாக்கி, பற்களை இறுக்கிக் கொண்டு மார்க்கிரட் மேரி நின்றாள்.

தன் கனவுகளுடன் நம்பிக்கையும் கொல்லப்பட்டதால் தற்கொலை செய்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லையென ஊரைக் கூட்டி தலையணையுள் புதைய - வெள்ளைச் சிற்றோட்டை வலையின் மேலால் துள்ளியெழுந்த வேதாகமம் சங்கீதம் விரிக்க 'நீர்க்காலின் ஓரமாய் நடப்பட்டு தன் காலத்தில் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கின்ற மரத்தைப் போலிருப்பான். அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்.' பூரிப்பு மூண்டெழ வேதாகமத்தை தழுவிக்கொண்ட சார்ல்ஸ் ஜக்சன் மேரியின் முன்னால் மண்டியிட்டான். அவனது மன்றாட்டம் மார்க்கிரட் மேரியை உருக்கியது.

பல சாத்தியப்பாடுகளை யோசித்து தான் அடைந்திருந்த முடிவின்படி தன் சகோதரியான இசபெல்லாவுடன் - பாறை, மூங்கில், ஆறு, மலை தாண்டி அவனை புகையிரதமேற்றி அனுப்பினாள்.

இக் காலத்தில் தான் அவன் தென்னங்கீற்றுக்களை உருட்டி குழல் செய்து ஊதித்திரிந்தான். எப்போதாகிலும் வெளியில் சென்று வரும் சின்னம்மாவான இசபெல்லாவிடம் இருந்து மஞ்சள் மூங்கில்களைப் பெற்று துளையிட்டு ஊதுவதுடன், பப்பாசித் தண்டிலும் முயற்சியை மேற்கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியாக இசைக்குள்ளால் அவனாகவே வீழ்ந்து புரண்டு கிடந்த மீசை முட்டிய நாளொன்றில் துணியாலான தோள்ப்பையொன்றினுள் இசைக்கருவிகளை யெல்லாம் சுமந்தபடி ஊருக்குப் புறப்படத் தயாரானான். அப்போது தான் ஏதோ சபையொன்றில் போதகராய் இருந்த அவன் சித்தப்பா - இசபெல்லாவின் கணவர் - வானத்துக்கும் பூமிக்குமிடையிலான ரகசியங்களடங்கிய பாதையின் புதிர்களுக்கான விடைகளடங்கியதாகக் கூறி பரிசுத்த வேதாகம ஒத்த வாக்கிய விளக்கவுரையை அவனுக்கு பரிசளித்தார்.

ஊர் முன்பு போல் இருக்கவில்லை. தேயிலைகள் இருந்த இடங்களை மரக்கறி வகைகள் இளம் பச்சையாய் விரிந்து நிரப்பியிருந்தது. இரசாயன கலவையின் வாடை நாசியை நிறைக்க, விசித்திர உலகம் போல மரக்கறிகள் உப்பிப் பெருத்திருந்தன. அவன் தலையைவிட பெரிதாய் கோவா முட்டையையும், ஊத முடியாமல் வெடித்த பீற்றூட்டையும் பார்த்துக் கொண்டே நடந்தான். அதிகரிக்கப்பட்டிருந்த இரண்டு ரூபா சம்பளத்தில் மார்க்கிரட் மேரி சந்தோஷத்துடன் அவன் உச்சியில் உதட்டை பதித்தாள். அந்த சத்தம் அவனுள் சிலிர்ப்பை உண்டாக்க - உணர்வின் வெளிப்பாட்டு இசையாக அதனை நினைவிற்குள் வரைந்து கொண்டான்.

அந்த நாட்களில் வீட்டிலிருந்து அடிக்கடி தொலைந்து போனவன், உச்சிப் பாறைகளில் குந்தியிருந்து காற்று சைப்பிரஸ் மரங்களில் மீட்டும் இசையை ரசித்துக் கொண்டு இன்னமும் உறுதியுடன் இருந்த காச்சான் கம்புகளால் பாறைகளில் தாளமிட்டு வெட்டிச் சாய்க்கப்பட்டிருந்த கருப்பந்தலை மரங்களின் வாசனையை நுகர்ந்தபடி தலையை நடனமிட வைத்தான். அவனையறியாமலேயே காலம் அவனைத் தாண்டிச் சென்று கொண்டிருந்தது.

இப்படியான நாளொன்றில் தான் அவன் காலுடைந்து போனது. குதிகால் மூட்டு வெடித்து வைத்தியசாலையில் கிடந்தவனிடம் மார்க்கிரட் மேரியிலிருந்து தொடங்கி யாருடைய குரல் அசைத்தும் அவனிடமிருந்து தெளிவான பதிலை இழுத்து வரமுடியவில்லை. வழுக்கி விழுந்த சொற்களைப் பொறுக்கிக் கொண்டவர்கள் அவனும் கூட வழுக்கி விழுந்து உடைத்துக் கொண்டதாக நினைத்துக் கொண்டார்கள். நடக்கக்கூடாத அந்த ஆறு மாத காலத்தில் தான் அவன் அவனுள் இறங்கத் தொடங்கினான்.

நண்பர்களான கிறிசாந்தனிடமிருந்து பெற்றுக் கொண்ட பகவத்கீதையை யும், டூல் சமிட் தந்த கண்ணியமிகு குர் ஆனின் இனிமை மிகு தமிழாக்கத்தையும், மாாக்கிரட் மேரி பாதுகாத்து வந்த எபிரேய மொழியிலிருந்து நேரடித் தமிழாக்க பரிசுத்த வேதாகமத்தையும் விரித்துக் கொண்டு ஒத்த வாக்கிய விளக்கவுரை தேடினான்.

அவன் மூச்சுக்காற்று அறையை நிறைத்து வீட்டுக்குள் பரவி யன்னல் கம்பிகளூடு வெளியே நீண்டது. இசையின் நரம்புகளை அதிர்த்து, காற்றை ஊதி, தோலில் தட்டினான்.

இசையின் நுகர்ச்சியில் பூரிப்படைந்த மார்க்கிரட் மேரி தன்மகன் பக்குவப்பட்டுவிட்டதாக நிம்மதியைப் பெற்றுக் கொண்டு, தனக்கு இனிமேல் தற்கொலை எண்ணம் வரக்கூடாதென வேண்டிக் கொண்டாள்.

மழை ஓய்ந்து பனிக்காலம் தொடங்கிய நாட்கள்.

சார்ல்ஸ் ஜக்சன் நன்றாக நித்திரையில் ஆழ்ந்து நீந்தக் கற்றுக் கொண்டிருந்தான். விரல் வெடித்து காலில் சொறி பரவத் தொடங்கியிருந்த தாயின் வலிக்கு ஆறுதல் தடவ அவளின் கனவுகளை வாசித்து தன் கனவுகளை அடுக்கத் தொடங்கினான்.

இசையின் தாகம் ஏறி தவிக்கத் தொடங்கியிருந்த போது வான மண்டலங்களின் நடுவில் இருந்து கொண்டு இசைக்கருவிகளை அடுக்கி, மாறி - மாறி மீட்டி மேகக் கூட்டம் சேர்த்துக் கொண்டிருக்கையில் கிழக்கு வானில் தோன்றிய

**ஊர் முன்பு போல் இருக்கவில்லை. தேயிலைகள் இருந்த இடங்களை மரக்கறி வகைகள் இளம் பச்சையாய் விரிந்து நிரப்பியிருந்தது. இரசாயன கலவையின் வாடை நாசியை நிறைக்க, விசித்திர உலகம் போல மரக்கறிகள் உப்பிப் பெருத்திருந்தன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளியினுள்ளாக இருந்து புறப்பட்ட வெள்ளைக் குதிரை பிடரிமயிரை காற்றில் அலையவிட்டு கட்டிலில் விழித்துக் கிடந்த பரிசுத்த வேதாகம ஒத்த வாக்கிய விளக்கவுரையை கவ்விக் கொண்டு மேற்குத் திசையாக தாவிப்போனது.

வெடிப்பூர்ந்த கை முகத்தை வருடும் சொர சொரப்பில் விழிப்பெடுத்தவன், கதறிக் கொண்டே நொண்டி நொண்டி வாசலுக்கு வந்து சேர்ந்தான். படிக் கட்டுக்களில் காலை நீட்டிய வண்ணம் வாயில் குழலை யும், வலது கையில் சிரட்டை தம்புராவையும் - அவன் இடது கைப் பழக்கம் உடையவன், முழங்கால்களுக் கிடையில் 'எக்ஸ்ரே' தப்பையும் வைத்துக் கொண்டு ஒவ்வொன்றாக இசைக்கத் தொடங்கினான்.

இவ்வாறே காலையில் பின்கதவுப் படியில் கிழக்குப் பார்த்தும், மாலையில் முன் கதவுப் படியில் மேற்கைப் பார்த்தும் கழிவிரக்கம் பீறிடும் இசையை எழுப்பிக்கொண்டு அமர்ந்திருந்தான். அவனது தலை முடி நீண்டு தலையைத் தொட்டதினால், அதிலிருந்து மெல்லிய இசையை எழுப்பும் நரம்புக் கருவியை உண்டாக்கினான்.

அது அவனது காதுகளுள் மட்டும் பெரும் இசையை பாய்ச்சியதால் அரை மயக்கம் பீடிக்க பித்து நிலையை அடைந்தான்.

இவற்றில் பாதி நடந்து கொண்டிருந்த போதே மீதியில் இருக்கக் கூடிய குரூரத்தை உணர்ந்து கொண்ட மார்க்கிரட் மேரி தற்கொலை பண்ணலாமா என நினைக்காமல் - செய்து கொண்டாள். அதே வெள்ளைக் குதிரையே தனது தாயையும் ஏற்றிக்கொண்டு சென்றி ருப்பதாக எண்ணிக் கொண்ட சார்ல்ஸ் ஜக்சன் தன் இசையின் அலைகள் நீண்டு வளர்ந்து மேற்கு வானில் மறைந்த குதிரைக்கு கடிவாளமாகி எல்லாவற்றையும் மீட்டு வரும் என்ற எண்ணப்படி வின் உறைவில் கருவிகளில் இருந்து விதைகளைத் தூவிக் கொண்டே இருந்தான். இரவு பகல்கள் அவனைத் தாண்டிச் சென்று கொண்டே இருந்தன - எந்தப் பரபரப்புமின்றி. இடையிடையே மேகங்கள் குதிரை காட்டி காற்றுக்குக் கலங்கின. ஆனாலும் எப்போதும் அவன் பார்வை மேற்கு வானை குத்திக்கொண்டே நின்றது. ■

*19002912 2013*

# அதிபுதிர்க் கனவுகள்



ஜபார்

ஆழ் துயிலின் நீள் அமைதியில்
அவிழ்ந்து கமழ்கிற அதி புதிர்க் கனவுகள்
விழிக்கிறபோது கலைந்தவை போக
விம்பம் விம்பமாய் எஞ்சுவது சில.
வரைவதா? இசைப்பதா?? வார்த்தையாடுவதா???
புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

நீற்றுக் குவியலூடு தலைநிமிரும் புல் நுனிகள்
குருதிச் சகதிக்குள் துள்ளுகின்ற மீன் குஞ்சுகள்
கல்லறை பிளந்து வாகாய் நிமிரும் வடலிகள்
மண்டையோட்டுக் கட்குழி வழியெழும்
கண்விடுக்காக் குழந்தைகள்
இறுகிய நூலிழை அறுத்து மலர்ந்திடும்
நூறாயிரம் மொட்டுகள்
பேரொலி கேட்டுத் திடும்மெனப் பறக்காது
கேவிக் குலவும் பறவைகள்
மறைத்த கருமுகிலையும் மீறித் திமிறிக்
கண்சிமிட்டும் நட்சத்திரங்கள்
கோடானு கோடித் திரைகளையும் மேவிப்
பொங்கிப் பிரவகிக்கும் பேர் பிரகாசம்.

வரைவதா? இசைப்பதா?? வார்த்தையாடுவதா???
புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமறைக் கலாமன்றம்



பிரதிநிதிகள், யாழ்ப்பாணத்தின் முக்கிய பிரமுகர்கள், ஓவியர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் என பல நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டிருந்த திறப்பு விழாவின் ஆரம்ப நிகழ்வாக, திறப்பு விழாவிற்கு முதல் நாள் மாலை 6.00 மணியளவில் கட்டடத்தை ஆசீர்வதிக்கும் சடங்கும், பொது வழிபாடும் இடம்பெற்றது. திறப்பு விழா தினத்தன்று காலை 6:30 மணியளவில் பாற்பொங்கலும், முற்பகல் 9:15 அளவில் றக்கா வீதியில் அமைந்துள்ள புனித திரேசம்மாள் ஆலயத்தில் நன்றித் திருப்பலியும் இடம்பெற்றது. திருப்பலியை மேதகு பேராயர் யோசவ் ஸ்பிற்றறியுடன் இணைந்து யாழ்.மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை மற்றும் அருட்தந்தையர்கள் பலர் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுத்தார்கள். திருப்பலியைத் தொடர்ந்து, றக்கா வீதியும் கோவில் வீதியும் இணையும் சந்தியில் இருந்து விருந்தினர்கள் மாலை அணிவிக்கப்பட்டு நாதஸ்வர இசையுடன் ஊர்வலமாக கலாமுற்றத்தின் நுழைவாயிலுக்கு அழைத்து வரப்பட்டார்கள். தொடர்ந்து திருமறைக் கலாமன்ற நடன மாணவிகளின் நடனத்துடன் விருந்தினர்களும், ஏனையோரும் வரவேற்கப்பட்டார்கள்.

## வடமாகாணத்தின் முதலாவது ஓவியக்கூடத்தை தன்னுள் கொண்டமைந்துள்ள கலைத்தூது கலாமுற்றம்

### திறப்பு விழா - 01.12.2013

**மதுரா**

ஐம்பது ஆண்டுகளை அண்மிக்கும் (1965-2015) திருமறைக் கலாமன்றத்தின் கலைப் பயணத்தின் மற்றுமொரு சாதனைத் தடமாக, 1988ஆம் ஆண்டு முதல் கடந்த 26 ஆண்டுகளாக ஓவியக் கலையின் வளர்ச்சிக்காக மன்றம் மேற்கொண்டு வருகின்ற பல்வேறு வகையான செயற்பாடுகளுக்கும் மகுடம் சூட்டுவது போல இல 15, றக்கா வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிகளில் அமையப்பெற்ற வடமாகாணத்தின் முதலாவது ஓவியக்கூடத்தை தன்னகத்தே கொண்ட 'கலைத்தூது கலாமுற்றம்' கடந்த ஆண்டு (2013) டிசெம்பர் மாதம் முதலாம் திகதி முற்பகல் 10:30 மணியளவில், நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வருகை தந்திருந்த இலங்கைக்கான திருத்தந்தையின் பிரதிநிதி, வத்திக்கான் தூதுவர் மேதகு பேராயர் யோசப் ஸ்பிற்றறி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்விற்கு சிறப்பு விருந்தினர்களாக வடமகாண சபை உறுப்பினர் திரு. இம்மானுவல் ஆனல்ட், யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி திரு. வி.பி.சிவநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். அத்துடன் அருளுரை ஆற்றுவதற்காக இந்து, கிறிஸ்தவ, பௌத்தம், இஸ்லாம் ஆகிய நான்கு மதங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் பிரதிநிதிகளும் வருகை தந்திருந்தார்கள்.

திருமறைக் கலாமன்ற அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், சர்வமதப் பிரதிநிதிகள், ...

அதன் பின் மங்கல விளக்கேற்றும் நிகழ்வு இடம்பெற்றது. மங்கல விளக்குகளை இலங்கைக்கான வத்திக்கான் தூதுவர் யோசெப் ஸ்பிற்றறி, யாழ்.மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாச்சாரிய சுவாமிகள், யாழ்ப்பாணம் ஸ்ரீ நாகவிகாரை சர்வதேச பௌத்த நிலையத்தைச் சேர்ந்த வண.கலைமாணி மீகஹஜந்துரே சிறிவிமல தேரர், யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் அருள் கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம், வடமாகாண சபை உறுப்பினர் திரு. இம்மானுவல் ஆனல்ட், யாழ்.பல்கலைக் கழக கலைப்பீட பீடாதிபதி திரு. வி.பி.சிவநாதன், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் - வாழ்நாள் பேராசிரியர் திரு. பொ.பாலசுந்தரம்பிள்ளை, திருமறைக்கலா மன்ற இயக்குநர் நீ.மரியசேவியர் அடிகள், யாழ்.இந்தியத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணைத்தூதரக அதிகாரி திரு. சுரேஸ் மேனன், மொனரா கலை திருமறைக் கலாமன்ற இணைப்பாளர் திரு.ஜெயந்த றஞ்சித், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதி முகாமையாளர் திரு. மைக்கல்தாசன், திருமறைக் கலாமன்ற ஓவியக் கலைவட்ட பொறுப்பாசிரியர் திருமதி பப்சி மரிய தாசன் ஆகியோர் ஏற்றி வைத்தார்கள்.

மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து இறைவணக் கத்தை திருமறைக் கலாமன்றக் கலைஞரான திரு. இ.ஜெயகாந்தன் பாட, தமிழ்த்தாய் வாழ்த்தினை திரு மறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியின் சங்கீத ஆசிரியை திருமதி சுகந்தி இரட்ணேஸ்வரன் பாடினார்.

இந் நிகழ்வுகளைத் தொடர்ந்து பேராயர் அவர்கள் நாடாவை வெட்டி கலைத்தூது கலாமுற்றத்தை சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்ததுடன், நினைவுக் கல்லையும் திரைநீக்கம் செய்து வைத்தார். இதனையடுத்து பேராயர் உட்பட விருந்தினர்கள் தமிழ்ப்பண்பாட்டிற்கு அமைவாக ஆராத்தி எடுக்கப்பட்டு, பொட்டிட்டு வரவேற்கப்பட்டார் கள். அதனைத் தொடர்ந்து முதலாம் மாடியில் ஓவியக் கூடத்தை யாழ்.மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந் தரநாயகம் ஆண்டகை நாடாவை வெட்டி திறந்து வைத் தார். ஓவியக்கூடம் முதலாம், இரண்டாம் மாடிகளில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து விருந்தினர்கள் உட்பட நிகழ்வுக்கு வருகை தந்தோர் அனைவரும் கண்காட்சி கூடங்களை பார்வையிட்ட பின்னர் பிரதான நிகழ்வுகள் இரண்டாம் மாடியில் ஆரம்பமாகின.

யாழ்.மறைமாவட்ட குருமுதல்வரின் தலைமையில் அவ ரது தலைமையுரையுடன் இடம்பெற்ற இந் நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர், யாழ்.மறைமாவட்ட ஆயர், ஸ்ரீ நாகவிகாரை பௌத்த நிலையத்தைச் சேர்ந்த தேரர், யாழ்ப்பாணம் முகமதிய்யா ஜீம்மா மஸ்ஜித்தைச் சேர்ந்த மௌலவி எம்.ஐ.மஷ்மூத் (பலாகரி) ஆகியோர் அருளுரைகளையும், வடமாகாண சபை உறுப்பினர் திரு. இம்மானுவல் ஆனல்ட், யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி திரு.வி.பி.சிவநாதன், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் திரு. பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் சிறப்புரைகளையும் வழங்கினர். தொடர்ந்து திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் தலைமையில் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது, திருமறைக் கலாமன்றத்தின் ஓவியச் செயற்பாடுகளில் பல்லாண்டுகளாக தம்மை அர்ப்பணித்து பணியாற்றிய எமது மண்ணின் மூத்த ஓவியர்களான திரு. வை.சிவசுப்பிரமணியம் (ரமணி), திரு. ஆசை இராசையா ஆகிய இருவரும் திருமறைக் கலாமன்றத்தின் அதி உயர் விருதான 'கலைஞான பூரணன்' விருது வழங்கிக் கௌரவிக் கப்பட்டார்கள். இதுவரை காலமும் திருமறைக் கலாமன் றத்தின் அங்கத்தவர்களாக இருந்து மன்றப் பணிகளில் தம்மை அர்ப்பணித்துப் பணியாற்றிய மன்றத்தின் மூத்த அங்கத்த வர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இவ் விருது முதன் முதலாக மன்றத்தில் அங்கத்துவம் பெறாமல், மன்றப் பணிகளில் ஈடு பட்டுழைத்த இவ்விருவருக்கும் வழங்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது. இக் கௌரவிப்பின் போது, ஓவியர் ரமணிக்கு யாழ்.ஆயர் பொன்னாடை போர்க்க, மன்றத்தின் ஸ்தாபக உறுப் பினர் இசைத்தென்றல் ம.யேசுதாசன் மாலை அணிவிக்க, யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் விருதினை வழங்கிக் கௌரவித்தார். ஓவியர் ஆசை இராசையாவுக்கு பேராயர் ஸ்பிற்றறி பொன்னாடை போர்க்க, மன்றத்தின் செயலாளரும், மூத்த உறுப்பினருமான திரு. சி.எம்.நெல்சன் மாலை அணிவிக்க, யாழ்.ஆயர் விருதினை வழங்கிக் கௌரவித்தார்.

தொடர்ந்து கலைத்தூது கலாமுற்றத்திற்கான கட்டடப் பணிகளை பொறுப்பேற்று பூரணப்படுத்திய இளம் கட்டடக் கலைஞரான திரு. தா.விமலானந்த் நினைவுக் கேடயம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இதன் போது, யாழ்.ஆயர் அவர்கள் பொன்னாடை போர்க்க, மன்றத்தின் ஸ்தாபக உறுப்பினரான திரு. ஜி.பி.பேர்மினஸ் மாலை அணிவிக்க, பேராயர் நினைவுக்கேடயத்தினை வழங்கினார்.

அடுத்து, திருமறைக் கலாமன்றம் 1988ஆம் ஆண்டு ஓவியச் செயற்பாடுகளை ஆரம்பித்த போது, அதன் முதலாவது வளவாளராக பணியாற்றி, ஏராளமானோர் ஓவி யக் கலையில் வளர அரும்பணியாற்றிய அமரர் ஓவியர் மாற்குவை நினைவு கூர்ந்து, அவரிடம் ஓவியம் பயின்று இன்று திருமறைக் கலாமன்றத்தின் ஓவியச் செயற்பாடு களில் தன்னை அர்ப்பணித்துப் பணியாற்றுவதுடன், மன்றத்தின் ஓவியக் கலை வட்டத்தின் பொறுப்பாசிரிய ராகவும் செயற்படும் ஆசிரியை திருமதி. பப்சி மரியதாசன் அவர்கள் நினைவுக் கேடயம் வழங்கிக் கௌரவிக்கப்



விருந்தினர்கள் நடனத்துடன்
வரவேற்கப்படுகையில்...



பேராயரினால் கலைத்தூது கலாமுற்றம்
திறந்துவைக்கப்படுகையில்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டார். இதன் போது, யாழ்.பல்கலைக்கழக நாடகமும் அரங்கக் கலைகளும் விரிவுரையாளர் திருமதி நவதர்ஷினி கருணாகரன் பொன்னாடை போர்க்க, கொழும்புத் திருமறைக் கலாமன்றத்தில் இருந்து வருகைதந்த திருமதி. ஜெனோவா அற்புதம் மாலை அணிவிக்க, நினைவுக் கேடயத்தினை யாழ்.ஆயர் வழங்கிக் கௌரவித்தார்.

தொடர்ந்து, மன்றத்தின் சார்பாக இக் கட்டடப் பணிக ளுக்கு பொறுப்பாக இருந்து செயற்பட்ட மன்றத்தின் மூத்த கலைஞரான திரு. அ.யோசேப் கௌரவிக்கப்பட்டார். இதன் போது இவருக்கான கௌரவப் பரிசினை யாழ்.மறை மாவட்ட குருமுதல்வர் வழங்கிக் கௌரவித்தார்.

இதனையடுத்து, கலைத்தூது கலாமுற்றத்திற்கு முன்பாக அமைந்துள்ள கலைச் சிற்பத்தை குறுகிய கால வேண்டு



யாழ்.ஆயரினால் ஓவியக் கூடம்
திறந்துவைக்கப்படுகையில்...



நல்லை ஆதீன முதல்வர் பேராயர் அவர்களைக்
கௌரவிக்கையில்...



திறப்பு விழா நிகழ்வில் கலந்துகொண்டோரில்
ஒரு பகுதியினர்...

கோளை ஏற்று அழகுற அமைத்துத் தந்த மன்னார் வங்கா லையைச் சேர்ந்த இளம் சிற்பக் கலைஞரான திரு. மாற்கு ஜெறோமி கௌரவிக்கப்பட்டார். இதன் போது இக் கலை ஞருக்கான கௌரவப் பரிசை யாழ்.ஆயர் வழங்கிக் கௌர வித்தார்.

தொடர்ந்து, கௌரவிப்பு நிகழ்வுகளின் நிறைவாக பேரா யர் ஸ்பிற்றறி அவர்கள் விசேடமாக கௌரவிக்கப்பட்டார். கடந்த பல வருடங்களாக இலங்கைக்கான வத்திக்கான் தூதுவராகப் பணியாற்றிய பேராயர் அவர்கள், இலங்கையில் இருந்து விடைபெறுவதை முன்னிட்டு இலங்கை மக்கள் சார்பாகவும், திருமறைக் கலாமன்றத்தின் பணிகளோடு அவருக்கு இருந்த ஈடுபாட்டுக்கு மதிப்பளித்து மன்றத்தின் சார்பாகவும் கௌரவிக்கப்பட்டார். திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் பேராயரை வாழ்த்தி ஆங்கில மொழியில் நிகழ்த்திய உரையைத் தொடர்ந்து இடம்பெற்ற இக் கௌரவிப்பின் போது, நல்லை ஆதீனக் குருக்கள் பேராயர் அவர்களுக்கு பொன் னாடை போர்க்க, சிறி விமல தேரர் மாலை அணிவிக்க, மன்றத்தின் ஸ்தாபக உறுப்பினர்களான திரு. ஜி.பி.பேர் மினஸ், திரு. ம.தைரியநாதன், திரு. ஜி.எட்வேட் ஆகியோர் இணைந்து நினைவுக் கேடயத்தினை வழங்கிக் கௌரவித் தார்கள்.

இதனைத் தொடர்ந்து, பேராயர் அவர்களின் சிறப்புரை யும் (இதனைத் தமிழில் அருட்தந்தை இராசேந்திரம் ஸ்ரலின் வழங்கினார்), திருமறைக் கலாமன்ற இயக்குநர் நீ.மரியசேவியர் அடிகளாரின் நன்றியுரையும் இடம் பெற்றது. நிறைவாக, திருமறைக் கலாமன்றக் கீதம் பாடப் பட்டு திறப்பு விழா நிகழ்வுகள் நிறைவுபெற்றன.

திறப்பு விழா நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்த யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திரு. சுந்தரம் அருமைநாயகம், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா மற்றும் இக் கட்டடத்துக்கான வரைபடத்தை வரைந்துதவிய பிரபல சர்வதேச கட்டடக் கலைஞரும், திரைப்படத் தயாரிப்பாளருமான திரு. நவீன் குணரட்ன ஆகியோர் தவிர்க்க முடியாத காரணங்களால் நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது.

கலைத்தூது கலாமுற்றத்தின் திறப்பு விழாவைத் தொடர்ந்து ஓவியக் கூடத்தில் ஈழத்து ஓவியர்களின் ஓவியக் காட்சி ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றமையும், திறப்பு விழா இடம்பெற்ற சம நேரத்தில் மனித உடல் மொழி மூலம் சிற்பம் உருவாக்கப்படும் காண்பியகலை ஆற்றுகையை மன்றக் கலைஞர்கள் ஒரு புறத்தில் நிகழ்த்திக் கொண்டி ருந்தமையும் குறிப்பிடத் தக்கது.

மூன்று தளங்களைக் கொண்ட கலைத்தூது கலாமுற்றம் அடித்தளத்தில் ஓவியப் பட்டறைகள், வகுப்புகள் நடத்து வதற்குரிய தளமாகவும், முதலாவது தளம் ஓவியங்கள் காட் சிப்படுத்தும் நிரந்தரமான தளமாகவும், ஈழத்து ஓவியர்க ளின் ஆவணப் பதிவுகளாகவும் அமையும். பார்வையாளர் கள் எக் காலத்திலும் இவற்றைப் பார்வையிட முடியும். இரண்டாவது தளம் ஓவியக் காட்சிகளை நடத்த விரும்பு பவர்களுக்கு வழங்கப்படக் கூடியதாக அமையவுள்ளது. மேலும், ஓவியப் பயிற்சிப் பட்டறைகள், கலந்துரையா டல்கள், சந்திப்புக்களுக்கான மையமாகவும் கலைத்தூது கலாமுற்றம் செயற்படவுள்ளது. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தின் தேவையை நிறைவு செய்துள்ள ஓவியக்கூடம்

வெளிநாட்டவர் ஒருவர் நம் நாட்டிற்கு வந்தாலோ அல்லது நம் நாட்டவர் ஒருவர் வெளிநாட்டிற்கு விஜயம் மேற்கொண்டாலோ அவர் தான் வருகை தரும் நாட்டில் முதலில் பார்க்கவிரும்புவது அந்த நாட்டின் தேசிய அருங்காட்சியகம், தேசிய கலைக்கூடம் மற்றும் தேசிய நூலகம் ஆகியவற்றையேயாகும்.

முதலாவது; ஒரு நாட்டின் வரலாற்றுப் பெருமைகளை அடையாளப்படுத்தும் ஆவணங்களை - சின்னங்களை, ஏனைய பாரம்பரிய அடையாளங்களை ஆவணப்படுத்தி வைக்கும் தேசிய சொத்தாகும். இரண்டாவது; ஒரு நாட்டின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களின் விலை மதிப்பற்ற நுண்கலைத்துவ பொக்கிஷங்களை பெருமிதத்துடன் பேணிப்பாதுகாக்கும் - காட்சிப்படுத்தி வைக்கும் களஞ்சியமாகும்.

மூன்றாவதான - தேசிய நூலகமானது, அந்தந்த நாட்டு மக்களினதும் சர்வதேச பல்துறை அறிஞர்களினதும் இணையற்ற சிந்தனைக் கருவூலங்களின் சேகரிப்பு பொக்கிஷங்களின் உறைவிடமாகும்.

இந்த வகையில் ஒரு தேசத்தின், தேசிய இனத்தின் கலை கலாசார மற்றும் நுண்கலைத்துவ ஆக்கங்களை, மரபு சார்ந்த கலாவல்லுநர்களின் படைப்பாக்கத்திறன் வெளிப்பாடுகளை சேகரித்து போற்றிப் பாதுகாத்து, ஆவணப்படுத்தி வைக்கப்படும் கலைக்கண்காட்சி கூடங்கள் ஒரு நாட்டின் முன்னோர்கள் பாதுகாத்து அளித்த அருஞ்செல்வங்கள் மூலம் அந்த நாட்டின் உயரிய கலைத்துவ கௌரவத்தை பறைசாற்றி நிற்கின்றன என்பது முக்கிய விடயமாகும்.

இந்த வகையில் கொழும்பில் ஒரு தேசிய கலைக்கூடம் இருப்பது தெரிந்த விடயமே!.

ஆனாலும் எமது தமிழ்க் கலைஞர்களின் கைவண்ணங்களை பாரம்பரிய ரீதியாக, வரலாற்று ரீதியாக ஆவணப்படுத்தி பாதுகாப்பதற்கான - எமது கலைத்துவ முதுசங்களை பேணி வருங்காலத் தலைமுறையினருக்கு 'நாமும் நலியாக் கலையுடையோம்' என்று பெருமையுடன் கையளிப்பதற்கான அமைப்புக்களோ, நிறுவனங்களோ இல்லாதது ஒரு வரலாற்றுத் துயரமாகவே இருந்து வந்துள்ளது.

நமது அரசியல் தலைமைகளும் சரி, அறிஞர் பெருமக்களும் சரி, ஏனைய புத்திஜீவிகளும் சரி, காலத்திற்கு காலம் இது குறித்து ஆக்ரோஷமாக பேசுவதுடனும் அறிக்கைவிடுவதுடனும் அடங்கிப் போவதுதான் இதுவரை நடந்து வந்துள்ளது.

ஒரு சில கலைத்துவ சிந்தனையாளர்களிடம் இது குறித்த தீவிர சிந்தனை இருந்த போதும் அவர்களின் பொருளாதாரப் பலவீனம் தமது உள்ளத்து உணர்வுகளை செயலுருப்படுத்த பெரும் தடையூறாக இருந்தது என்பதும் உண்மையே.

கடந்த மூன்று தசாப்த கால போர் நம்மிடம் இருந்த ஒரு சில சேகரிப்புக்களைக் கூட பேணிப்பாதுகாக்க முடியாது போனமைக்கும் காரணமாகியது.

யுத்தம், இடப்பெயர்வுகள் போன்ற தவிர்க்கவே முடியாத, சூழ்நிலையிலும் பொறுப்புமிக்க கலைத்தேடல் - தாகம் மிக்க சிலர் எமது பெருமைக்குரிய கலைஞர்களின் சிருஷ்டிகளை பேணிப்பாதுகாக்கும் தேசியப் பொறுப்பை கொண்டவர்களாக இருந்துள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமே.

அத்தகைய - எஞ்சியுள்ள கலைப் பொக்கிஷங்களையும், இன்றைய இளம் கலாவிற்பன்னர்களது கலா சிருஷ்டிகளையும் பாதுகாத்து ஒழுங்குபடுத்தி, காட்சிப்படுத்தி வைக்க ஒரு அருமையான நிலையம் ஒன்று யாழ். நகர மையப் பகுதியிலேயே 'கலைத்தூது கலாமுற்றம்' என்ற பெயரில் அமைக்கப்பட்டுள்ளமை ஆத்ம நிறைவு தரும் ஒரு அற்புதமான நிகழ்வாகும்.

கருத்துக்கள், விமர்சனங்களுக்கு அப்பால் ஒரு காலத் தேவையை - கலைத்தேவையை உணர்ந்து நிறைவேற்றி வைத்துள்ள வணக்கத்திற்கும், மதிப்பிற்குமுரிய சம்பந்தப்பட்ட அனைவரும் கலைத்தாயின் ஆசீர்வாதத்திற்குரியவர்களே.

இது ஒரு பெரும் கலைப்பணியின் ஆரம்பமே.

இதனைத் தொடர்ந்து முறையான, துறைசார் நிபுணர்களின் தொலைநோக்கு சிந்தனையுடன் கூடிய திட்டமிடல்களுடன் மேற்கொள்ள வேண்டிய பணிகள் முடிவிலியேயாகும்.

'கலைத்தூது கலாமுற்ற ஓவியக்கூடம்' கலையை, கலைஞர்களை கௌரவப்படுத்தியுள்ளது. எமது தனித்துவ பாரம்பரிய நுண்கலைகளை மகத்துவப்படுத்தியுள்ளது.

**அன்னசத்திரம் ஆயிரம் வைத்தால்**
**ஆலயம் பதினாயிரம் நாட்டல்**
**அன்னயாவினும் புண்ணியம் கோர**
**ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்**

என்று உரத்த சிந்தனையுடன் முழங்கிய 'பாரதி' இன்னோர் கவிதையில்

**சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்**
**செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்**

என்று கூறியுள்ளமையையும் கவனத்தில் கொள்வது முக்கியமாகும்.

நாம் நமது மண்ணின் கலைகளை - கலைஞர்களை, இனங்கண்டு வளர்த்தெடுத்து - கௌரவப்படுத்துவதுடன் இன்று பல்வேறு காரணிகளால் புலம் பெயர்ந்தும்கூட தம் கலைத்துவ செயற்பாடுகளை ஆத்மார்த்தமாய் - தனித்துவ திறனுடன் மேற்கொண்டு வரும் அனைத்து கலைவல்லுனர்களினதும் ஆக்க சிருஷ்டிகளும் சேகரித்து, பாதுகாத்து, ஆவணப்படுத்தி, காட்சிப்படுத்தி வைக்க வேண்டிய பெரும் பொறுப்பும் எமக்குரியதாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது தனித்துவ, இனத்துவ, கலைத்துவ அடையாளங்களை பேணிப்பாதுகாக்காவிடில் எமது இனம் உலக வரலாற்றில் அதற்குரிய பாரம்பரிய - அர்த்த புஷ்டியான - வாழ்வியல் மேன்மைகளை இழந்ததாகிவிடும்.

எனவே எம் முன்னேயுள்ள மானுடப் பொறுப்புக்களை புரிந்து கொண்டு செயற்பட வேண்டியது எங்களது பொறுப்பேயாகும்.

கலைத்தூது கலாமுற்றம் - ஓவியக்கூடம் நமது கலாசாரத்தை மேம்படுத்தும் கலைப்படைப்புக்களின் காட்சி மையமாக எதிர்காலத்தில் விளங்க வேண்டும்.

அதை அப்படி விளங்க வைக்க கலாமுற்றத்து கலாபிமானிகளுடன் கை கோர்க்க வேண்டிய வரலாற்று கடமையை உணர்ந்து கொள்ள வேண்டியது நாம் தான்.

**ச.ராதேயன்**
**மூத்த ஊடகவியலாளர்**

❖

பண்பாட்டு வாழ்வில் ஓவியம், சிற்பம் போன்ற கலைகளுக்கு முக்கிய இடமிருக்கின்றது. மரபு ரீதியானவையாகவும், நவீனத்துவ அம்சங்கள் கொண்டவையாகவும் அவை அமைகின்றன. நம்பிக்கைகளையும், எதிர்பார்ப்புக்களையும், வாழ்வுச் சூழலின் அனுபவங்களையும் அவை வெளிப்படுத்துகின்றன. கலா வெளிப்பாடுகளை நிகழ்த்தும் இத்துறைக் கலைஞர்கள், சிறிய அளவிலாயினும் நம் மத்தியில் தொடர்ந்து இயங்கி வருகிறார்கள்! இக் கலைகள் பற்றியும் கலைஞர் பற்றியும் மக்கள் அறிந்து கொள்வதற்கு, உரிய வாய்ப்புக்கள் எல்லா வகையிலும் அதிகரிக்கப்படுதல் இன்றியமையாதது.

கலைப் படைப்புக்களைக் காட்சிப்படுத்தும் - உரிய வசதிகள் கொண்ட காட்சிக் கூடங்கள், முக்கிய தேவையாகவுள்ளன; அவற்றின் வழியாகவே கலைப் படைப்புக்களுடன் மக்கள் இலகுவாகத் தொடர்பு கொள்ள இயலும். மக்களின் கலைகள் பற்றிய புரிதலும், இரசனையும், படைப்புத் திறனும் வளர்ச்சியுறுவதில், இவற்றுக்கு முக்கிய இடம் இருக்கின்றது.

திருமறைக் கலாமன்றத்தின் 'கலைத்தூது கலாமுற்றம்' உரிய வசதிகளுடனும், அழகிய அமைப்புடனும் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டு, அண்மையில் திறப்புவிழா நடைபெற்றுள்ளது. யாழ்ப்பாணத்திலுள்ள கலைஞர்களுக்கும், கலைகளை நேசிப்பவர்களுக்கும், மகிழ்ச்சியையும் எதிர்கால வளர்ச்சிக்குரிய நம்பிக்கையையும் இந் நிகழ்வு தோற்றுவித்துள்ளது.

நிரந்தரக் கலைச் சேகரிப்புக்களையும் அவ்வப்போது ஒழுங்கு செய்யப்படும் காட்சிகளையும், நமது பிரதேச மக்களும் கலை ஆர்வம் கொண்ட வெளியாரும் இலகுவில் பார்த்து இரசிக்கும் வாய்ப்பு உருவாகியுள்ளது. ஓவிய சிற்பப் பயிலரங்குகள் வாயிலாக, படைப்புத்திறன் கொண்ட படைப்பாளிகளின் உருவாக்கம் நிகழும்; கருத்தரங்குகள் மூலம் கலைஞர்களதும் கலைத் திறனாய்வாளரதும் நேரடிப் பரிச்சயமும், கலைகள் பற்றிய அறிவுப் பரம்பலும் நிகழும். ஓவிய, சிற்பக் கலைகளைப் போஷிக்கும் கலைக்களமாக இது ஒளிரவேண்டும் என்ற எதிர்பார்ப்பு, கலை ஆர்வலர்களிடம் உள்ளது. நமது மண்ணின் கலை வளர்ச்சியில் எல்லோரினதும் கூட்டுழைப்பு ஆதாரமானது என்பதையும் இவ்விடத்தில் நினைவு கொள்வோம்.

**அ.யேசுராசா**
**மூத்த எழுத்தாளர், விமர்சகர்**

❖

பணத்தை முதலீடு செய்து அதன் வழியாகப் பணத்தைப் பெருக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் எம்மவர்களுக்கு மத்தியில்; இம் மாதிரியான சிந்தனைப் போக்கொன்றைச் செயலுருவாக்கஞ் செய்தமையென்பது வியக்கத்தக்கதொரு விடயமாகவே கொள்ளப்பட வேண்டியதாகிறது. மிக நீண்ட காலமாகவே- 'யாழ்.நகர்' ஓவியக் கூடமற்ற நகராகவே இருந்து வந்துள்ளது. நீண்ட கால வெறுமையொன்று திடீரென நிரப்பப்பட்டிருக்கிறது. பொது நிறுவனங்களோ அல்லது பல்கலைக்கழகமோ இந்த விடயத்தில் அக்கறை காட்டாமலே இருந்தும் வந்துள்ளன. ஓவியக்கூடமொன்று எம்மிடம் இல்லையே என்ற எமது மனக்குறை நிவர்த்தி செய்யப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் பொதுசன நூலகம் இருப்பது போல் இப்பொழுது யாழ்ப்பாணத்தில் கலைத்தூது கலாமுற்றமும் இருக்கிறது.

தொடக்க நிகழ்ச்சியிலேயே நூற்றுக்கணக்கான ஓவியங்களைக் காட்சிப்படுத்தியமையும், கலைஞர்களைக் கௌரவித்தமையும் குறிப்பிடத்தக்கனவாகவே உள்ளன. ''ஆக்கபூர்வமான சிந்தனையென்பது ஒரேயடியாக வானத் தில் பறக்காமல் பொருத்தமான தரையைக் கண்டு அதில் தரிப்பதாகவும் இருக்க வேண்டும்''. இந்தக் கூற்று பெருமதிப்பிற்குரிய மரியசேவியர் அடிகளாருக்கும் பொருந்துகிறது என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை. மொழி, மதம், இனம் யாவற்றையும் கடந்து மெய்க்கலையில் ஐக்கியமாகும் தடத்துக்குள் எம்மைக் கொண்டு செல்கிறது.

**கோ.கைலாசநாதன்**
**உதவிக் கல்விப் பணிப்பாளர் (அழகியல்)**
**தென்மராட்சிக் கல்வி வலயம்**


❖

ஈழத்தமிழர்களுடைய கலையுணர்வு கோயிற்கலைகளுக்கப்பால் போவதில்லை. நாதஸ்வர - தவில் ஆகட்டும், தேற்சிற்பமாகட்டும் அவை பெறும் ஆதரவு சமய எல்லைகளால் நிர்ணயிக்கப்படுகின்றது.

மேனாடுகளில் உள்ளது போல் ஓவிய - சிற்ப கூடங்கள் எம்மிடையே இல்லை. அவற்றைப் பார்க்கும் ஆவல் எம்மவரிடையே இல்லை. காசு செலவு செய்து கலையை ரசிக்கும் பண்பாடு தமிழ் நிலத்தில் இல்லை.

எம்மிடமிருந்த கலைச் சேகரங்களும் போரால் அழிந்து போயின. இந்தச் சூழ்நிலையில், திருமறைக் கலாமன்றம் நிறுவியுள்ள கலைத்தூது கலாமுற்றம் ஒரு முக்கியமான தொடக்கப்புள்ளி. கலைஞர்களுக்கு இஃது ஓர் அரிய வாய்ப்பு.

**கவிஞர் சோ.பத்மநாதன் (சோ.ப)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# பரிசு

கருணாகரன்

"என்னுடைய வாழ்வின் பெரும்பகுதி யுத்தத்திலேயே கழிந்தது" என்று நிகலாய் கரமசோவ் தன் மனைவியிடம் சொன்னார். அவருடைய குரல் கம்மியது. தன்னை நியாயப்படுத்தி அப்படிச் சொன்னேனா அல்லது அவளிடம் மன்னிப்புக் கேட்கும் விதமாக அப்படிச் சொன்னேனா என்று அவருக்கே குழப்பமாக இருந்தது. அவர், மனைவியைத் தேடிக்கண்டு பிடிக்க இரண்டு வாரங்களாகிவிட்டன. அவர்கள் வாழ்ந்த கிராமத்திலிருந்து அவருடைய குடும்பம் இடம்பெயர்ந்திருந்தது. தகவல் கிடைத்த போதும் அப்போது உடனடியாக அவரால் வீட்டுக்கு வரமுடிய வில்லை. அவரைப் போலிருந்த ஏராளம் பேரின் குடும்பங் களை பாதுகாப்பாக வேறிடத்துக்கு இடம் மாற்றி வைத்தி ருப்பதாக அவருக்குச் சேதி சொல்லியிருந்தார்கள்.

அப்போதைய தீவிர யுத்த நிலைமையில் தனியே தன்னுடைய குடும்பத்துக்குப் பாதுகாப்புத் தேவை என்று சொல்லிக் கவனமெடுத்து அதைக் காப்பாற்றுவதற்கு வர முடியாது. களத்தில் அதை வேறு விதமாகவே சொல்வார் கள். அவரை எல்லோரும் வித்தியாசப்படுத்திப் பார்க்க வைத்து விடுவார்கள். கேலி கூடச் செய்வார்கள்.

அதனால் மனம் எவ்வளவோ அந்தரித்துக் கொண்டி ருந்தாலும் அதை ஒருவாறு சிரமப்பட்டு கட்டுப்படுத்தி னார். இரவுகளில் குழந்தைகளின் முகமும் அவருடைய மனைவி தனியே குழந்தைகளோடு படும் சிரமங்களும் மனதில் தோன்றியது. பெருகி வரும் துக்கத்தை அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை. அதற்காக அழவும் முடியாது.

"போர்க்களத்தில் இந்த மாதிரி உணர்ச்சிகளுக்கு இட மளித்தால் அது எதிர் விளைவுகளைக் கொண்டு வரும்" என்ற விதி எழுதப்படாமலே வலுவாக இருந்தது. அதனால் எல்லாத் துக்கங்களையும் ஆழப் புதைத்துவிட்டு ஏதாவது காரியங்களில் இறங்கிவிடுவார். ஆனாலும் வீட்டு நினைவு கள் அவரைப் பல வேளையிலும் இழுத்துக் கொண்டு போய் துக்கச் சேற்றில் புதைத்தன.

அவரைப் போலத்தான் மற்றவர்களும் இருப்பார்கள் என்று எண்ணினார். அப்படியில்லாமல் யாரால்தான் கல் லைப் போலவும் இரும்பைப் போலவும் இருக்க முடியும்? ஆனால், யாரும் வெளிப்படையாகக் காட்டிக் கொள்வ தில்லை. தன்வே வாஸிலி மட்டும் சந்தர்ப்பம் வாய்க்கும் வேளைகளில் அபூர்வமாகத் தன்னுடைய குடும்பத்தின் கதையைச் சொல்வான். அவனுடைய கதை கரமசோவின் நிலையை விட மோசமாயிருந்தது. இதையெல்லாம் நினைக்கும் போது அவருக்குச் சிலவேளை எல்லாமே பொய் போல, ஏதோ ஒரு மாய உலகத்தில் நடமாடுவது போலத் தென்படும். உள்ளே உருகும் மெழுகு. வெளியே உறுதி யான இரும்பு. உண்மையில் தான் உறுதியானவன் தானா? மெய்யான வீரன்தானா? என்று அவருக்குச் சில வேளை தன்னைப் பற்றிச் சந்தேகம் ஏற்பட்டது. ஆனால் அதையெல் லாம் பரீட்சித்துப் பார்க்கக் கூடிய இடமல்ல போர்க்களம்.

"ஏன், அதையும் போர்க்களத்தில் பார்த்துத் தான் விடு வோமே" என்று சிலவேளை வேடிக்கை பார்க்க விரும்பும் மனம். நிலைமைகள் அதற்கேற்றாற் போல வாய்ப்ப தில்லை. தவிர, எச்சரிக்கையுணர்வு எல்லாவற்றையும் தடுத்து விடும். அது எச்சரிக்கைகளால் வனையப்பட்ட களமல்லவா!

இப்படியே தனக்குள் மோதிக் கொண்டு இரவெல்லாம் தூக்கமில்லாமல் அவதிப்பட்டார் கரமசோவ். என்ன ஆச்ச ரியமென்றால் அவரைப் போலவே அவருடன் கூட இருந்த வேறு ஆட்களும் இப்படித் தங்களுடைய குடும்பத்தை நினைத்துத் துக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள். தனியே யாரையாவது சந்தித்தால் அவர்கள் தங்களுடைய கண்ணீர் நிரம்பிய துயரக் கதைகளைச் சொல்வார்கள். அவை மாபெரும் துக்கச் சமுத்திரத்தை ஒரு கமண்டலத்தில் வைத் திருப்பது போலத் தோன்றும். ஆனால் எல்லோரும் அதைத் தங்களுடைய இதயத்தின் ஆழத்தில் மறைத்துக் கொண்டு தனியே விம்மிக் கொண்டிருந்தார்கள். அதிலும் தங்களையும் மீறிக் கண்ணீர் பெருகி உடைத்துக் கொண்டு ஓடிவிடும் என்றே அவர்கள் அச்சமடைந்திருந்தார்கள். குருதி பாயலாம் போர்க்களத்தில். ஆனால் கண்ணீர் பாயலாமா? அதற்கு தலைமையாளர்கள் அனுமதிப்பார்களா? என்றாலும் குரு தியைவிடக் கண்ணீரே போரில் கூடுதலாகப் பாய்கிறது. ஆனால், இதைக் கணக்கில் யாரும் எடுத்துக் கொள்வ தில்லை. கடவுளே இதென்ன விதி? கரமசோவ்வுக்கு எது வுமே புரியவில்லை. எல்லாம் குழப்பமாக இருந்தது. குழப் பங்கள் நிறைந்ததே போர்க்களம் என்றும் பட்டது. அவர்கள் எல்லோரையும் எது அப்படி தங்களுடைய துயரத்தையே வெளியே காட்டிக் கொள்ள மறுக்கிறது அல்லது தடுக்கிறது என்று அவர் யோசித்தார். கண்ணுக்குப் புலப்படாத ஒரு மாய வலையில் தாங்கள் எல்லோரும் சிக்கியிருப்பதாகப்பட்டது.

ஏன் எவ்வளவோ நெருக்கடிகளின் போதும் அவர் கூடத் தன்னுடைய நிலைமையை மேலிடத்தில் சொல்லி வீட்டுக்குப் போக முயற்சிக்கவில்லையே. உள் மனம் வீட் டுக்குப் போ, குடும்பத்திடம் போ என்று சொன்னாலும் அவ ரால் வீட்டுக்குப் போய் நிலைமைகளைப் பார்த்து வர வேண்டும் என்ற முடிவை எடுக்க முடியவில்லை. போர்க்

**இப்படியே தனக்குள் மோதிக்கொண்டு இரவெல்லாம் தூக்கமில்லாமல் அவதிப்பட்டார் கரமசோவ். என்ன ஆச்சரியமென்றால் அவரைப் போலவே அவருடன் கூட இருந்த வேறு ஆட்களும் இப்படித் தங்களுடைய குடும்பத்தை நினைத்துத்துக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களத்தில் நிற்கும் போது தான் ஒருவரின் முழு மனமும் கட்டுப்படுத்தப்படுகிறது என்று அவருக்குத் தோன்றியது. மனம் மட்டுமல்ல, வாழ்க்கையும் உண்மையும் எல்லாமே எல்லாமே கட்டுப்படுத்தப்படுகின்றன.

கரமசோவ், நிலைகொள்ளாமற் தவித்தார். அவரையறியாமலே நடுங்கியது உடல். எந்தக் குளிரிலும் கூட ஆடாத உடல். இப்போது தளர்ந்து நடுங்குகிறது. எல்லாவற்றையும் விட சாவது மேல் என்ற எண்ணம் வந்தது. ஆனால் சாவு தான் அவரைத் தீண்ட மறுக்கிறதே. அவரை விடவும் வேறு ஆட்களை அது சாதாரணமாகவே விழுங்கிக் கொண்டிருக்கும் போது அவரை மட்டும் அது விலக்கிக் கொண்டிருந்தது.

நீண்ட காலத்துக்குப் பின்னர் தன்னுடைய வீட்டுக்குத் திரும்பியிருந்த கரமசோவ் மனைவியின் கண்களில் படிந்திருந்த துயரக் கதைகளைத் தொடர்ந்து படிக்க முடியாமற் தவித்தார். அவளுடைய கண்களில் அகதிக் காலத்தின் நிழல் ஒரு கனத்த இருண்ட மலை போல உறைந்திருந்தது. கரமசோவ் ஆச்சரியப்பட்டார். அவர் இதுவரையிலும் பார்த்தது யுத்த களத்தின் போர்க்காட்சிகளையும் அந்தக் காட்சிகள் படிந்த கணங்களையுமே. கண் முன்னே நிகழ்ந்த மரணத்தின் பல நடனங்களை அவர் கண்டிருக்கிறார். மூக்கின் அருகில் வந்து முகர்ந்து விட்டுத் திரும்பிய மரணத்தைக் கண்டு சிரித்துமிருக்கிறார். குருதி மணம் அவருடைய புலன்களில் நிறைந்து கிடக்கிறது. அதெல்லாம் அவருக்குச் சாதாரணம். ஒவ்வொரு கணத்திலும் எதிர்பாராத வகையில் ஒவ்வொரு சாவும் நிகழும் போது அவருக்கு பல திசைகள் தெரிந்திருக்கின்றன. சில போது திசையோ திக்கோ தெரியாமலே அவர் இருண்டு மூடுண்ட அகழிக்குள் வீழ்ந்துமிருக்கிறார். அதைப் போல மிகப் பிரமாண்டமான ஒளியையும் அவருடைய கண்கள் கூசக் கண்டிருக்கின்றன. வெற்றிக் கொடிகளை வானத்தில் ஏற்றி விட்டு அவர் மேகங்களுக்கு ஊடாக மிதந்து சென்றதும் உண்டு. அங்கிருந்து தொப்பென கீழே வீழ்ந்ததும் உண்டு. ஆனால் இப்போது இதை, இந்த மாதிரியான ஒரு நிலையை அவர் சற்றும் எதிர்பார்க்கவில்லை. இது எல்லாவற்றையும் விடக் கடினமான ஒரு வலி நிரம்பிய பிரதேசம்.

கரமசோவ் திடுக்கிட்டார். அவர் போர்க்களத்தில் சந்தித்தவை வேறு. இங்கே வீட்டிலுள்ள யதார்த்தம் வேறு. அவரால் போர்க்களத்தில் வெற்றிகரமாக நிலைமையைச் சமாளிக்க முடியும். அதில் அவர் தேர்ச்சியும் பெற்றிருந்தார். போர் ஒரு வகையில் கணிதம் போன்றது தான். அதில் சமன்பாடுகளையும் பின்னங்களையும் போடவும் தீர்க்கவும் அவருக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. அவர் அதில் கெட்டிக்காரராகவுமிருந்தார். ஆனால் வீடு அப்படியல்ல. களத்தில் எத்தனையோ விதமான சாகசங்களை நிகழ்த்திய கரமசோவ் இப்போது வீட்டில் எதுவும் செய்ய முடியாமல் தடுமாறினார். உண்மையில் போர்க்களத்தை விடவும் வீடு தான் பயங்கரங்களின் விளை நிலமாக இருக்கிறது போலும் என்று பட்டது. இதைத் தான் இவ்வளவு நாளும் புரிந்து கொள்ளாமல் இருந்திருக்கிறேனே என்று நினைத்தார். எளிதில் வீட்டின் நிலைமையைச் சீராக்க முடியுமென்று அவருக்குப் புரியவில்லை. வீடு யுத்த களத்தையும் விட பிரமாண்டமான போர்க்களமாகியிருந்தது. இங்கே எதிரிகள் என்று யாரும்

**நீண்ட காலத்துக்குப் பின்னர் தன்னுடைய வீட்டுக்குத் திரும்பியிருந்த கரமசோவ் மனைவியின் கண்களில் படிந்திருந்த துயரக் கதைகளைத் தொடர்ந்து படிக்க முடியாமற் தவித்தார். அவளுடைய கண்களில் அகதிக் காலத்தின் நிழல் ஒரு கனத்த இருண்ட மலை போல உறைந்திருந்தது.**

இல்லை. பீரங்கிகளில்லை, பெரும்படையில்லை, யுத்த விமானங்களில்லை, போரிடும் தளபதிகளில்லை, போராயுதங்களுமில்லை. இன்னும் சொன்னால் அவரிடம் துப்பாக்கி இருக்கிறது. போரிடும் ஆற்றலும் அனுபவமும் உண்டு. ஆனால் வீட்டில் யாரிடமும் எதுவும் இல்லை. அப்படியென்றால் தான் எதற்காக அஞ்சுகிறேன்? என்று அவருக்குக் குழப்பமாக இருந்தது.

களத்தில் அவரிடம் பெரும் படையிருந்தது. பீரங்கிகளிருந்தன. எதிரிகளைத் திணறடிக்கும் திறனும் வல்லமையுமிருந்தது. பெரும் தந்திரங்களிருந்தன, வியூகங்களை வகுக்கும் கெட்டித்தனமிருந்தது. எதிர் வியூகங்களை உடைக்கும் ஆற்றலிருந்தது. இப்போது இதெல்லாம் பயனற்றதாகி விட்டன. அவருடைய இதுவரையான ஆற்றல்கள் எல்லாம் பொய்யானவை என்று தோன்றியது. இந்தக் கணத்தின் நிலை அதை நிரூபிக்கிறது. இதை விட இதற்கு வேறென்ன சாட்சி வேண்டும்? தன்னுடைய ஆற்றல் குறித்த சந்தேகம் முதல் தடவையாக அவருக்கு ஏற்பட்டது. தான் தோற்கடிக்கப்பட்டுவிட்டதாக அவர் முழுமையாக நம்பினார். அப்படித் தோற்கடிக்கப்பட்டிருப்பது கூட ஒரு வகையில் ஆறுதல் தான். அதுதான் இப்போது தேவை போலவும்பட்டது. எத்தனை காலந்தான் வெற்றிக்கும் தோல்விக்குமிடையில் கிடந்து அலைவது?

என்றாலும் அவர் அஞ்சினார். தான் ஏதோ ஒரு நிலையில் தோற்றுக் கொண்டிருப்பதாகத் தோன்றியது. அது முடிவில்லாத தோல்வி. ஏற்க முடியாத தோல்வி. எதற்காகத் தோற்கிறேன் என்று கூட அவருக்குத் தெரியவில்லை. ஆனால் அவரால் அந்த உணர்விலிருந்து தன்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அது மெல்லிய குளிர் படர்ந்த காலைப் பொழுது என்ற போதும் அவரால் அதை, அந்த ஒளியும் மென் கதகதப்பும் நிறைந்த பொழுதை அப்படி உணர முடியவில்லை. வெக்கையும் இருளும் உள்ளூர அதற்குள் நிறைந்திருப்பதாகவே தோன்றியது.

பறவைகளின் காலை ஆரவாரக் குரல்கூட தன்னைப் பார்த்து கேலிப்படுத்துவதாகப்பட்டது. என்ன, எல்லாமே மாறித் தெரிகின்றன என்று அவருக்குக் குழப்பம். எது தான் மாறியிருக்கவில்லை? தான் மட்டும் என்ன இயல்பாகவா இருக்கிறேன் என்று நினைத்த போது அவருக்கு இதயம் நின்றுவிடும் போல கனத்து, இயங்க மறுத்தது.

அவர் கடவுளை நினைத்தார். முன்னர் அவருக்குக் கடவுள் பற்றிய அக்கறையெல்லாம் கிடையாது. அதற்கெல்லாம் அவருக்கு நேரமிருந்ததும் இல்லை. மரணத்தின் இழைகள் அவருடைய கழுத்தை இறுக்கிய கணங்களில் கூட அவர் கடவுளைக் குறித்துச் சிந்தித்ததில்லை. அத்துடன் கடவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய அவசியமும் இருக்க வில்லை. அவர் மரணத்தையே விலக்குவதற்காகப் போரா டிக் கொண்டிருந்த போது சிந்திக்காத கடவுளையா இப் போது சிந்திக்க முடியும்?

மரணத்தின் விளிம்புகளுக்கு அவர் பல தடவை சென்று திரும்பியிருக்கிறார். ஆனால் அப்போதெல்லாம் கூட அவர் எதற்கும் அஞ்சிவிடவில்லை. அந்த நெருக்கடியான சந்தர்ப் பங்களெல்லாம் பிறகு அவருக்கு சுவாரஷ்யமானவையாகவே இருந்திருக்கின்றன. மரணத்துடன் போராடுவது அவருக்கு ஒரு சுவாரஷியமும் சாதனையுமாக இருந்திருக்கிறது. அந் தச் சந்தர்ப்பங்களைப் பிறகு அவர் மகிழ்வோடு பல தடவை களில் நினைவு கூர்ந்திருக்கிறார். அவற்றையிட்டு அவருக்கு உள்ளூரப் பெருமையும் மகிழ்ச்சியும் வியப்பும் தான் ஏற் பட்டிருக்கின்றன.

எப்போதும் அவர் அந்த அபாயமான நிலைமைகளை யிட்டு வருந்தியதில்லை. மரணம் அவருக்கு மகிழ்ச்சியான வேடிக்கை விளையாட்டு. அவரைச் சுற்றி அது விசவளையங் களாகச் சூழ்ந்திருந்த போதும் அவர் அதையிட்டு என்றைக் கும் கவலைப்பட்டதோ அக்கறைப்பட்டதோ இல்லை. அவருக்குத் தேவை எதிலும் வெல்வதே. வெற்றி தான் ஒரே குறி. அதையே அவர் எப்போதும் விரும்பினார். அதையே தன்னுடைய மேலிடத்துக்குப் பரிசளிக்க விரும்பினார். அதைத்தான் அவர் பரிசளிக்கவும் முடியும்.

மேலிடம் வெற்றியைத் தவிர வேறெதையும் எதிர் பார்க்கவில்லை. வேறெதையும் அதற்குக் கொடுக்கவும் முடியாது. அது வெற்றிக்காக, தொடர் வெற்றிகளுக்காகவே காத்துக் கொண்டிருந்தது. வெற்றிக்காக அவர் என்ன வெல்லாமோ செய்ய வேண்டியிருந்தது. ஒரு வெற்றி, இரண்டு வெற்றி போதாது. தொடர்ந்து வெற்றிகளை ஈட்டிக் கொண்டே இருக்க வேண்டும். அதற்கு எல்லையில்லை. ஆனால் அது எப்போதும் சாத்தியமாகுமா? எதிர்த்தரப்பு என்ன சாதாரணமானதா? அவர்கள் என்ன எப்போதும் பொய்ப்பூவைப் பறித்துக் கொண்டா இருப்பார்கள்?

வெற்றியை எதிர்பார்க்கும் மேலிடத்தின் தாகம் எளிதிற் தீர்ந்து விடுவதில்லை. இது முடிவில்லாத பெருவிடாய். அதற்காக அவர் என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்து கொண்டேயிருந்தார். அவர் மட்டுமா அப்படி உழைக்கிறார். அவரைப் போல எத்தனையோ பேர் அப்படி. ஆனால் எதுவும் முடிகிறமாதிரித் தெரியவில்லை. இதென்ன பைத்தியக்காரத்தனம்? தான் செய்வது உண்மையில் பைத்தியக்காரத்தனம் தானோ. எல்லோரும் ஏதோ பைத்திய நிலைக்கு ஆளாகிவிட்டார்களா?

> **பறவைகளின் காலை ஆரவாரக் குரல்கூட தன்னைப் பார்த்து கேலிப்படுத்துவதாகப்பட்டது. என்ன, எல்லாமே மாறித் தெரிகின்றன என்று அவருக்குக் குழப்பம். எது தான் மாறியிருக்கவில்லை? தான் மட்டும் என்ன இயல்பாகவா இருக்கிறேன் என்று நினைத்த போது அவருக்கு இதயம் நின்றுவிடும் போல கனத்து, இயங்க மறுத்தது.**

ஒரு தடவை அவர் நள்ளிரவுச் சண்டையில் தன்னுடைய சகாக்களை முற்றாக இழந்து தனித்திருந்தார். அன்று உக்கிரமான மோதல் நடந்தது. இரண்டு தரப்புக்குமிடை யில் நடந்த அந்தப் பெரும் மோதலில் யார் வெல்வார்கள் யார் தோற்பார்கள் என்று தெரியாத அளவுக்கான கள நிலைமை. அந்த மாதிரி நிலைமைகள் போர்க்களத்தில் ஏற் படும் போது எதையும் தீர்மானிப்பது கடினம். கணிதத்தின் எல்லாச் சமன்பாடுகளும் அப்போது இறுகிவிடும். அல்லது செயலிழந்து போகும். வியூகங்கள் தகரும் வெளி அது. வியூகங்கள் தகரத்தகர மரணம் விளைந்து கொண்டேயி ருக்கும். காலடியில், கண்ணுக்கு முன்னே அது விளையும். அப்படியொரு விளைச்சல் வேறு எதிலும் நிகழ்வதில்லை. ஆனால் அப்படி விளையும் மரணத்தைக் கட்டுப்படுத்து வதும் வியூகங்கள் தான் என்று கரமசோவ் பல தடவை உணர்ந்திருந்தார்.

அன்று பனி மிகக்கூடுதல். மலைப் பிரதேசம் வேறு. பீரங் கிகள் வெறி கொண்டு முழங்கிக் கொண்டிருந்தன. எங்கும் தீயும், புகையும், அவலக் குரல்களும், குருதியும், நிணமும். மனிதன் பிறந்தது இப்படி அழியத்தானா என்று ஒரு கணம் அவருக்குள் ஒரு பொறி தட்டியது. அது சட்டெனப் பற்றிப் பெருந்தீயாய் மூண்டது.

இப்படியெல்லாம் அழிந்து தானா வாழ வேண்டியி ருக்கிறது? இதென்ன பேய்த்தனம் என்று சில போது அவர் யோசித்திருக்கிறார். ஆனால் இதையிட்டெல்லாம் அவர் யுத்த களத்தில் குழம்பியதோ பின்வாங்கியதோ கிடையாது. அவரை நோக்கி வந்த மரணத்தை அவர் விரட்டி வென்றி ருக்கிறார். போர்க்களத்தில் மரணத்தை விரட்டுவது தான் வெற்றி. அது தான் போரின் வெற்றியைத் தருகிறது. அங்கே தோல்வியின் நிழலைப்படர அனுமதிக்க முடியாது. அனு மதித்தால் அந்த நிழலின் மறைவில் மரணம் பெரிய திறந்த வாயுடன் வெறி கொண்டு வந்து விழுங்கி விடும். ஆகவே, அவர் அருகிலிருந்த புதருக்கருகில் - மறைவிடமொன்றில் இறந்த சடலத்தைப் போலப் படுத்திருந்தார். அந்தத் தந்திரமே அவரை இறுதியிற் காப்பாற்றியது.

ஒருவருக்கு வெற்றியைத் தரும் போர்க்களம் இன்னொ ருவருக்கு தோல்வியைப் பரிசளிக்கிறது. அந்தத் தோல்வி வெறுமனே தலை கவிழ்ந்து கொண்டு போவதுடன் மட்டும் முடிவதில்லை. அது மரணத்தையும் மீள முடியா அபாயக ரமான நிலைமைகளையும் கொண்டு வருகிறது.

அவர் போர்க்களத்தில் சந்தித்த பல தருணங்களைப் பற் றியும் ஆழமாகச் சிந்தித்திருக்கிறார். சில வேளை அங்கேயுள்ள நிலைமைகள் பற்றி அவருக்குச் சிரிப்பு வந்திருக்கிறது. அவை சிரிக்கக்கூடியவை இல்லை என்ற போதும் அவரால் சிரிக்காமலிருக்க முடியவில்லை. உண்மையில் சிரிப்பூட்டக்கூடிய சங்கதிகள் நிரம்பிய மண்டலம் தான் அது. அதை யாரும் புரிந்து கொள்ளவோ ஏற்றுக்கொள்ளவோ மாட்டார்களே தவிர அது தான் உண்மை.

அவருடைய பிள்ளைகள் இப்பொழுது அவரைக் கண்டு மகிழ்ந்தாலும் அவர்களால் தந்தையோடு இயல்பாக இருக்க முடியவில்லை. குழந்தை முகங்களில் தெரியும் மகிழ்ச்சிக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிலாக ஏதோ துயர நிழல் அந்த வயதிலேயே படிந்திருந்தது. அந்த வயதில் இப்படியொரு சாபமா அவர்களுக்கு? இந்தச் சாபத்தில் எனக்கும் பங்குண்டா? என்று அவர் மனம் உணர்ந்த கணத்தில் அவருடைய உடல் பதறியது? உலர்ந்த உதடுகளை நாவால் ஈரப்படுத்தினார். தாகமெடுத்தது. ஏதாவது குடிக்க வேண்டும். எதையும் விட தண்ணீரைக் குடித்தால் பரவாயில்லை. தண்ணீருக்கு நிகராக எந்தப் பானமும் உலகில் இல்லை. அந்த நிலைமையிலும் இப்படிச் சிந்திக்க முடிகிறதே என்று அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

என்ன ஆச்சரியம்? தன்னுடைய நிலையைப் போலவே இந்தக் கதையும் இருக்கிறதே என்று தீராத திகைப்படைந்தான் சுந்தரி. இதற்கு மேல் அவனால் அதைப் படிக்க முடியவில்லை. யுத்தம் எங்கும் எப்போதும் ஒரே மாதிரியான நிலைமைகளைத்தான் உருவாக்கிக் கொண்டிருக்கிறதா? இல்லையென்றால், கரமசோவின் அதே உணர்வலைகளும் தன்னுடைய உணர்வலைகளும் எப்படி ஒன்றாக, ஒரே மாதிரியாக இருக்க முடியும்? எந்த வேறுபாடுகளும் இல்லாது கரமசோவும் தானும் ஒரே பிரச்சினைகளை எதிர்கொள்ளும் யதார்த்தம் எப்படி அமைந்தது? அவர் படையினரா அல்லது போராளியா என்று கூடத் தெரியாது. அதற்கு அவசியமுமில்லை. அந்தக் காலமும் தன்னுடைய காலமும் ஒன்றல்ல. களமும் வாழ்க்கையும் கூட வேறு வேறு. ஆனால் இருவரின் நிலைமையும் ஒரு புள்ளியைக் கொண்டிருப்பது ஆச்சரியமில்லாமல் வேறு எப்படியிருக்கும்?

சுந்தரி போர்க்களத்திலிருந்து ஒரு வார விடுப்பில் வீட்டுக்கு வந்திருக்கிறான். வீட்டுக்கு வந்திருக்கிறான் என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, உண்மையில் அவன் வீட்டுக்கு வரவில்லை. அகதிகளின் குடியிருப்பிற்கு வந்திருக்கிறான். அங்கேதான் அவனுடைய குடும்பம் இடம் மாறியிருக்கிறது. ஒன்றரை ஆண்டுகளாக அவனுக்கு வீட்டோடு தொடர்பில்லை. அவர்கள் வேறிடத்திலிருந்தார்கள். அவன் வேறு பகுதியில் நின்றான். சந்திக்கவே முடியாத நிலை. போர் அவர்களை வேறாகவும் அவனை வேறாகவும் வைத்திருந்தது.

சண்டை தீவிரமான போது குடும்பம் இடம்பெயர்ந்து எங்கெல்லாமோ அலைந்து திரிந்து உருக்குலைந்து, அவன் தங்கியிருந்த பிரதேசத்துக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு வந்திருந்த போதும் அவனால் உடனடியாக வந்து அவர்களைச் சந்திக்க முடியவில்லை. அவர்கள் வந்த போது அவன் வேறிடத்துக்கு மாற்றப்பட்டிருந்தான். அவர்கள் வந்து தங்கியிருந்த இடம் புதியது. சண்டை வேறு உக்கிரமாக நடந்து கொண்டிருந்தது. அதனால் மீண்டும் அங்கிருந்து இடம்பெயர்ந்து அகதிக்குடியிருப்புக்கு பிள்ளைகளை அழைத்துச் சென்றிருந்தாள் அவனுடைய மனைவி.

அங்கே இருப்பது தான் பாதுகாப்பானது என்று நினைத்து அவனுடைய மனைவி அங்கு வந்திருந்தாள். குண்டு வீச்சு விமானங்கள் கதி கலங்கத் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருந்தன. அவள் சனங்களோடு கூடியிருப்பதே பாதுகாப்பானது என்று எண்ணிக் கொண்டாள். அது ஓரளவு உண்மை தான். அகதி முகாமுக்குக் குண்டு வீசமாட்டார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லை. என்றாலும் வேறிடத்

> **ஒருவருக்கு வெற்றியைத் தரும் போர்க்களம் இன்னொருவருக்கு தோல்வியைப் பரிசளிக்கிறது. அந்தத் தோல்வி வெறுமனே தலை கவிழ்ந்து கொண்டு போவதுடன் மட்டும் முடிவதில்லை. அது மரணத்தையும் மீள முடியா அபாயகரமான நிலைமைகளையும் கொண்டு வருகிறது.**

தையும் விட அது பாதுகாப்பானது என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேணும். தவிர, சர்வதேச தொண்டு நிறுவனங்கள் அகதி முகாமைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருப்பதால் கொஞ்சம் மனத்தெம்புண்டு. ஆனால் யுத்தத்தில் எதையும் உறுதிபடச் சொல்ல முடியாது. எதிர் மனோபாவம் எதையும் செய்யத் தூண்டும்.

அகதிக் குடியிருப்பில் அவன் தன்னுடைய குடும்பத்தைச் சந்திக்கும் கணத்தை நெருங்கும் போது தனது நிழலே தன்னை விழுங்குவதாகப்பட்டது. எப்படி அவளைப் பார்ப்பது? அவள் என்ன சொல்லப் போகிறாள்? எப்படி இருப்பாள்? குழந்தைகள் எப்படியிருப்பார்கள்? எதையும் எண்ணாமலே இருந்தால் பறவாயில்லை என்று பட்டது. போர் தன்னையே விழுங்கிக் கொண்டிருக்கிறதா? கரமசோவ் எங்கே தன்னுடைய வெற்றியைக் கண்டார்? அவர் முடிவற்றுத் தோற்றுக் கொண்டிருப்பதை அறியாமலா வெற்றிக்காக உழைத்தார்? எது வெற்றி? எது தோல்வி? முடிவற்ற பைத்திய நிலையில் தானும் சிக்கிக் கொண்டதாக அவனுக்குப்பட்டது. அவன் எதையும் முடிவு செய்யும் எந்தப் புள்ளியிலும் இல்லை. வெறுமனே இயக்கப்படும் ஒரு கருவியாகவே இருப்பதை அப்பொழுது முதற்தடவையாக உணர்ந்தான். வெட்கம் அவனுடைய உடலில் குளிராகவும் வெக்கையாகவும் தீராத விசத்தைப் போலவும் ஒரே நேரத்தில் படர்ந்தது. உடல் நடுங்கியது, ஆயிரம் கத்திகள் உடலில் பாய்ந்ததாக உணர்ந்தான். இவ்வளவுக்கும் இன்னும் அவன் தன்னுடைய குடும்பத்தைச் சந்திக்கவில்லை. இப்போது தான் அவர்கள் இருக்கும் அந்தக் குடியிருப்புக்கே வந்திருக்கிறான்.

இந்த நிலையில் அவர்களை எப்படி எதிர்கொள்வது? என்பதே பெரும் தயக்கமாவும் அச்சமாகவும் இருந்தது. பேசாமற் திரும்பிப் போய்விடலாமா என்று தோன்றியது. ஆனால் எப்படிப் போகமுடியும்? எந்த வகையில் அது நியாயமாகும்? இப்படி ஒரு கோழையாகிவிட்டேனே? யுத்தம் எப்படியும் ஒவ்வொருவரையும் பலியெடுத்துக் கொண்டும் பழி தீர்த்துக் கொண்டுமே இருக்கிறது. இப்போது தானும் ஒரு அகதியே. அகதி என்பதன் பொருள் என்ன? தோற்கடிக்கப்பட்ட மக்கள் என்று தானே அர்த்தப்படுகிறது? அப்படியென்றால் தானும் தோற்கடிக்கப்பட்டுத்தான் விட்டேனா?

"யாரைத் தேடுகிறீர்கள்" அவனை யாரோ விசாரித்தார்கள். தன்னுடைய குடும்பத்தைத் தேடுகிறேன் என்று சொல்வதா? அல்லது அகதிகளைத் தேடுகிறேன் என்று சொல்வதா?

"என்ரை குடும்பம் இங்கதானிருக்கு. இப்பதான் வாறன்" என்றான் அவன். தன்னுடைய வார்த்தையில் எந்தச் சாரமும் உயிர்ப்பும் இல்லாமலிருந்ததை உணர முடிந்தது.

"எங்கேயிருந்து வருகிறாய்?" என்று அவர்கள் மறு கேள்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கவில்லை. அது பேராறுதல். தானும் அதைச் சொல்லாமல் விட்டது பரவாயில்லை என்று நினைத்தான். இவ்வளவுக்கும் போரில் எவ்வளவோ வெற்றிகளை அவன் பெற்றிருக்கிறான். அதற்காகத் தன்னுடைய ஒரு கையைக்கூட அவன் இழந்திருக்கிறான். அதற்காக முதலில் வருந்திய போதும் பின்னாளில் அது சதாரண விசயமாகிவிட்டது. போர் வாழ்வு பெரும்பாலும் அவனுக்குச் சாகஸங்கள் நிரம்பியதாகவே இருந்தது. ஆனால் போரின் அச்சத்தை வெல்ல முடியவில்லை. அது எங்கே எப்படியோ மறைந்து கொண்டுதானிருக்கிறது. அதுவே எல்லோரையும் நிலைகுலைய வைத்துள்ளது.

சனங்கள் அங்குமிங்குமாகப் போய்க்கொண்டிருந்தார்கள். ஒரு சந்தையின் ஆரவாரத்தோடு இரைச்சலால் நிரம்பியிருந்தது குடியிருப்பு. சேறும் சகதியும் நிரம்பிய வாடை, அழுகுரல்கள், வசவுகள், காய்ந்து கந்தலான ஒரு பழைய துணிவிரிப்பைப் போல அந்தக் குடியிருப்பும் மனிதர்களும் தோன்றியது அவனுக்கு. இதில் தான் எங்கே?

வைகாசி மாதத்தின் வேனிற்காலத்தை சற்றும் உணர முடியவில்லை. மரங்கள் இளந்தளிர்களோடிருந்தன. பறவைகளின் கீச்சுக் குரல் இன்னும் ஆரவாரத்தைக் கூட்டியது. கால்கள் தொடர்ந்து முன்னேறத் தயங்கின. மனம் தயங்கும் போது உடலின் அனைத்துப் பாகங்களும் செயலிழந்து போகின்றன. இதை அவன் போர்க்களத்திலேயே நன்றாக உணர்ந்திருக்கிறான். அங்கே பாய்ந்து முன்னகரும் கால்களும் மனமும்இங்கே தடுமாறுவதன் காரணம் என்ன? குடும்பம் என்பது எல்லாவற்றையும் விட மென்மையான அதே வேளை மிகக் கடினமான ஒரு அதிசய பாத்திரமா? அல்லது வேறு ஏதோ ஒரு புரியாத பொருளா? அதைத் தீண்டுவதும் நெருங்குவதும் அத்தனை கடினமானதா?

கரமசோவ் தன்னுடைய குடும்பத்துடன் எப்படி இணைந்திருப்பார்? அதற்காக என்ன செய்திருப்பார்? அவர் பிறகு போர்க்களத்துக்குத் திரும்பினாரா?

"பெயரைச் சொல்லுங்கள், எங்கே இருக்கிறார்கள் என்று பார்க்கலாம்" என்று அவர்களில் ஒருவர் உதவும் தோரணையோடு கேட்டார்.

அட இவர்கள் இன்னும் தன்னையே கவனித்துக் கொண்டா இருக்கிறார்கள் என்று சுந்தரிக்கு ஆச்சரியமாக இருந்தது. தன்னுணர்வில்லாத நிலைக்கு ஆட்பட்டிருக்கும் தருணத்தில் தான் சிக்கியிருக்கிறேன் என்று உணர்ந்தான்.

இன்னும் தன்னுடைய குடும்பத்தைச் சந்திக்கவில்லை. சந்திக்கும் போது அந்தத் தருணத்தை எப்படி எதிர்கொள்வதென்றே தெரியவில்லை. அந்தத் தருணத்தை நினைக்கவே பயமாக இருந்தது.

வைகாசி மாதத்தின் வேனிற்காலத்தை சற்றும் உணரமுடியவில்லை. மரங்கள் இளந்தளிர்களோடிருந்தன. பறவைகளின் கீச்சுக் குரல் இன்னும் ஆரவாரத்தைக் கூட்டியது. கால்கள் தொடர்ந்து முன்னேறத் தயங்கின. மனம் தயங்கும் போது உடலின் அனைத்துப் பாகங்களும் செயலிழந்து போகின்றன.

கரமசோவ் மிக மிகத் துக்கப்பட்டிருப்பார். வாழ்வில் எப்போதும் யாரும் சந்தித்திராத மாபெரும் நெருக்கடியான தருணத்தைச் சந்தித்திருப்பார். அவர் விரும்பாத தருணமும் நிலையும் அதுவாகத்தானிருக்கும். அவருக்கு முழுப் பொறுப்பில்லாத நிலை அது. ஆனாலும் அதை அவர் எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது.

இப்போது தானும் அந்தப் பொறியில்தான் சிக்கியிருக்கிறேன். யுத்தம் எப்போதும் எங்கும் பொறிகளையே உருவாக்குகிறது. பொறியிலிருந்து விடுபடுவதற்காகவே நாம் யுத்தத்தைச் செய்கிறோம் என்று சொல்லிக் கொண்டாலும் நடைமுறையில் அது ஒரு பொறிக்குப் பதிலாக எண்ணற்ற பொறிகளையே உற்பத்தியாக்குகிறது. கடக்க முடியாத பொறிகள், காலம், இடம் என்ற பேதங்களில்லாமல் இதுவே எப்போதும் உண்மையாக இருக்கிறது. இப்போது அப்படியான பொறியில் தான் தானும் இந்தச் சனங்களும் சிக்கவைக்கப்பட்டுள்ளோம் என்று நினைத்தான்.

"மகிழ்ச்சியின் கண்ணிகளை வேட்டு வைத்தபடி போர் வெறிக்காற்றாகச் சுழன்றடிக்கிறது. இந்த வெறி எப்படி இன்னும் தீராமலே தொடருகிறது?" அவனால் எதையும் நிதானிக்க முடியவில்லை. இப்போது அவன் அந்தக் குடியிருப்பிலிருந்து விலகி வந்திருந்தான்.

குடும்பத்தைச் சந்திக்க முடியவில்லை. சற்றுப் பொறுத்து தன்னைச் சற்று நிதானப்படுத்திக் கொண்டு போகலாம் என்று மனம் சொல்லியது. இதென்ன ஒத்திகையா? அப்படியொரு நிலை உருவாகிவிட்டதா? இதெவ்வளவு கொடுமை? எவ்வளவு ஆவலோடு களமுனையிலிருந்து ஓடிவந்தேன். பிள்ளைகளையும் மனைவியையும் பார்ப்பதற்கென்று? ஆனால் இப்போது தயக்கமும் அச்சமும் அல்லவா பெருஞ்சுவராக முன்னிற்கின்றன? எப்படி இதைக் கடப்பது?

அவன் களமுனைக்குச் செல்வதற்கு முதல்நாள் கூட அவர்கள் அவனோடு எத்தனை அன்பாகவும் நெருக்கமாகவும் இருந்தார்கள்? அந்த மகிழ்ச்சிக்கும் இப்போதுள்ள நிலைமைக்கும் தான் எத்தனை இடைவெளியாகிவிட்டது. இப்போது தான் இப்படித் தடுமாறித் தயங்கிக் கொண்டிருக்கும் இந்தக் கணத்தில் தன்னுடைய மனைவி தன்னைப் பார்த்தால் என்ன செய்வாள்? என்னதான் தன்னைப் பற்றி எண்ணுவாள்? தான் எப்போது வீரனாக இருந்திருக்கிறேன்? அப்படி வீரனென்றால் இப்போது இதையெல்லாம் எதிர்கொள்ள முடியாமல் தவிப்பதேன்? அவனுக்கு பைத்தியம் பிடித்துவிடும் போலிருந்தது.

"கரமசோவ் என் தோழனே நாங்கள் தோற்று விட்டோம். முடிவில்லாத தோல்வி. மீள முடியாத சூழலில் அடித்துச் செல்லப்படும் துரும்புகளாக்கப்பட்டுவிட்டோம் நண்பனே. கடவுளே, எனக்கு வேறு வழியில்லையா?" அவன் விம்மி விம்மி அழுதான்.

அந்த அகதி முகாம் வாசலில் "யாரோ ஒருவன் எதற்காகவோ அழுது கொண்டிருக்கிறான்" என்று யாரோ சொல்லிக் கொண்டு போனார்கள். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதிமரங்கள் துளிர்க்கின்றன!

அபயம் கேட்ட கைகள்
அறுத்தெறியப்பட்டன
அடைக்கலம் தேடிய
அபலைகள் அழித்தொழிக்கப்பட்டனர்!

பிணந்தின்னும் குழிகள்
பிறந்து வாழ்ந்தது
ஏதிலிகள் அதற்கன்று
ஏற்ற உணவானது!

கந்தகப் புகையையும்
கக்கிடும் குண்டையும்
தாண்டி வந்தோர்க்கு
தாரை வார்க்கப்பட்டது
பிணக் குழிகள்தான்!

பேசும் சுதந்திரம் கத்தரித்து
செம்மறிக் கூட்டமாய்
மேய்ப்பிக்கப்பட்டு
வீசு மனிதமும்
விறாண்டி அழிக்கப்பட்ட
வரலாற்றுத் துரோகமிது!

போர் என்ற போர்வைக்குள்
நீயும் நானுமாக
வேர் புகுந்து செய்த
வேண்டாத செயல்கள் எத்தனை?

தேடித்தேடியே
தேய்ந்த உறவுகள்
தேம்பித் தேம்பி அழுவதற்காய்
கூடிக் கிடக்குது புதைகுழிகள்!

மனித மிருகங்கள்
முடி கொண்ட மண்ணிலே
புனிதத்தை எப்படி
பூப்பிக்க முடியும்?
கொல்லாமை பேசும்
கொலைகார சமூகத்தால்
இல்லாமற் செய்த
உறவுகள் எத்தனை?

புதை குழிகளின் புதையல்
இந்தத் தீவென்று
புதிய வரலாற்றை
எழுதுவதற்காகவே
போதி மரங்கள் இப்போது
துளிர்க்கின்றன!

சூரியநிலா

# அஞ்சலிகள்...

❖ திருமறைக் கலாமன்றத்தின் மூத்த அங்கத்தவரும், முன்னாள் பொதுச் செயலாளரும், ஒரு காலகட்டத்துக்குரிய மன்றத்தின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவருமான யாழ்ப்பாணம், குருநகரைச் சேர்ந்த வி.ஜே. கொன்ஸ்ரன்ரைன் தனது 71 ஆவது வயதில் 08.11.2013 இல் காலமானார்.

❖ நாட்டுக் கூத்துக் கலைஞரும், மெல்லிசைப் பாடகருமான யாழ்ப்பாணம், பாசையூரைச் சேர்ந்த டேவிட் ராஜேந்திரன் 20.12.2013 இல் தனது 65 ஆவது வயதில் லண்டனில் காலமானார். இலங்கை வானொலியில் பணியாற்றிய போது நாட்டுக் கூத்துக்களை ஒலிப் பதிவு செய்து, வானொலியில் ஒலிபரப்பியதுடன், 'நாடக மேடைப் பாடல்கள்' என்னும் நிகழ்ச்சியை முதன் முதலில் வனொலியில் அறிமுகப்படுத்தியுமிருந்தார்.

❖ ஈழத்தின் மூத்த படைப்பாளியும், மட்டக்களப்பு, ஆரையம் பதியைச் சேர்ந்தவருமான அன்புமணி (இரா.நாகலிங்கம்) 12.01.2014 இல் தனது 78 ஆவது வயதில் காலமானார். நாடகம், சிறுகதை, நாவல், விமர்சனம், கட்டுரைகள், கிராமியக் கலைகள் என பல தளங்களிலும் இவர் பங்களிப்புச் செய்துள்ளார்.

❖ 'அடிமையின் காதலி' என்ற சரித்திர நாவல் மூலம் ஈழத்தின் முதல் பெண் சரித்திர நாவலாசிரியை என்ற பெருமையைப் பெற்ற வடமராட்சி, அல்வாய் மேற்கு, திக்கத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவயோகமலர் ஜெயக்குமார் (திக்கம் சிவயோகமலர்) 16.01.2014 இல் கொழும்பில் காலமானார்.

❖ இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் மூத்த உறுப்பினரும், பல்லாண்டுகளாக அதன் செயலாளராகப் பணியாற்றியவருமான எழுத்தாளர் பிரேம்ஜி ஞானசுந்தரன் தனது 84 ஆவது வயதில் 08.02.2014 இல் கனடாவில் காலமானார். இவர் யாழ்ப்பாணம், அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

❖ திருகோணமலையைச் சேர்ந்த ஈழத்தின் மூத்த பெண் எழுத்தாளரான ந. பாலேஸ்வரி 27.02.2014 இல் தனது 85 ஆவது வயதில் காலமானார். இவர் இருநூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும், பன்னிரெண்டுக்கும் மேற்பட்ட நாவல்களையும் படைத்துள்ளார்.

❖ தமிழ் சினிமாவில் ஆளுமை மிக்க படைப்பாளியாக, இயக்குநராக, ஒளிப்பதிவாளராக விளங்கிய மட்டக்களப்பைச் சேர்ந்தவரும், தமிழகத்தில் வாழ்ந்தவருமான பாலுமகேந்திரா 13.02.2014 இல் தனது 74 ஆவது வயதில் சென்னையில் காலமானார்.

❖ ஈழத்தின் நாடக, திரைப்படக் கலைஞர், எழுத்தாளர், இலங்கை வானொலியில் ஒலிபரப்பிய நாடகங்களில் பங்கேற்ற நடிகர்களில் பெயர் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒருவர் என பல சிறப்புக்களைக் கொண்ட கரவெட்டியைச் சேர்ந்த கே. எஸ். பாலசந்திரன் தனது 70 ஆவது வயதில் 26.02.2014 இல் கனடாவில் காலமானார்.

**சமூகப் பணியாளர்களாக, படைப்பாளிகளாக, கலைஞர்களாக வாழ்ந்து மறைந்த இவர்களுக்கு 'கலைமுகம்' தனது அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பெருந்துயரும் இலையுதிர்காலமும்

ஈஸ்வரநாதபிள்ளை குமரன்




நூல்: ஒரு பெருந்துயரும் இலையுதிர்காலமும் (கவிதைத் தொகுதி)
ஆசிரியர்: கு.றஜீபன்
வெளியீடு: காலச்சுவடு பப்ளிகேஷன் (பி) லிட், 669, கே. பி. சாலை, நாகர்கோவில் 629001, இந்தியா.
பதிப்பு: நவம்பர் 2013
விலை: 60.00 (இந்திய ரூபா)

கடந்த பத்து வருடங்களாகத் தொடர்ச்சியாகக் கவிதைகளை எழுதிவரும் கு.றஜீபன் தனது எழுத்துக்களின் பன்முகத்தன்மையாலும் அதனை வெளிப்படுத்தும் இலாவகத்தினாலும் அண்மைக் காலமாக மிகுந்த கவனிப்புக்குள்ளாகி வருகின்றார். இதுவரை இவரது ஐந்து கவிதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. சமூகப் பிரச்சினைகள், முரண்பாடுகள், சிக்கல்கள் என்பன வற்றுடன் ஆன்மீகம், பாலுறவு, செவ்வியல் இலக்கியப் பற்றுணர்வு முதலான விடயத் தளங்களில் எழுதப்பட்ட கவிதைகள் இத் தொகுதிகளில் இடம் பிடித்துள்ளன. இரண்டு வருடங்களுக்கு முன்னதாக வெளிவந்த அவரது 'பேசற்க' என்னும் கவிதைத் தொகுதி அவரது முதிர்ச்சி யடைந்து வரும் கவிதையாளுமைக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாக அமைந்தது. அந்த வரிசையில் அவரது ஆளுமையின் மற்றும் ஒரு வெளிப்பாடாக 'ஒரு பெருந்துயரும் இலையுதிர் காலமும்' என்னும் இக் கவிதைத் தொகுதி வெளி வந்துள்ளது.

இக் கவிதைத் தொகுதி முழுக்க முழுக்கப் 'போருக்குப் பின்னான' கவிதைகளைத் தாங்கி வெளி வந்துள்ளது. போருக்குப் பின்னால் மக்களின் மனங்களிலும் வாழ்விலும் தொடர்ந்து கொண்டிருக்கின்ற வலிகளை, ஆறா வடுக்களை, ஏமாற்றங்களைச் சுமந்தனவாக இக் கவிதைகள் விளங்குகின்றன. மனதை விட்டு நீங்காது நிலைத்து விட்ட துயரங்களைத் தாங்கும் சக்தியற்றும், துடைத்தெறிய வழி தெரியாமலும் அலமந்து நிற்கும் மனிதர்களின் உள்ளக் குமுறல்களும், சீற்றங்களும், பிரலாபங்களும், ஓலங்களும் இக் கவிதைகளில் வெளிப் படுவதைக் காண முடிகின்றது. மனிதப் பேரவலம் ஒன்றின் பின்னாலிருக்கக் கூடிய தாங்க முடியாத வலிகளை, சோகங்களை அவற்றின் உண்மையான பிரதிபலிப்புக்களை உணர்வு பூர்வமாகப் பதிவு செய்யும் முயற்சியே இக் கவிதைத் தொகுதியெனலாம்.

பக்கச் சார்புகளைத் தவிர்த்தும் அரசியல் கலப்புகளுக்கு அதிக இடந்தராமலும் இக் கவிதைகளை றஜீபன் படைத்திருக்கின்றார். மனிதம் பற்றியும், மனித உயிர்கள் அவற்றின் வாழ்வியல் உரிமைகள் குறித்துமே இக் கவிதைகளில் அவர் அதிகம் அக்கறைப்படுவதைக் காணலாம். கொடிய போர் இவற்றினை உருக்குலையச் செய்துவிட்ட அவலமே இக் கவிதைகளில் பதிவு செய்யப் பட்டுள்ளது. போரின் கொடுமைகளைப் பேசல், மனித அவலங்களைப் பாடுதல், போருக்குப் பின்னாலும் தொடரும் துயரங்களை, அநீதியான அடக்குமுறைகளைச் சுட்டிக்காட்டுதல் என்பவற்றின் மூலம் போரின் மீதான ஒரு வெறுப்புணர்வினைக் கவிஞர் காட்ட முனைகின்றார்.

பல்லாயிரக்கணக்கானவர்களைக் கொன்று, பலரை ஊனமாக்கி, மனோரீதியாகப் பலரைக் காயப்படுத்தி, உடைமைகளை நாசமாக்கி, அழகான நகரங்களை, கிராமங்களைச் சிதைத்து நிகழ்ந்த போராலும் அதனால் கிடைத்த வெற்றியாலும் சாதித்தவை தான் என்ன? என்னும் கேள்விகளை இக் கவிதைகள் எழுப்புகின்றன. போருக்குப் பின்னால் மக்கள் எதிர்பார்த்தவை கிடைத்ததா? அவர்கள் வாழ்க்கையில் மலர்ச்சி ஏற்பட்டதா? அவர்கள் மனநிறைவுடன் வாழ்கின்றார்களா? என்பது போன்ற வினாக்களைக் கவிதையில் தொடுத்து விடைதேட விழைகின்றார் கவிஞர். போருக்குப் பின்னாலும் அச்சம், வலி, வேதனை, துன்பம், புறக்கணிப்பு, அடக்குமுறை என்பன புதுப்புது வடிவங்களில் மக்களை நசுக்கியும் உலுப்பியும் கொண்டிருக்கும் பேரவலம் மேலும் மேலும் தொடர்வதை இக் கவிதைகள் உணர்த்த முயல்கின்றன.

அதிகாரபலம், தனியுடமை, வல்லாதிக்கம் என்பன வற்றுக்கு முன்னால் மனிதமும், நியாயமான எதிர்பார்ப்புக்களும் தூசாகிப் போவதையும் அதனால் வேதனைகள் தொடர்கதையாய் நீண்டு செல்வதையும் கவிதைகள் துலாம்பரமாக எடுத்துக் காட்டுகின்றன. "போரோ, போரினால் கிடைக்கும் வெற்றியோ முக்கியமானவை யல்ல; முக்கியமானவை மனிதமும் மனித உயிர்களுமே. அவற்றுக்கு மதிப்பளியுங்கள்" என்னும் குரலை கவிதைகளில் ஓங்கி ஒலிக்க விடுகின்றார் கவிஞர். பலமான மனித நேயத் தளத்தில் நின்றும் வெளிவந்த அடக்கு முறைகளைக் கண்டு அஞ்சி ஒடுங்காத ஆத்மாவின் குரல்களாகவே இக் கவிதைகள் அமைவதைக் காணலாம். மனிதனை அவன் உணர்வுகளை, உரிமைகளை மதிக்கத் தெரியாத மறுதலையாக அவற்றினை நசுக்குகின்ற அதிகார சக்திகள் மீதான தார்மீக கோபங்களாகவே இவை அமைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிப்புக்குள்ளான மக்களுக்காக அவர்கள் பக்கமாக நின்று பேசும் மக்கள் கவிஞனாகவே றஜீபனை இக் கவிதைகள் இனங்காட்டுகின்றன.

போரின் வடுக்களையும் வலிகளையும் தாங்கிய வண்ணம் இன்னமும் அவற்றின் பிடியிலிருந்து முழுமையாக விடுபட முடியாமல் தவித்துக் கொண்டிருக்கின்ற மக்களின் உணர்ச்சிகளைக் கவிதைகளில் பதிவு செய்வதில் றஜீபன் காட்டியிருக்கும் நிதானம் நோக்கப்பட வேண்டிய தொன்றாகும். இலகுவில் உணர்ச்சிவசப்பட வைக்கக்கூடிய கவிப்பொருளை எச்சரிக்கையுணர்வுடன் அவர் கையாண்டிருக்கும் திறன் விதந்துரைக்கத்தக்கது. உணர்ச்சி வசப்பட்டு வார்த்தைகளைக் கொட்டுவதோ வெற்றுப் புலம்பல்களாக அல்லது ஓலங்களாகக் கவிதை யைப் படைப்பதையோ (போருக்குப் பின்னாலான கவிதைகள் பல இவ்வாறே அமைந்துள்ளன) றஜீபன் தவிர்த்துள்ளார். அறிவு நிலை சார்ந்த அணுகுமுறை அவரது கவிதைகளுக்குப் பலத்தினைத் தேடிதருகின்றது. ஒவ்வொரு வார்த்தைகளையும், குறியீடுகளையும் தேடியெடுத்து எச்சரிக்கையாக அவர் கையாளும் நேர்த்தி வியக்கத் தக்கதாகும். வாசகரது உள்ளங்களில் ஆத்திரத்தினையோ அல்லது உணர்ச்சிச் சுழிப்பினையோ 'அருட்டி' விடாது அவர்களை நிதானமாக ஆழ்ந்த சிந்தனைக்குள்ளும் உரையாடல்களுக்குள்ளும் நகர்த்துவனவாக இக் கவிதைகள் அமைந்துள்ளன. வாசகருக்குள் தனது கருத்தியல்களைத் திணிக்காமல் அவர்களை இயல்பான முடிவுகளுக்கு வரச் செய்வதே றஜீபனின் நோக்காக அமைகின்றது.

பேசுவதற்குத் தயங்குவதும் இதுவரை பேசாப் பொருள்களாக அமைந்தவையுமான பல விடயங்களை அவரது கவிதைகள் தொட்டுச் செல்கின்றன. ஒவ்வொரு விடயங்களையும் கவிதை என்னும் வடிவத்துக்குள் தொடக்கூடிய அளவுக்குக் கனதியாகப் பேசியுள்ளார் றஜீபன். கடன் வாங்கப்பட்ட அனுபவங்களை அவர் கவிதையாக்கவில்லை. மாறாகத் தான் கண்டும், கேட்டும் உணர்ந்த விடயங்களையே கவிப்பொருளாக்கியுள்ளார். கடந்த கால அரசியல் அனுபவங்கள், நிகழ்கால அரசியல் போக்குகள் என்பனவற்றை நிதானமாக ஆராய்ந்து எதிர்காலம் பற்றி அக்கறைப்படும் ஒரு கவிஞனின் பார்வைகளாகவே இக்கவிதைகள் அமைந்துள்ளதைக் காணலாம். எதிர்கால எதிர்பார்ப்புகளுக்கும் நடப்பியல் அரசியல் அணுகுமுறைகளுக்குமான இடைவெளியினையே இக் கவிதைகள் சுட்டிக்காட்ட விழைகின்றன. எந்தவித நம்பிக்கையும், வாழ்வியல் உறுதிப்பாடும், வளர்ச்சியும் இல்லாது இருள் சூழ்ந்து கிடக்கும் அந்த இடைவெளி எந்தளவுக்கு ஆபத்தானது என்பதை இக் கவிதைகள் புலப்படுத்துகின்றன. ஆரோக்கியமான சமூக வளர்ச்சிக்கு, ஐக்கியத்திற்கு, இன நல்லிணக்கத்திற்கு இவை எந்தளவு தூரம் தடைக்கற்களாக அமைந்துள்ளன என்பதை இக் கவிதைகள் சுட்டுவதனைக் காணலாம். ஆழமான சமூகப் பார்வையும் சமூகப் பொறுப்புணர்வும் கொண்ட கருத்தியல் இக் கவிதைகளில் மேற்கிளம்புவது நோக்கப்பட வேண்டிய தொன்றாகும்.

கவிதைகளில் றஜீபன் கையாண்டிருக்கும் மொழி குறிப்பிட்டுச் சொல்லத்தக்கது. இவரது முன்னைய கவிதைத் தொகுதிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இக் கவிதையில் மொழிக்கையாட்சி மேலும் மெருகு பெற்றிருப்பதைக் காணலாம். மொழித் தேர்ச்சியும் அதனைக் கையாளும் திறனும் அவரிடம் வளர்ச்சியுறுவதை இக் கவிதைகளில் அவதானிக்க முடிகின்றது. கவிஞன் என்பவன் சதா மொழியுடன் போராடிக் கொண்டிருக்க வேண்டும். மொழியுடன் அவன் நிகழ்த்தும் போராட்டங்களே கவிதை மொழியின் கூர்மைக்கும் வளர்ச்சிக்கும் அத்திவாரமாகின்றன. றஜீபனின் கவிதை மொழியுடனான போராட்டம் அவரது கவிதைகளுக்குக் கனதியைப் பெற்றுத் தருவதை அவதானிக்க முடிகின்றது. வித்துவச் செருக்கான மொழியையோ, சொற்களையோ இயன்றளவுக்குக் கவிதையில் அவர் தவிர்த்துள்ளார். எளிமையும் அன்றாட வாழ்க்கையில் கையாளப்படுவனவுமான சொற்களையே பெரிதும் கையாளுகின்றார். ஆனால் அச் சொற்களைத் தனது கவித்துவத்தால் புதிய சக்தி கொண்டனவாக மாற்றி அவர் கையாளும் திறன் நோக்கத்தக்கது. உணர்ச்சிவசப்பட வைக்காத மொழித் தேர்ச்சி, சிந்திக்க வைக்கும் வார்த்தைப் பிரயோகம், தளர்ந்து போகாத சொல்லாட்சி என்பன கவிதையை மீண்டும் மீண்டும் படிக்கவும் ஆராயவும் வைக்கின்றன. பழைய சொற்களையும் புதிய அர்த்தத்தில் பயன்படுத்தும் பாங்கு, புதிய சொற்களை உருவாக்கிக் கொள்ளும் திறன், வழக்கில் நின்றும் ஒதுங்கும் சொற்களையும் மீண்டும் சக்தியேற்றிப் பயன்படுத்தும் இலாவகம் என்பன பாராட்டப்பட வேண்டியவை.

கவிதைகளில் குறியீடுகளை றஜீபன் மிக அதிகமாகவே கையாண்டுள்ளார். அவர் பேச எடுத்துக் கொண்ட கவிப்பொருள் குறியீடுகளில் தங்கியிருக்க வேண்டியதை நிர்ப்பந்தித்துள்ளது. குறியீடுகளைப் பயன்படுத்துவதனூடாக விமர்சனங்கள், வேண்டாத 'தொந்தரவுகள்' என்பனவற்றில் நின்றும் அவர் தன்னை விலக்கிக் கொள்வதோடு கவிதையின் கலைத்துவத்தையும் கட்டிக் காத்துள்ளார் என்றே கூறவேண்டும். கவிதைகளில் அவர் கையாளும் குறியீடுகள் எளிமையானவை. சாதாரண கவிதை வாசிப்புப் பயிற்சியுள்ளவராலும் விளங்கிக் கொள்ளக் கூடியவை. இதனால் கவிதைகளில் இருண்மை படிவது அதிகம் தவிர்க்கப்பட்டுள்ளது. கவிதை வாசிப்பு எளிமையாக்கப்பட்டுள்ளது. வகை மாதிரிக்குக் கீழேயுள்ள கவிதை வரிகளை நோக்குக.

"செருப்புகளோடு நட்புக் கொள்ளாத
சப்பாத்துக்களும்
சப்பாத்துக்களோடு நட்புக் கொள்ள மறுத்த
செருப்புகளும்
அலைந்தமைக்கான எச்சக் குறிகளின் மீது
இப்போது
அடர்ந்த சருகுகளின் குவிப்பைக் காற்று
கலைத்தபடி இருக்கிறது"

*(சருகுகளால் மூடப்பட்ட அடையாளங்கள், பக். 38)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறியீடுகளைப் போலவே கவிதையில் அவர் பரவலாகக் கையாளும் உவமைகளும், உருவகங்களும், படிமங்களும் வாசகர் மனதில் கனதியான தாக்கத்தினை ஏற்படுத்துவனவாக உள்ளன. மீண்டும் மீண்டும் பயன் படுத்தி நைந்து போன உவமைகள், உருவகங்கள், படிமங்களை அவர் பெருமளவுக்குத் தவிர்த்துள்ளார். பதிலாகக் கவிதை மொழியை மேலும் கூர்மைப்படுத்தும் வகையில் புதிய அணிகளும் படிமங்களும் கவிதையில் இடமறிந்து அவரால் பயன்படுத்தப்பட்டுள்ளமை நோக்கப் பட வேண்டியதொன்றாகும்.

"நீண்டு கொண்டே போகிறது
இரவின் கொடிய இருட்டு
ஏதுமறியாக் குழந்தை போல
இன்னும் விழிபிதுங்கியபடியே இருக்கிறோம்"

(எமக்கான இருள், பக். 31)

என்பது போன்று வருகின்ற உவமைகள் அவரது ஆளுமைக்குப் பதச்சோறாயமைகின்றன. கவிதை வெளிப் படுத்தும் உணர்ச்சியின் திரட்சியை அல்லது அதன் பிழிசாற்றினைக் கவிதைத் தலைப்புக்களாக அமைத் திருக்கும் திறனும் நயக்கத்தக்கதாகும்.

ஆக, போருக்குப் பின்னாக - போரின் வடுக்களையும் வலிகளையும் தாங்கி - வெளிவந்த கவிதைத் தொகுதிகளில் இத் தொகுதியும் தனக்கெனத் தனியான தோர் இடத்தினைப் பெற்றுள்ளது. கவிஞர் தான் பேச விழைந்த கருத்து நிலையாலும் பேசுகின்ற முறைா யலும் தனிக் கவனிப்பினைப் பெறுகின்றார். உணர்ச்சி வசப்படாத கருத்து வெளிப்பாடு, நிதானம், அறிவினால் சீர்தூக்கி ஆழ்ந்து சிந்தித்துக் கருத்துக்களை முன்வைக்குந் திறன், கவிதைத் தொகுதி முழுவதும் பரந்து கிடக்கும் மனிதநேயம் என்பன கவிஞரின் முதிர்ச்சியடைந்து வரும் கவிதையாளு மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும். இவற்றுடன் கூடவே தனது மனதிற்குச் சரியெனப்பட்டதை யாருக்காகவும் எதற்காகவும் அஞ்சாமல் துணிவுடன் எடுத்துரைக்கும் திறன், அநீதிகளையும், அடக்குமுறை களையும் தோலுரித்துக் காட்ட வேண்டும் என்னும் ஆர்வம், பக்கச் சார்பின்மை, மானிட சமூகத்தின் மீதான கரிசனை, சமூக விடுதலை பற்றியதான மனப்பாங்கு என்பன அவரது கவித்துவத்திற்கு மேலும் பலம் சேர்த்துள்ளன. தனக்கென வரித்துக் கொண்ட கவிதை நடையில் கவிதை வெளிப்பாட்டு உத்திகளை தனக்கேற்ற வகையில் வளைத்துக் கொண்டு றஜீபன் படைத்துள்ள இக் கவிதைகள் அவரது கவிதையாளுமை வளர்ச்சியின் மற்றுமோர் மைல்கல் என்றே கூறலாம். ■

# கிளிநொச்சி போர் தின்ற நகரம்

**வேலணையூர் தாஸ்**




| | |
|---|---|
| நூல்: | கிளிநொச்சி போர்தின்ற நகரம் (காலப்பதிவுகள்) |
| ஆசிரியர்: | தீபச்செல்வன் |
| வெளியீடு: | எழுநா ஊடக நிறுவனம், No. 04, Kettering Road, Isham, Kettering, NN141HQ United Kingdom. |
| பதிப்பு: | ஜனவரி 2013 |
| விலை: | 100.00 |

இயற்பெயர் பாலேந்திரன் பிரதீபன், ஈழத்தின் வடக்கில் வன்னியில் கிளிநொச்சி நகரத்தில் உள்ள இரத்தினபுரத்தைச் சேர்ந்தவர். ஈழத்தின் முக்கிய கவிஞராக அறியப்பட்டவர் என்ற அறிமுகத்துடன் ஆரம்பமாகிறது எழுநா வெளியீடாக வெளிவந்த தீபச்செல்வனின் 'கிளிநொச்சி போர் தின்ற நகரம்' என்ற நூல்.

ஈழத்தில் நடந்த பெரும்போர் பெரும் தொகை யான மக்களை கொன்றதுடன் அவர்களது வாழ்நிலங்களை அழித்தது. நிலத்தின் பண்பாட்டு அம்சங்களைப் புதைத்தது. மக்களின் ஆசைகள் எதிர்காலத் திட்டங்கள் எல்லாம் இந்த பெரும் போரில் அழிந்து போனது. அழிந்த அந்த நில வரலாற்றின் நினைவுகளை மீட்டுத்தருகின்ற வகையில் இந் நூலின் கட்டுரைகள் அமைகின்றன. ஒரு கால வரலாற்றின் ஆவணப்பதிவுகளாக அமைகின்றன என்ற வகையிலே இந்த நூல் முக்கியம் பெறுகிறது.

கிளிநொச்சி நகரம், வன்னி நிலம் எழிலாக இருந்த நிலை, அந்த மக்களின் இயல்பான வாழ்வு இவையெல்லாம் இழந்து அழகிழந்து சிதைந்து போன நகரத்தின் விம்பம் என்பவற்றை கதை வடிவமாக பதிவு செய்யும் இந்த நூல் கதை வடிவில் எழுதப்பட்டாலும் புனைவின்றி உண்மை யைப் பேசுகின்றது. உண்மை மட்டுமே உண்மையானது என்பதை அடிப்படையாகக் கொண்டு இந் நூலை ஆக்கியுள்ளார் தீபச்செல்வன்.

போர் முடிந்த பின் தனது நகருக்கு மீளவருகின்ற தீபச்செல்வன் தன் உறவுகளை தேடியலைகிறார். தான் வாழ்ந்த இடங்களை, விளையாட்டு திடல்களை, கோவில்களை, கட்டடங்களைத் தேடுகிறார். எல்லாம் அழிந்து, உருக்குலைந்து, வாழ்வு இழந்து நிற்கிறது நகர். அந்த துயர நினைவின் பதிவுகளே இங்கு கதைகளாகிறது. 'கிளிநொச்சி' என்ற கதையிலே அவரே சொல்கிறார் "அந்த முதற் பயணம் என்னை பதறச் செய்திருந்தது". இதை தொடர்ந்து படிக்கின்ற போது சிதைந்த நகரிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்தலைகிறது மனது.

'அப்பண்ணாவின் ஊன்றுகோல்' போரில் அவயவங்களை இழந்த மக்களின் கண்ணீர் வாழ்விற்கு உதாரணமாகிறது.

'சுதா கடை' என்ற கதை தனது இரு மகன்களும் இறந்து போனார்கள் என்பதை இறுதிவரை அறியாமலே போய்ச் சேர்ந்தது குணரஞ்சனி அக்காவின் உயிர். சுதா அண்ணனும் மகனும் எழுப்பிய கதறல் அந்த வைத்திய சாலையில் பரவியிருந்த எண்ணற்ற ஓலங்களுடனும் அழுகைகளுடனும் கலந்தது. போரில் செல் விழுந்து உயிரிழந்த குடும்பமொன்றின் கதையூடாக ஒரு பெரும் வரலாற்றுத் துயரை பதிவு செய்கிறது இக் கதை.

'யுத்த நகரின் நண்பர்கள்' இளமைக் காலத்தில் இணைந்திருந்த நண்பர்களை இழந்த வலியை பேசுகிறது.

பிள்ளைகளைக் காணாதிருக்கும் அம்மாக்கள், பொய்க்கால்கள், மாபிள் கண்கள், பொம்மை வீடுகள்... எனத் தொடரும் கதைகளும் வாழ்தலின் மகிழ்வையோ இன்ப நிகழ்வுகளையோ சுட்டுவனவல்ல. இவைகளும் எல்லாமும் இருந்து, பின் அனைத்தையும் இழந்து நாதியற்று அலைகின்ற ஒரு வாழ்ந்த குடியின் வரலாற்றை குருதியும் கண்ணீரும் நிறைந்த கதைகளாகவே பேசுகின்றது.

இந்த நகரும் அதில் புதைந்த கனவுகளும் மீண்டெழுமா? ■

# சூடிக்கொடுத்த சுடர்க்கொடி

**ராஜ்குமார்**



நூல் : சூடிக் கொடுத்த சுடர்க் கொடி (நடன நாடகங்கள்)
ஆசிரியர் : திருமதி ஜெயக்குமாரி கந்தவேள்
வெளியீடு: ஆசிரியர், இல. 61, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
பதிப்பு : செப்ரெம்பர் 2013
விலை : 540.00

ஆசிரியை திருமதி ஜெயக்குமாரி கந்தவேள் எழுதிய 14 நடன நாடகங்களின் தொகுதியாக 'சூடிக் கொடுத்த சுடர்க்கொடி' நாடகத் தொகுதி வெளிவந்துள்ளது. நாடகம் என்பது ஆற்றுகைக் கலை வடிவம். அது அரங்கிலேயே முழுமை பெறுகின்றது. அதிலும் நடன நாடகங்கள், ஆடலரங்கின் பாடமாய் அமைபவை. அவற்றின் இலக்கிய தரத்தினைவிட ஆற்றுகைத் தரம் அதிகம் வேண்டப்படுபவை. அந்த வகையில் ஆற்றுகைத் தரத்துடன் பல மேடைகளை கண்டபின் இத் தொகுதியில் உள்ள பதினாங்கு நாடகங்களும் நூல்வடிவத்தினைப் பெற்றுள்ளன. அதனால் நடனக் கலைஞர்களுக்கு இந் நடன நாடக நூல் ஓர் பெரும் வரப்பிரசாதமாகும்.

நடன நாடகங்களை ஒரு காலத்தில் சாதாரணர்கள் யாரும் எழுதிவிட முடியாது. ஆரம்பத்தில் தெலுங்குக் கீர்த்தனைகளால் ஆகிய வடிவம், பின்னர் அருணாசலக் கவிராயர், கோபாலகிருஷ்ண பாரதியார் போன்ற உயர் படைப்பாளிகளால் படைக்கப்பட்டன. ஈழத்தின் நடன நாடகப் பாரம்பரியத்தில் வீரமணி ஐயர் மிக முக்கியமான இடத்தினைப் பெறுகின்றார். இத்தகைய பாரம்பரியத்தில் திருமதி ஜெயக்குமாரி கந்தவேள் தன்னையும் இணைத்துள்ளார். பாரம்பரியமான நடன நாடகப் பாடங்களில் இருந்து இவரது எழுத்துருக்கள் பெரிதும் வேறுபடுகின்றன. செய்யுள் வடிவ மரபுக் கவிதையில் இருந்து விடுபட்டு, எளிமையான பாடல் வரிகளை கொண்டவையாக, இவரது நாடகங்கள் அமைகின்றன. அந்த எளிமையானது கவிதை நாடகங்களை வாசிக்கும் இலக்கிய சுவையை தருகின்ற அதே வேளை ஆற்றும்போதும் அரங்கில் இலகுவான புரிதலுக்கு வசதியாக அமைந்து நிற்கின்றன.

ஆசிரியர், தமிழ் ஆசிரியராகவும், சைவப்புலவராகவும் இருப்பதன் ஆளுமை, நாடக எழுத்துருக்களில் செல்வாக்குச் செலுத்துகின்றது எனலாம். புராணங்கள், இலக்கியங்களில் இருந்தே அதிகமான கதைப் பொருள்கள் தெரிந்தெடுக்கப்பட்டாலும் அவை பற்றிய ஆசிரியரின் தாடனம் எழுத்துருக்களில் துலங்குகின்றன.

சூடிக்கொடுத்த சுடர்க்கொடி, பாஞ்சாலிசபதம், மேனகை தந்த மென்கொடி, தாருகாவனம், விடிவெள்ளி, இன்தமிழும் கனலாகும், பத்மாசுரன் மோகினி, உதித்தனன் உலகம் உய்ய,, சீத்தாராமன், தென்றல் புயலனால்..., அழைத்தால் வருவான், கவரிமா, ஓம்நமசிவாய, பொன் மாலை சூட்டினாள் பொன் ஆகிய 14 நாடகங்கள் இத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இந் நாடகத் தலைப்புக்களில் பெரும்பாலானவை தமிழ் மொழித் தினப்போட்டிகளில் வழங்கப்பட்ட தலைப்புக்கள். தமிழ் மொழித்தினத்துக்காக அவை தயாரிக்கப்பட்டவையாக இருப்பினும் அவற்றினை சிறந்த இலக்கிய நயத்துடனும், நாடக பாங்குடனும் ஆசிரியர் அமைத்துள்ளார். இந் நாடகங்களில் ஏழு நாடகங்களுக்கான கதைக்கரு புராணங்களில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. அவற்றைவிட பாரதிபாடல், சிலப்பதிகாரம், இராமாயணம், மகாபாரதம் மற்றும் இந்திய வரலாறுகளில் இருந்தும் கதைக்கரு எடுக்கப்பட்டுள்ளது. 'விடிவெள்ளி' என்னும் நாடகம் சமகால மீனவரின் வாழ்வைச் சித்திரிப்பதாய் அமைந்துள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே நடன நாடகப் பாரம்பரியத்திற்கு அணி சேர்க்கும் புதிய வரவாக அமைந்துள்ள இந் நாடக நூல் நடனத்துறையினருக்கு மட்டுமன்றி, நாடக இலக்கியத்தினை நயப்பவர்க்கும் நல்வரவாய் அமைந் துள்ளது. அதே வேளை ஒரு சிறிய குறிப்பு, நடன நாடகங்களை, 'நாட்டிய நாடகங்கள்' என வழங்கும் தவறான சொற்பிரயோகம் நடனப் பாரம்பரியத்தில் தொடருகின்றது. ஆசிரியரும் அதனையே பின்பற்றியுள்ளார். 'நாட்டிய' என்ற வடசொல் நாடகம் என்ற பொருளையே உணர்த்துகின்றது. அதனால் 'நாடக நாடகம்' என்றே அப்பதம் பொருள் விளக்கும். பரதரின் 'நாட்டிய சாஸ்திரம்' உண்மையில் நாடக இலக்கணமே தவிர, நடன இலக்கணம் எனப் பொருள் கொள்ள முடியாது. நடனத்தை முதன்மையாக கொண்ட நாடகம் பற்றிப் பேசுவதால் அது நடனத்துறைக்கும், மூலமாய் அமைந்துள் ளதே தவிர, அது நாடக இலக்கணமே, எனவே இவற்றை நடன நாடகம் *(Dance Drama)* என அழைத்தலே பொருத்தமானது. ■

# செவ்வானம்

**நேசன்**




**நூல்** : செவ்வானம் (கவிதைத் தொகுதி)
**ஆசிரியர்** : பூ.பிரதீபன்
**வெளியீடு** : மகரந்தம் வெளியீட்டகம் திருகோணமலை
**பதிப்பு** : 2013
**விலை** : 350.00

**ஒ**ருவர் தனது மனதில் துளிர்விடுகின்ற கலையுணர்வை அவருக்கு ஈடுபாடான கலையொன்றினூடாக வெளிப்படுத்தும் உந்தலைப் பெறும் போது அவரூடாக அவரது கலை வெளிப்படுகிறது. ஓவியத்தில் இரசனையும் படைப்பு உந்தலும் உடையவர் ஓவியம் வரைகிறார்; இசையில் இரசனையும் வெளிப்பாட்டு உந்தலும் அதன் வழியான புதியன தரும் ஆற்றலும் கொண்டவர் இசையூடாகத் தன்னை வெளிப்படுத்துகிறார்.

இது போன்றே மொழியாற்றலும், மொழி வழியான வெளிப்பாட்டுத் திறனும் கொண்டவர் எழுத்தினூடாக தனது படைப்பைத் தருகிறார். இந்த மொழிவழிக் கலை வெளிப்பாடுகளில் 'கவிதை'யே தலையாய கலை எனப்படுகிறது. இவ்வாறு அது அழைக்கப்பட பல காரணங்கள் உண்டு.

மொழியை மிக நுண்மையாகவும் - உணர்வு - பொருட்பொதிவு - சொல்லின் நேர் அர்த்தம் தாண்டிய அர்த்த வெளிப்பயணம் என்பவற்றினூடாகத் தரும் ஆற்றல் கொண்டவர் வெற்றிகரமான கவிஞராகிறார்.

சாதாரணமாகக் கவிதை எழுத முன்வருபவர்கள் தமது மொழிசார்ந்த இரசனையின் விளைவாக அந்த முயற்சியில் இறங்கத் துணிகிறார்கள். சொற்தேர்வு, சொல்லும் முறை, உணர்வு வெளிப்பாடு இவற்றோடு கவிதையை எழுத முன்வரும் ஒருவர் அந்த விடயங்களில் எவ்வளவு தூரம் நுண்மையையும் தனது மொழியின் செல்தொலைவு என்பவற்றைக் கையாளுகின்றாரோ அந்தளவு தூரத்திற்கு அவரது கவிதையும் வெற்றி பெறுகிறது. ஒரு சிறந்த கவிதை மிகச் சுருக்கமான அமைப்பில் மிகுந்த அர்த்த ஆழத்தை உடையதாக அமைகிறது.

இதைச் சொல்லும் போது, அண்மையில் படிக்க நேர்ந்த கல்யாண்ஜியின் கவிதையொன்று ஞாபகம் வருகிறது.

"பென்சில் சீவிக் கொண்டிருந்தேன்
மொர மொரவென
மரங்கள் எங்கோ சரிய"

இனி பூ.பிரதீபனின் 'செவ்வானம்' தொகுதியிடம் போவோம்.

ஒரு கவிஞனுக்கான பார்வை, அணுகுமுறை, தேடல் - ஒருவகையான தாளாத தவிப்பு இவையனைத்தையும் உடையவராக பூ.பிரதீபன் தன்னை இந்தக் கவிதைகளினூடாகக் காட்ட முனைகிறார்.

அவரது முனைப்பின் பொருட்டாக அவர் கையாளும் படிமுறைகளும் காலத்தின் முகங்களாக, அனுபவங்களின் அடையாளங்களாக அமைகின்றன.

மிகப்பல கவிதைகள் பிரதீபனை ஒரு மனிதாபிமானியாக, மனித நேயமும், பரிவும் உடைய நல் இதயமுடையவராக எடுத்துக் காட்டுகின்றன.

மனதில் உள்ள எல்லாவற்றையும் - தோன்றுகின்ற அனைத்தையும் சொல்லிவிட முனையும் தன்மை பிரதீபனின் மிகப் பெரும்பாலான கவிதைகளில் தெரிகிறது. கவிதை எழுதும் கிரியையில் இந்தத் தன்மை ஒரு பெரிய பலவீனம் என்பதை இவர் உணரவேண்டியவராக இருக்கிறார்.

சொற்களின் தேர்வில், சொல்லும் முறையில் இன்னுமின்னும் கவனமும், கட்டிறுக்கமும் பேணப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வேண்டிய தேவை உள்ளது. சொற்களின் மீது ஏற்படக் கூடிய அர்த்தமில்லாத அதீத காதலை இவர் கைவிட வேண்டும்.

'செவ்வானம்' தொகுப்பில் செம்மை, சிவந்த நிறம், இரத்தச் சிவப்பு அதீத முக்கியத்துவத்தைப் பெறும் ஒன்றாக இருப்பதை அவதானிக்க முடிகிறது. சில இடங்களில் அதற்கு அவர் தரும் அழுத்தம் மிகையாக உள்ளது. சொற்கள் *Rhyming* பற்றிய பிரக்ஞை அதீத மாகையில் நீர்த்துப்போன கவிதைப் பண்புகள் அவசிய மற்றுச் சொற்களைத் தொகுத்துவிட்ட வெறுமையையும் தர முனைவதும் ஒரு மாற்றத்தைக் கோரும் பண்பாகிறது. அது போலவே கோஷமிடும் தன்மையும். மொத்தத்தில் அழகான தோற்றத்தில் வந்துள்ள இந்தத் தொகுப்பில் உள்ளடக்கக் கனதியிலும் கவனம் செலுத்தியிருக்கலாம் என்றேபடுகிறது.

அரங்கக் கலையில் ஆற்றலும், ஆளுமையும் மிக்க கலைஞனாக தொழிற்படும் பிரதீபன், இன்னுமின்னும் கவனமாய், பொறுமையாய், தன் கவிதைப் பாதையைச் செப்பனிடும் பட்சத்தில் பிரதீபன் ஒரு சிறந்த கவிஞனாகும் வாய்ப்புகள் அதிகம் உண்டு என்றே சொல்ல வேண்டும். ■

# தமிழோடு அவாவுதல்

**எம்.இந்திராணி**




நூல் : தமிழோடு அவாவுதல்
(அமரர் பண்டிதர் அளவெட்டியூர் க.நாகலிங்கம் அவர்களுடனான நேர்காணல்)
நேர்கண்டவர்: பா.துவாரகன்
வெளியீடு: சுகர்யா வெளியீட்டகம் சுவிற்சர்லாந்து
பதிப்பு : 2013
விலை : குறிப்பிடப்படவில்லை

**ஆ**ழ்கடலின் அடியினிலே விலை மதிப்பற்ற முத்துக்கள் இருக்கும். மண்ணுக்குள்ளே தங்கமும் நவரத்தினங்களும் மறைந்திருக்கும். பெறுமதிமிக்க அவற்றை நாம் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றால் மிகுந்த பிரயாசைப்பட்டு முயற்சி செய்தால் தான் பெறமுடியும். ஆழ்கடலில் இறங்கி முத்துக்குளித்துத் தான் முத்தைப் பெறலாம். மண்ணை அகழ்ந்து தேடித்தான் இரத்தினக் கற்களைப் பெறலாம்.

இத்தகையதொரு பணியினைத்தான் திரு. பா. துவாரகன் செய்துள்ளார்.

அறிவுக்கடலாக விளங்கும் பேரறிஞர்களின் மனப் பெட்டகத்துள் அபரிமிதமாக ஞானமும் நுண்ணறிவும் புதைந்திருக்கும். அவ்வறிஞர்கள் எழுதி வெளியிடும் நூல்கள் மூலமோ அவர்களது சொற்பொழிவுகள் மூலமோ ஓரளவிற்கு அவற்றை நாம் பெற முடிந்தாலும், அவர் களிடம் புதைந்திருக்கும் அறிவு பூர்வமான விஷயங்களை நாம் விரும்பியவாறு அல்லது எதிர்பார்த்தபடி நுகரவேண்டு மென்றால் கேட்டுப் பெற்றுக் கொள்ளும் போதுதான் முழுமையாக அவை எமக்குக் கிடைக்கும்.

அந்த வகையிலே, தமிழ் இலக்கணத்தில் துறை போனவரான பண்டிதர் க.நாகலிங்கம் அவர்களிடம் தமிழ்மொழி பற்றிய பல விஷயங்களையும் கேட்டு, உரையாடி அவரது இதயச் சுரங்கத்திலிருந்த ஞானக் களஞ்சியத்தை வெளிக்கொணர்ந்து, ஒன்றாகத் திரட்டி ஆக்கப்பட்ட ஆவணம்தான் 'தமிழோடு அவாவுதல்' என்னும் நூலாகும்.

இந் நூல் வெளியீடு காலத்தின் தேவையும், அவசியமும் என்று கூறலாம். இன்றைய இளம் சந்ததியினர் எமது தமிழ் மொழியின் இனிமையையும், அழகையும் உணர்ந்து கொள்பவர்களாக இல்லை. ழகர ளகர எழுத்துக்களைச் சரியாக உச்சரிக்கும் தன்மையுமில்லை. மரபுக் கவிதைகளிலுள்ள நயமும், இனிமையும், அர்த்தமும் கூட அவர்கள் இரசனைக்கு அப்பாற்பட்டதாகவே உள்ளது.

இந் நிலையில், தமிழ் பற்றியும், தமிழிலக்கணச் சிறப்புப் பற்றியும் இளையோர்க்கு உகந்த முறையில், அவர்களுக்கு ஈடுபாடும், ஆர்வமும் ஏற்படும் வகையில் தெளிவுபடுத்துகின்ற, இந் நூலின் பெயரே இதனைப் படிக்க வேண்டுமென்ற விருப்பத்தை எல்லோருக்கும் ஏற்படுத்தக் கூடியதாக உள்ளது.

தமிழ் மொழியைக் கசடறக் கற்றவரான நாகலிங் கம் அவர்களை தமிழாக உருவகப்படுத்தி அவரோடு அவாவி பெற்ற விஷயங்களை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளதாக அமைந்ததால் இப்பெயரை வைத்திருக் கலாம்.

அவா என்றால் அளவுக்கதிகமான பற்று, விருப்பம் என்றும் பொருள் கொள்ளலாம். எனவே தமிழோடு அவாவுதல் என்றால் தமிழ் மீது பெரும் நாட்டம் கொள்ளுதல் என்ற கருத்தையும் பிரதிபலித்துக் காட்டும் இந் நூலின் பெயரே இனிமையான ஓர் அனுபவிப்பை உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது.

இக் கணனி யுகத்தில் நூல்கள் மீது கவனம் கொள்வோர் மிகக் குறைவாக இருந்தாலும் இந் நூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு விதிவிலக்காகி நலிவுற்றிருக்கும் தமிழுக்குப் பாதுகாப்பும் சிறப்பும் சேர்க்கும் என்று நம்பலாம்.

பண்டிதர் நாகலிங்கம் அவர்கள் தமிழின் இன்றைய நலிவுற்ற நிலை பற்றியும், அதற்கான நிவர்த்தி பற்றியும் கூறும் கருத்துக்கள் ஆங்காங்கே இந் நூலில் காணப் படுகின்றன.

"யாழ்ப்பாணத்தில் தமிழ்க் கல்வியின் நிலை மிக மோசமாக உள்ளது. தமிழறிவு நிரம்பாத மாணவர்களைப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிவிட்டுத் தமிழ்க் கல்வியின் தரம் பல்கலைக்கழகத்தில் குறைந்து வருகின்றது என்று கூறுவதிற் பயனில்லை. இப்போது தமிழின் தரம் பல்கலைக் கழகத்தில் மட்டுமல்லாது எல்லா வகுப்புக்களிலும் அதன் தரம் இறங்கியுள்ள நிலையையே காண்கிறோம். தமிழ்க் கல்வியை மேம்படுத்த பல்கலைக்கழகங்களால் மட்டும் முடியாது. பல்கலைக்கழகம் தமிழ் சிறப்புப் பயிலச் செல்வோர் நன்னூற் சூத்திரம் முழுவதையும் பாடமாக்கி யிருப்பதோடு அவற்றிற்கு உரை கூறவும் கற்றிருக்க வேண்டும். ஆறுமுக நாவலர் தமிழ்க் கல்விக்கு ஆக்கித் தந்த பாடவிதானமும் பின்பற்றப்பட வேண்டும்.

தமிழின் பல்துறை வல்லாளர்களைத் தேர்ந்தெ டுத்து அவர்களுக்கு இரண்டு வருடம் தமிழ் விசேட பயிற்சியளித்து அதன் மேலே தான் அவர்கள் பல்கலைக் கழகத்திற்கு செல்ல வேண்டும். இப்படிக் கற்றவர்களே தமிழ் விரிவுரையாளர்களாகவும் வேண்டும்."

இக் கருத்துக்கள் தமிழ்ப் பேரறிஞர் பண்டிதர் நாகலிங்கம் அவர்களால் தெரிவிக்கப்பட்டு 'தமிழோடு அவாவுதல்' நூலில் இடம்பெற்றுள்ளன. இவற்றைக் கடைப்பிடித்துச் செயற்படுத்தினால் தமிழ் மொழி தன் தொன்மையும் இனிமையும் இழக்காது சிறப்புறும் என்பது நிச்சயம்.

இன்றைய இளம் சமூகத்தினரிடம் தமிழ் மொழியை, தமிழ்ப்பாடத்தைக் கற்பதிலே அதிக நாட்டம் இல்லை. வெளிநாடுகளில் வாசம் செய்ய விரும்புவதும், அவர்களுக்கிருக்கும் ஆங்கில மோகமும் அதற்குக் காரணம் என்றும் சொல்லலாம். பெரும்பாலும், படித்துப் பதவியிலி ருப்பவர்கள் யாவரும் தம் குழந்தைகளை தமிழ் மொழியில் கற்பிக்கும் முன்பள்ளிகளில் சேர்க்காமல் ஆங்கில மொழி மூலம் கற்கக்கூடிய முன்பள்ளியிலேயே சேர்க்கிறார்கள். அவர்களுக்கு தேனினுமினிய செந்தமிழின் இனிமையை நுகர வாய்ப்பே இல்லாமல் போய்விடும். அவர்களுக்கு மொழிப்பற்றே அற்றுவிடும். நாட்டுப் பற்றும் குறைந்து விடும்.

இவ் விடயத்தைப் பற்றி, இருபத்தைந்தாம் கேள்விக்குப் பதில் தெரிவிக்கும் போது பண்டிதர் அவர்கள் வெளியிட்ட கருத்துக்கள் நினைவில் பதிக்க வேண்டிய வையாகும்.

"தாய்மொழிக் கல்வி பிள்ளைகளுக்கு முக்கிய மென்பது மொழி ஆய்வாளர் கருத்து. எமது தாய் மொழி தமிழாக இருப்பதால் அதைவிட்டால் எமது தாய்நாட்டுப் பற்று அற்றுப் போய்விடும். நாட்டுப்பற்று நீங்கினால் மனிதன் நடைப்பிணமாகி விடுவான். தாய்மொழியில் நல்ல தேர்ச்சி கொண்டோர் பிறமொழிகளை இலகுவாகக் கற்கலாம். இதற்கு சுவாமி ஞானப்பிரகாசர் சான்றாவார். ஏன் ஜி.யு.போப், வீரமாமுனிவர் என்பாரும் தமது தாய் மொழியில் புலமை எய்திய பின்னரே பிறமொழிகளில் பாண்டித்தியமெய்தினர்.

இளமையில் பிறமொழிக் கல்வியில் ஈடுபடுவோரே எனக்கு 'ரமில்' தெரியாது என்று கூச்சமில்லாமல் கூக்குரல் போடுவர்."

என்றிவ்வாறு கூறும் பண்டிதர் நாகலிங்கம் அவர்கள், தாய்மொழியை முதலில் நன்கு கற்றால் பிறமொழிகளை இலகுவாகக் கற்கலாம் என்ற வழியினை இளம் சந்ததியினருக்குத் தெரிவிக்கிறார்.

தமிழ் இலக்கண இலக்கியங்களை ஐயம்திரிபறக் கற்றுத்தேறி தமிழ்க்கடலாக விளங்கும் ஒரு தமிழ்ப் பேரறிஞரிடம் பெறுமதிமிக்க, பொருத்தமான கேள்விகளை முன்வைத்து, அவர் வழங்கிய அரிய, பெரிய பதில் கருத்துக்கள் வாயிலாக தமிழின் சிறப்பை, தமிழின் பெருமையை, தமிழின் இன்றைய நிலையை, தமிழை வளர்ப்பதற்கான வழிமுறைகளைத் தாங்கி வரும் 'தமிழோடு அவாவுதல்' நிச்சயமாக பாராட்டுக்குரியதோர் படைப்பாகும். ■

## நூல் மதிப்பீடுகள்

'நூல் மதிப்பீடுகள்' பகுதியில் தங்கள் நூல்களும்,
சஞ்சிகைகளும் தொடர்பான
மதிப்பீடுகள் இடம்பெறுவதை விரும்பும்
வெளியீட்டாளர்கள்
தமது படைப்புகளின் இரண்டு பிரதிகளை
அனுப்பி வைக்கவும்.
மூன்று வருடங்களுக்குள் வெளிவந்த நூல்கள்
மதிப்பீட்டுக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.
'வரப்பெற்றோம்' பகுதியில் சிறிய அறிமுகக் குறிப்பிற்கு
ஒரு பிரதி மட்டும் அனுப்பலாம்.

'கலைமுகம்' சஞ்சிகைக்கு
உங்கள் ஆக்கங்களையும் கருத்துக்களையும்
அனுப்பவேண்டிய முகவரி:


ஆசிரியர்,
'கலைமுகம்'
திருமறைக் கலாமன்றம்
238 பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பத்திற்கான தேடல்கள்

**தரிசனன்**




நூல் : திருப்பத்திற்கான தேடல்கள் (விழிப்புணர்வுக் கட்டுரைகள்)
ஆசிரியர்: செ. அன்புராசா
வெளியீடு: அமலமரித் தியாகிகள்
பதிப்பு : 2013
விலை : 250.00

மனிதனொருவனிடம் இருந்தேயாக வேண்டிய அடிப்படை நற்பண்புகளில் ஒன்று மனிதகுல அபிமானம். தன்போலும் மனித ஜீவன்களின் உயர்வுகள் குறித்தும் உன்னத மேம்பாடுகள் குறித்தும் ஆழ்ந்து சிந்தித்து சிறப்பை உணராது வீண்பட்டுப் போகின்ற சக மனிதர்களின் அறியாமைக்காகக் கவலைப்பட்டு அவர்கள் தம் இருட்சிறையிலிருந்தும் மீண்டு வர வேண்டும் என விரும்புகின்ற ஒரு நல்ல சிந்தனையாளரின் கருத்துக்களது தொகுப்பாக வெளிவந்துள்ள கட்டுரை நூல் 'திருப்பத்திற்கான தேடல்கள்'. வாசிக்கப்பட வேண்டிய - அதிலும் இளைய தலைமுறையினரால் புரிந்து கொள்ளப்பட வேண்டிய இந்த நூல் நல்ல நூல்களின் வரிசையில் தவிர்க்கப்படாத ஒரு முக்கியத்துவத்தைப் பெறுகிறது.

யாரிடத்தில் நிறைந்த அன்பும், மனித நேயமும் இதயம் நிறைய இருக்கிறதோ அத்தகையவர்களின் சிந்தனைகள் ஒளியின் வழிகளாய் நின்று நிலைக்க வல்லவை. இலகுவான நடை, தெளிவான பார்வை, இணக்கமான அணுகுமுறை, நியாயத் தெளிவு மிக்க முன்வைப்புகள் என்பவற்றுடன் சிறந்து மிளிர்கிறது இந் நூல்.

இருபத்தைந்து தலைப்புக்களில் எழுதப்பட்டுள்ள இக் கட்டுரைகள் வாசிக்கும் எவரும் புரிந்து கொள்ளக் கூடிய மொழி நடையில் அமைந்துள்ளன.

போருக்குப் பின்பான வாழ்க்கையில் இளைய தலைமுறையினரிடம் தோன்றியுள்ள மனமாற்றம், நடத்தைக் கோலங்கள் இவற்றைப் பொறுப்போடு நோக்கி, அனுதாபத்தோடும், ஒரு மெல்லிய நகைச்சுவையோடும் எழுதப்பட்டுள்ளன இக் கட்டுரைகள்.

மனம் வருந்தத்தக்க நிலைமைகளை நுணுக்கமான மென்மொழியில் எடுத்துச் சொல்லும் தன்மை வாசகர்களின் புரிதலுக்குத் துணை செய்கிறது.

எப்படியும் வாழலாமா?வாழ்வதன் பொருள் உணர்வோமா? கவலைகளைக் களைவோமா? தொலைக்காட்சிக்குள் தொலைந்து போகலாமா? என்ற தலைப்புக்களில் அமைந்துள்ள கட்டுரைகள் கட்டாயமாக அனைவராலும் வாசிக்கப்பட வேண்டியவை.

காலத்தின் தேவைகளாக உருவாகும் நல்ல நூல்கள் - பரப்பப்படும் சிந்தனைகள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.


அன்புராசா அடிகளாரின் பணி தொடரட்டும்.

வாசிக்கும் பழக்கம் அருகி வருகின்ற ஒரு ஆபத்தான சூழலில் இத்தகைய சிந்தனைகளை எப்படியாவது அனைவரும் அறியும்படி செய்ய வேண்டியது நம் அனைவரினதும் கடமை எனப் புரிந்து கொள்வோம். ■

---

# சொற்குறியம்

**சி.ரமேஷ்**




நூல்: சொற்குறியம் (கட்டுரைத் தொகுதி)
ஆசிரியர்: ந.மயூரரூபன்
வெளியீடு: எழினி, பழைய பொலிஸ் நிலைய வீதி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை.
பதிப்பு: நவம்பர் 2013
விலை: 200.00

அறிவுத்திரட்டலுக்குரிய வழியாக அமையும் வாசிப்பு கண் என்னும் புலன்வழி படைப்பாளியின் எண்ணக் கருக்களை இனம் காணுவதற்கும், பனுவலின் கட்டமைப்பை, உள்ளடக்கத்தை விளங்கிக் கொள்வதற்கும், அதனைப் பொருள் கொண்டு புரிந்து நினைவில் நிலை நிறுத்திக் கொள்வதற்கும் உதவுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின்முட்டறுப்பான் ஆகும் -
மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்"

"சபை நடுவே நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய மாட்டாதவன் நன் மரம்" என்னும் ஔவையாரின் கூற்றினால் உண்டாகும் இழிதகைமையை நீக்கும் வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தி நிற்கும் இப் பழம் பாட்டு வாசிப்பின் முறைமையையும் வழியையும் சுட்டி நிற்கிறது. எழுத்தில் உள்ளதை கண்ணால் கண்டு வாயால் உச்சரித்து பொருள் கொள்ளும் போது வாசிப்பானது காணல், உச்சரித்தல், பொருளுணர்தல் என்னும் மூன்று கூறுகளின் உள்வாங்கலுக்கூடாக நிகழ்த்தப் படுவதாக சுப்புராமரெட்டியா கூறுவார்.

ஒரு புத்தகத்தை ஆழ்ந்து அனுபவிக்க வேண்டுமென்றால்; அதை உங்களுக்குள்ளே இரண்டறக் கலக்கச் செய்ய வேண்டுமென்றால்; ஆசிரியரின் எண்ணங்களோடு உங்கள் எண்ணங்களையும் கலந்து அதை உங்களின் தனிப்பட்ட அனுபவமாக மாற்றிக் கொள்ள வேண்டுமென்றால் அதை நீங்கள் நிதானமாக படித்தேயாக வேண்டும் என்கிறார் 'ஸ்லோ ரீடிங்' புத்தகத்தின் ஆசிரியர் ஜான் மீய்டெமா. ஆனால் நிதான வாசிப்பு என்ற பதத்தைப் பிரபலப்படுத்திய 'லான்ஸ்லாட் ஆர்.ப்ளெட்சர்' இக் கருத்தை ஏற்கவில்லை. "நிதான வாசிப்பு என்பது வாசகனின் கற்பனையை கட்டவிழ்த்து விடுவதற்காக அல்ல, மாறாக ஆசிரியரின் படைப்பாற்றலை, கற்பனையைக் கண்டறிவதற்கானது" எனக்கூறும் ஆர்.ப்ளெட்சர் ஒரு நூலில் ஆசிரியர் எழுதியதை முற்றிலும் கண்டுணரும் நிலையை அடைவதற்கான எத்தனமாக நிதான வாசிப்பு அமையும் என்பார்.

எல்லையற்ற சிந்தனைகளின் விளைவே இலக்கியத்தில் புதிய சாத்தியங்களை நிகழ்த்துகிறது. மையத்துக்கூடாக கிளர்ந்தெழும் இவ்வெழுத்தின் உள்ளகத் தன்மை தொடர்நிலை வாசிப்பினூடாக வாசகனுக்கு கைகூடுகிறது. அகத்தின் எல்லைகளை விஸ்தீரணப்படுத்தும் தொடர்நிலை வாசிப்பு அகத்தின் நனவிலி நிலையில் மேலதிக வாசிப்பை நிகழ்த்தும் தன்மை கொண்டது. அவ்வகையில் மேலதிக வாசிப்பை கோரும் மயூரரூபனின் 'சொற்குறியம்' சொல்லகற்சியினூடாக பன்முகத்தன்மை கொண்ட தொகுப்பாக தன்னை முன்மொழிகிறது. பாலையாய் நீளும் தாபத்தின் வெளி: சட்டநாதனின் 'நீளும்பாலை' தொடங்கி அகத்தில் அழுந்தும் புறம்: கருணைரவியின் 'கடவுளின் மரணம்' ஈறாக பதினைந்து கட்டுரைகளைக் கொண்ட இத் தொகுப்பு தொடர்நிலை வாசிப்புக்கூடாகவே தன்னை அடையாளப்படுத்துகிறது. குறுநாவல், சிறுகதை, கவிதைகளை படித்த அருட்டுணர்வினால் எழுதப்பட்ட இப் பிரதிகள் உதயன், சுடர் ஒளி பத்திரிகைகளிலும் 'தவிர' இதழிலும் வெளிவந்தவை.

எஸ்.போஸ்: வலியறியும் வார்த்தைகள், மொன்ரேஜ் உத்தி: பா.அகிலனின் சுவிசேஷங்கள், புற உலகின் இயல்புகள்: ந.சத்தியபாலனின் கவிதைகள், சமூக மெய்மை தரும் தொல் மனப்படிமம்: துவாரகனின் தூக்கணாங் குருவிக் கூடு, இரண்டாம் ஜீவிதம்: தானா விஷ்ணுவின் மூன்று நட்சத்திரங்கள், மனமொழியின் செய்தி: த.அஜந்தகுமாரின் அப்பாவின் சித்திரங்கள், வெளியில் நிற்கும் உண்மைகள்: சித்தாந்தன் கவிதைகள், குறுக்கு மறுக்கு: றஷ்மியின் ஈ தனது பெயரை மறந்து போனது ஆகியன இப் பிரதியில் கவிதை குறித்ததான திறனாய்வாக இடம்பெறுகிறது. 'புற உலகின் இயல்புகள்: ந.சத்தியபாலனின் கவிதைகள்' தவிர்ந்த ஏனையன இளைய தலைமுறையினரின் கவிதைகளை இனங்காண்பதற்கும் அவர்களின் கவிதைகளுடன் பரிட்சயம் கொள்வதற்கும் உதவுகின்றது. இரண்டாம் ஜீவிதம்: தானா விஷ்ணுவின் மூன்று நட்சத்திரங்கள், குறுக்கு மறுக்கு: றஷ்மியின் ஈ தனது பெயரை மறந்து போனது தவிர்ந்த கவிதை குறித்ததான ஏனைய திறனாய்வுகள் இரண்டு, மூன்று பக்கங்களுக்குள் தம்மை முடித்துக் கொள்கின்றன.

அதீத புனைவுக்கூடாக மொழியின் உச்சபட்ச சாத்தியங்களை நிகழ்த்தும் எஸ்.போஸின் கவிதைகள் சொல் நேர்த்திமிக்கவை. சமூகத்தினால் தான் எதிர்கொண்ட வலிகளையும், வலிகளினால் எதிர்கொண்ட வேதனைகளையும் பாடும் சுதாகரின் கவிதைகள் வதையின் கோரத்தில் எழும் அரசின் குரூர முகங்களையும் அம்பலப்படுத்தும் தன்மை கொண்டவை. போஸ் உயிருடன் இருந்த வேளையில் அவருடைய கவிதைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறிக்கிடந்தமையால் அவர் கவிதைகள் குறித்ததான பதிவுகள் எவையும் அக் காலப்பகுதியில் வெளிவரவில்லை. அவர் இறந்த பின் மே - ஜூன் 2007 'சரிநிகர்' இதழில் கருணாகரன் எழுதிய 'அவர்கள் அவனைச் சுட்டுக் கொன்றனர்' கட்டுரை போஸின் மரணத்தினூடாக அவருடைய ஆளுமை குறித்ததான பதிவுகளை முன்மொழிந்தது. 'கலைமுகம்' ஜூலை - செப்ரெம்பர் 2008 இதழில் 'சந்திரபோஸ் சுதாகரின் கவிதைகளை முன்வைத்து ஒரு வாசகப்பார்வை' சாங்கிருத்தியனால் எழுதப்பட்ட கட்டுரை போஸின் கவிதைகள் குறித்ததான ஒரு உசாவுதலை செய்ததேயன்றி அது பூரணமான கட்டுரையன்று. அப்போதைய காலத்தையும் சூழ்நிலையையும் 'கலைமுகம்' சஞ்சிகையின் வெளிப்பாட்டுத் தன்மையையும் கவனத்தில் கொண்டு கட்டுரை எழுதப்பட்டமையால் போஸின் கவிதை குறித்ததான முழுமையான பதிவினை அக்கட்டுரை வெளிப்படுத்தவில்லை. இதனை 'கலைமுகம்' இதழில் (ஜனவரி - ஜூன் 2009) அனார் எழுதிய கடிதமும் வெளிப்படுத்தி நின்றது. ஆனால் மயூரரூபனின் எஸ்.போஸ்: வலியறியும் வார்த்தைகள் எனும் பத்தி சுதாகரின் 'சூரியனைக் கவர்ந்து சென்ற மிருகம்', 'வலியறியாத வார்த்தைகள்' என்னும் முக்கிய கவிதைகளை இனம் காட்டி நிற்கிறது. தன் மரணத்தையும் தனக்கு நிகழ இருப்பதையும் மனக்கண்கொண்டு பாடும் இக் கவிதையை பின்நவீனத்துவ கூறுகளுக்கூடாக தனக்கேயுரிய மொழியில் தனக்கேயுரிய பிரத்தியேக தன்மையுடன் எடுத்துரைக்கிறார் மயூரரூபன்.

உணர்ச்சியின் செறிநிலையில் தர்க்கங்களின், அதர்க்கங்களின் சொல்லிணைவில் புனைவுருவாக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறும் பா.அகிலனின் கவிதைமொழி சொற்களுக்கப்பால் முடிவிலியற்று விரியும் தன்மை கொண்டது. பா.அகிலனின் 'சுவிசேஷங்கள்' கவிதைக் கட்டமைப்பை விளக்கும் இப் பத்தி எதிர் எதிராக இரு பொருள்களை வைப்பதன் மூலம் மூன்றாவதான எண்ணத்தை மனங்களில் தொற்றவைக்கும் மொன்ரேஜ் உத்திக்கூடாக அகிலனின் கவிதைக் கட்டமைப்பை விளக்கி நிற்கிறது. சாதாரண அனுபவங் களும் அசாதாரண அனுபவங்களும் பெருங்காய அனுபவங்களும் அகிலனின் மொழியிலும் மொழிதலிலும் வெளிப்படும் பாங்கினை இப்பத்தி சிறப்பாக எடுத்து விளக்குகிறது.

அவநம்பிக்கைகளுடன் முகம் கொள்ளும் வாழ்வினை கொதிப்புறும் உலை முகத்தின் புனைவுகளாக வெளிப்படுத்தும் சத்தியபாலனின் கவிதைகள் குறித்ததான 'புற உலகின் இயல்புகள்: ந.சத்தியபாலன் கவிதைகள்' என்னும் பத்தி சத்தியபாலனின் கவிதைகளை அகவுணர்வு, சமூகத்தளத்திலும் வைத்து அணுகுகின்றது. சத்தியபாலனின் கவிதைகளின் மையத்தை நுண்ணுர்வுத் தளத்தினூடாக வெளிப்படுத்தும் இக் கட்டுரை மயூரரூபனின் நேர்த்தியான பத்திகளில் ஒன்று.

மயூரரூபன் உதயன் - சூரியகாந்தியில் எழுதிய பத்திகள் பல சாதாரண வாசகனால் எளிதில் விளங்கிக் கொள்ள முடியாதவை. ஆயினும் பிரதியைக் கண்டடைவதற்கான எத்தனமாக இப் பத்திகள் அமைகின்றன. இப் பத்திகள் கலைஞனின் படைப்பை ஒட்டுமொத்தமாக எடுத்து நோக்காமல் கலைஞனின் படைப்புக்களில் சிறந்தனவற் றையும் நுண்மையாக ஆராயப்பட வேண்டிய விடயங் களையும் பேசுகின்றன. துவாரகனின் 'மூச்சுக் காற்றால் நிறையும் வெளிகள்' என்னும் தொகுப்பில் இடம்பெறும் 'தூக்கணாங் குருவிக்கூடு' மிகச் சிறந்த கவிதைகளில் ஒன்று. யுத்த பூமியில் சிக்குண்டு வாழும் மக்களின் அவல வாழ்வின் வலிகளை தூக்கணாங்குருவிக் கூடு என்னும் குறியீட்டுக் கூடாக எடுத்துரைக்கும் இக் கவிதை சமூக மெய்மை தரும் தொல்மனப்படிமமாக மயூரரூபனின் கட்டுரையில் துலங்குகிறது.

மயூரரூபனின் பத்தியில் குறிப்பிடப்படும் தலைப்பினூடாக கவிதைகளின் போக்கையும் நோக்கையும் இனம் கண்டு கொள்ளலாம். அகிலன், சத்தியபாலன், துவாரகன் குறித்து எழுதப்பட்ட அனைத்து பத்திகளிலும் இப் போக்கை இனம் கண்டு கொள்ளலாம். 'இரண்டாம் ஜீவிதம்: தானா விஷ்ணுவின் மூன்று நட்சத்திரங்கள்' என்னும் பத்தியும் இத் தடத்திலேயே முகம் கொள்கிறது. தானா விஷ்ணுவின் மூன்று நட்சத்திரங்களை ஆராயும் பத்தி விஷ்ணுவின் கவிதையின் மையச்சரடையும் அது பிரதிபலிக்கும் புறவெளியையும் சுட்டி நிற்கிறது. பரிச்சய நீக்கம் பெறும் பின் நவீனத்துவ ஈழத்தின் எழுத்துக்களின் தன்மையைச் சுட்டி நிற்கும் இப் பத்தி ரோலன் பார்த்தின் 'மொழிக் கிடங்கு' கோட்பாட்டு வாயிலாக விஷ்ணுவின் கவிதையை நோக்குகிறது.

தனியனின் மரணத்துக்குப்பின் வாழ்வு குறித்ததான பதிவுகளாக இடம்பெறும் கல்வெட்டுக்கள் தனியனின் வாழ்வுக்கான அர்த்தத்தையும் அளிக்கிறது. அவ்வகையில் த.அஜந்தகுமாரின் அப்பாவின் சித்திரங்களை மனமொழிவின் செய்திகளாக வெளிக்கொண்டு வரும் 'மனமொழிவின் செய்தி: த.அஜந்தகுமாரின் அப்பாவின் சித்திரங்கள்' குறிவழி இயங்கும் தற்காலக் கல்வெட்டுக் களுக்கூடாக த.அஜந்தகுமாரின் தந்தை குறித்ததான மனப்படிமங்களை எடுத்துரைக்கிறது. கலைஞனின் படைப்பை இனங்கண்டு அதனை உரிய முறையில் வெளிப்படுத்தும் போது நோக்கம் வெற்றி பெறுகின்றது. அவ் வகையில் மயூரரூபனின் எழுத்துக்கள் செம்மையான படைப்பின் இயங்கு தன்மையை மொழிவழி மூலம் வெளிப்படுத்தி நிற்கிறது.

செறிவான, இறுக்கமான படிமங்களுக்கூடாக துயரிசையாய் கவியும் சித்தாந்தனின் கவிதைகள் மனக் காயங்களிலிருந்து பிறப்பவை. அனுபவச் சாரத்தின் மீதெழும் இப்புனைவு வெளி அர்த்த கருத்துருக்களாலான நூதனவெளி. இவ்வெளியை ஊடறுத்து நோக்கும் மயூரரூபனின் 'வெளியில் நிற்கும் உண்மைகள்: சித்தாந்தனின் கவிதைகள்' கருத்து வழிப்படிமங்களுக்கூடாக தனித்தலையும் சித்தாந்தனின் கவிமொழியை வெளிப்படுத்தி நிற்கிறது. படைப்பு மீள் வாசிப்புக்கூடாக புதிய வெளிகளைச் சாத்தியப்படுத்தும் என்பதை இப்பத்தி கோடிட்டுக் காட்டுகிறது.

சொல்லின் ஆழ் பொருண்மையில் கட்டுறும் றஷ்மியின் கவிதைகள் உள்முகத்தன்மை கொண்டவை. மொழியின் அகற்சியில் இயங்கும் றஷ்மியின் கவிதைகள் குறித்ததான பதிவுகளாக 'குறுக்கு மறுக்கு: றஷ்மியின் ஈ தனது பெயரை மறந்து போனது' என்னும் கட்டுரை அமைகிறது. ஈழத்தின் வாழ்வியற் புலத்தில் வைத்து றஷ்மியின் கவிதைகளை வெளிப்படுத்தும் இப் பத்தி தாலூஸ்கத்தாரியின் குறுக்கு மறுக்கு என்னும் கோட்பாட்டின் வழி றஷ்மியின் கவிதைகளை ஆராய்கிறது. தொகுப்பின் வழி றஷ்மியை அணுகவும் றஷ்மியின் கவிதைக் கட்டமைப்பை விளங்கிக் கொள்ளவும் இப் பத்தி உதவுகிறது.

முரணி: சண்முகனின் 'அழகியின் துயரங்கள்', தெணியானின் 'பிஞ்சுப்பழம்', பிரிகோலேஜ் மனம்: இராஜேஸ்கண்ண்னின் 'இறுக்கம்', கருணைரவியின் 'கடவுளின் மரணம்' முதலான பத்திகள், சிறுகதைகள் குறித்ததான பதிவுகளாகத் தம்மை வெளிக்காட்டி நிற்கின்றன.

வன்னிப் பெருநிலத்தின் போரின் மையச் சூழலுக்குள் உழன்று அதன் வாழ்வையும் வலியையும் எடுத்துரைக்கும் சிறுகதைத் தொகுப்பே கருணை ரவியின் 'கடவுளின் மரணம்' ஆகும். அதிகாரமுறைமைகளுக் கூடாகக் கட்டமையும் வன்முறை அரசியலையும் மக்களின் வாழ்வையும் பேசும் மயூரரூபனின் இப்பத்தி கருணை ரவியின் சிறுகதைகளை அகவயநிலை தோய்ந்து எழுதுதல், புறவயநிலை நின்று எழுதுதல் என்னும் இரண்டு தளங் களில் அணுகுகிறது. இதைப் போன்று 'பிரிகோலேஜ் மனம் இராஜேஸ் கண்ணனின் இறுக்கம்' என்னும் கட்டுரை மென்னுணர்வுத் தளத்தில் கட்டமையும் இராஜேஸ்கண்ண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னின் படைப்புலகத்தைப் பேசுகிறது. நுட்பமான கலைஞன் ஏலவே பேசப்பட்ட விடயங்களைக் கூட செவ்வியலாக்கத்தின் பாற்பாட்டு புதிய நோக்கில், புதிய வடிவில் தருவான் என்பதை 'பிரிகோலேஜ் மனம்' என்னும் பிரெஞ்ச் சொல்வழி அணுகும் இப்பத்தி இராஜேஸ்கண்ணனின் படைப்பின் நுண்வெளியை மதிப்பிடுகிறது.

'முரணி: சண்முகனின் அழகியின் துயரங்கள்' என்னும் பத்தி 'உதிரிகளும்...' தொகுப்பில் இடம்பெறும் 'அழகியின் துயரங்கள்' குறித்ததான பதிவுகளாக இடம் பெறுகிறது. குப்பிளானின் பாத்திரங்களுக்கூடாக வெளிப்படும் சமூகக் கட்டமைப்பைக் காட்சிப்படுத்தும் எழுத்துக்கள் சண்முகனின் மொழிநடை குறித்ததான பதிவுகளையும் சுட்டி நிற்கிறது. நாற்பத்தி மூன்று ஆண்டு களுக்கு முன்னால் தெணியானால் எழுதப்பட்ட 'பிஞ்சுப்பழம்' சிறுகதையின் உள்முகக் கட்டமைப்பை ஆராயும் இப்பத்தி அச் சிறுகதைக்கூடாக யாழ்ப்பாணத்தின் சமூக வாழ்வியலைப் பதிவு செய்கிறது. குறிப்பாக அக் காலத்திலிருந்து இக் காலம் வரை சமூகம், வர்க்கம், குடும்பம் சார்ந்து இயங்கும் இளைய தலைமுறையினரின் குணவியல்பு மாற்றங்களுக்கான குறுக்கு வெட்டு முகப்பரப்பை உணர்த்தி நிற்கும் இப்பத்தி தெணியானின் புனைவின் இயங்கு தளத்தையும் வாசகனுக்குச் சுட்டி நிற்கிறது.


'பாலையாய் நீளும் தாபத்தின் வெளி: சட்டநாதனின் நீளும் பாலை' என்னும் பத்தி காதலும் காமமும் அகன்று விட்ட நிலையில் பாலையாய் உலரும் மன உணர்வின் உலர்ச்சியை சட்டநாதனின் நீளும் பாலை என்னும் குறுநாவலுக்கூடாகப் பேசுகிறது. மென்னுணர்வின் தளத்தில் இயங்கும் சட்டநாதனின் கதைகளை ஆராயும் இப்பத்தி மனித மனத்தில் இடம்பெறும் உணர்வுநிலை மாற்றங்களை மிகச் செம்மையாய் உணர்த்தி நிற்கிறது.

உயர்மெய்மைச்சடங்கு: ஞானம் போர் இலக்கியச் சிறப்பிதழும், பிறவும், கருத்தியல்வெளி: சி.விமலனின் கிளை நதியின் பிரவாகம் முதலான பத்திகள் நூலுக்கான ஆய்வு விமர்சனங்களாக அமைகின்றன. போர்க்கால இலக்கியங்களின் வரவையும் அதன் இயங்கு தளத்தையும் வெளிப்படுத்தி நிற்கும் மயூரரூபனின் 'உயர்மெய்மைச் சடங்கு: ஞானம் போர் இலக்கியச் சிறப்பிதழும், பிறவும்' என்னும் பத்தி போர் இலக்கியம் நுகர்வுப்பண்டமாக ஆக்கப்படும் போது எதிர்கொள்ளும் விளைவுகளையும் பேசுகிறது. இதனைப் போன்று சி.விமலனின் 'கிளை நதியின் பிரவாகம்' குறித்தான பத்தி, விமலனின் தீவிர வாசிப்புக்கூடாக உருப்பெறும் அவரின் ஆய்வு முயற்சிகளையும் படைப்பின் கூறுகளை அவர் இனம் கண்டுள்ள முறைமையையும் தமிழ்ச் சஞ்சிகைப் புலத்தில் அவருடைய இருப்பையும், ஆளுமையையும் வெளிப்படுத்தி நிற்கிறது.

மயூரரூபனின் எழுத்துக்கள் படைப்பின் அக, புறவயத்தன்மையை பேசும் குறியீட்டு மொழியியல் சார்ந்தவை. வரலாற்று, சமூகச் சூழல் சார்ந்து படைப்பை அணுகும் இம் முயற்சி வரவேற்கத்தக்கவை. தொடர்நிலை வாசிப்பினூடாக மொழிதலைச் சாத்தியப்படுத்தும் இவ்வெழுத்துக்கள் புரிதலையும் புரிதலுக்கப்பால் நனவிலி நிலையில் மீள் உருப்பெறும் பொருண்மைகளையும் சாத்தியமாக்கவல்லன. ஆழ்நிலை வாசிப்பினூடாக தன்னைச் சாத்தியமாக்கவல்ல இவ்வெழுத்து முயற்சிகள் நூலில் இடம்பெறும் எழுத்துப்பிழைகளை தவிர்த்து நோக்குமிடத்து நின்று நிலைபெறும் என்பதில் ஐயமில்லை. ■

# கடலின் கடைசி அலை

**ந.சத்தியபாலன்**




நூல்: கடலின் கடைசி அலை (கவிதைத் தொகுதி)
ஆசிரியர்: பொலிகையூர் சு.க.சிந்துதாசன்
வெளியீடு: அலைகரை
பதிப்பு: நவம்பர் 2013
விலை: 250.00

**த**மிழில் கவிதைத் தொகுப்புக்கள் ஓரளவு அதிகமாகவே வெளிவந்து கொண்டிருக்கும் தற்போதைய சூழலில் சிந்துதாசனின் 'கடலின் கடைசி அலை' வெளிவந்திருக்கிறது. உள்ளடக்கக் கனதி, நேரடியான மொழி, எவருக்கும் புரியத்தக்க எளிமையான நடை இவற்றோடு ஒரு காலத்தின் வாழ்க்கையை தனது இதயத்தின் மொழியால் கவிதைகளாக்கித் தந்திருக்கிறார் சிந்துதாசன். பொதுவாக கவிதைத் தொகுப்பொன்றில் கவிஞருடைய உள்ளக உணர்வின் குரல் நுண்மையாக வெளிப்படும் தருணங்கள் பல இடங்களில் காணப்படும். 'கடலின் கடைசி அலை'யும் இந்தப் பண்பினைக் கொண்டு அமைந்திருப்பது குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய விடயம். 'சாயம் போன சுவர் தொடக்கம் முகமிழந்த மனிதர்களின் கிரகம்' வரை கவிஞனின் அந்தராத்மாவின குரல் ஆங்காங்கே வெளிப்பட்ட வண்ணம் இருக்கிறது.

'எங்களுக்கான என் அழுகை' கவிதை பேசுகின்ற கவிஞனின் அனுபவம் போர்ச் சூழலில பலரும் எதிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட மிகுந்த வேதனையும், அவமானகரமுமான அனுபவம். மனச்சாட்சியோ, மனிதத் தன்மைகளோ, இரக்கமோ அற்றவர்களின் விலங்கு மனங்கள் நொந்த மனிதர்களின் துயரங்களை தமது கேளிக்கைக்கு மையமாக்கி கொண்டாட முனையும் போர்க்காலச் சிறுமை சிந்துதாசனால் அவருக்கே உரிய பாணியில் வெளிப்படுத்தப்படுகிறது.

இலக்கியம் ஒரு வாழ்க்கையின், ஒரு காலத்தின் சாசனம் எனில் சிந்துதாசன் வாழ்க்கையின் ஒரு கட்டத்தை, அதன் நெருக்கடியை, அதன் துயரம் தரும் அழுத்தமான மனச்சுமையை தனது மொழியில் பதிவு செய்ய இந்தத் தொகுதியைப் பயன்படுத்தியுள்ளார் எனலாம்.

"இடியை மட்டும்
இறக்கிப் போகிறது
மேகம்...
...வான் முகடு பார்த்து
கலங்கிச் சொரியும்
விழிநீரில்...
நனையும் வாழ்வு"

போருடைப்பட்ட வாழ்வின் வலிசூடிய பல முகங்களை ஏந்தி வரும் கவிதைகள் பலவற்றை உள்ளடக்கிய 'கடலின் கடைசி அலை' தொகுப்பில் உள்ள கவிதைகளில் ஒன்று மேற்சொன்னவாறு ஆரம்பிக்கிறது. பொலிகையூர் சிந்துதாசன் மக்களைத் தீயாய் தீய்த்த யுத்தத்தின் நடுவில் வாழ்ந்து மீண்டவர். இரவல் அனுபவங்களினை தமது கைச்சரக்கையும் கலந்து கவிதை படைக்கும் பலருக்கு மத்தியில் துயரின் கொடும் கைகளிடை நெரியுண்டு வெளிப்படுவன சிந்துதாசனின் கவிதைகள்.

துன்பங்கள், துயரங்களிடையே அகப்படுபவர்கள் யார் என்பதைப் பொறுத்து அந்தத் துன்பங்களின் இயல்பை உலகோர் அறியமுடியும். சிந்துதாசன் எதிர்கொண்ட வாழ்க்கை, யுத்தம் அவருக்குத் தந்த அனுபவங்கள், பாடங்கள் கலை வெளிப்பாடுகளாக ஆகும் போது அவை வாசகனின் இதயத்தில் ஏற்படுத்துகின்ற தாக்கங்கள் ஆழமானவை.

சாவின் துரோகம் என்னும் அவரது நேரடி அனுபவம் பேசும் உண்மை.

"பிழைத்து விட்டேன்தான்...
நிதமும் செத்துப்போகிறேன்,
அந்த நாள்
நினைவில்."

என முடிகையில் அந்தக் காட்சி மனதுக்குள் விரிந்து வலி தருகிறது. இப்படி எத்தனை?

வாழ்வின் அந்தக் கொடிய நாட்கள் இரத்தத்தின் துளிர்த்த படி இன்றும் நினைவில் ஆடுகின்றன விழி நீரோடு.

கைவசமிருந்த கனவொன்றின் கொடூரச் சிதைவைக் கவிதை மொழியாக்கும் சிந்துதாசனின் மிகப் பல கவிதைகள் எளிமையான உண்மைகளோடு ஒரு வாழ்வதுடன் சாசனங்கள் ஆகின்றன. மொழியைத் தனது உணர்வுகளின் ஊடகமாக்க முனையும் ஒரு கலைஞன் மொழியோடும், உணர்வோடும் எத்தனை தூரம் மனதால் பயணிக்க முடிகிறதோ அத்தனை தூரம் படைப்பின் வெற்றி தீர்மானிக்கப்படுகிறது. சிந்துதாசனின் தொகுப்பும் இந்த உணர்வுமிக்கது. சாதகமான பல ஆதாரங்களோடு மிளிர்கிறது.

"மாரியைக் கோடை
எரித்து விட்ட ஏப்பம்
ஆவியை வெளித்தள்ள
புழுதியில் குளித்து
'வயல்'
புலம்பித் தேம்புது"

புழுதி வயலின் துயரைச் சொல்லும் சிந்துதாசனின் 'கடலின் கடைசி அலை' எதிர்காலத்தில் நாம்கடந்து வந்த வாழ்வின் யதார்த்தத்தைப் பேசிய நூல்களுள் முக்கியமான ஒன்றாக விளங்கும் எனத் துணிந்து கூறலாம். ■

# என் நதிக்கரையிலும்...

நெற்கொழுதாசன்



கனதிகளோடு நீளுமிந்தக் கணங்கள்
கரைந்துபோக முன்
கடந்துவிட வேண்டும் உங்களை,
கிழித்தெறியப்பட்ட பிரியங்களும்
காவுகொள்ளப்பட்ட உணர்ச்சிகளும்
சடுதியான நிராகரிப்புகளும் உறைந்து கிடக்கின்றன
மன நதியோரத்தில்,
விழி நாக்குகள் வழியவிடும் நாற்றத்தில்,
இந்த நதிக்கரையில் வேறெந்த பிணங்களும்
கரையொதுங்க வேண்டாம்,
புன்னகை போர்த்து இகழும் உதடுகளால் தேவையில்லை
பிரேதகாலத்தின் ஆய்வறிக்கை.
வேர்களின் வேதனைகளை பறவைகள் எடுத்துச்
செல்வதுமில்லை
கிளைகளில் பிரியம் கொள்வதுமில்லை.
என் பயணம் பால் வீதியில் நட்சத்திரங்களோடு அல்ல
உங்களைக் கடக்க அனுமதியுங்கள்
ஒருநாள் என் நதிக்கரையிலும் மீன்குஞ்சுகள் தோன்றலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரப்பெற்றோம்




நூல் : நம்பிக்கைகளுக்கு அப்பால் (கட்டுரைகள்), ஆசிரியர் : மு.புஷ்பராஜன், வெளியீடு : காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட், 669, கே.பி.சாலை, நாகர்கோவில் 629 001, இந்தியா. முதற்பதிப்பு : டிசெம்பர் 2013, விலை : 125.00 (இந்திய ரூபா)

யாழ்ப்பாணம், குருநகரைச் சேர்ந்தவரும், தற்போது புலம்பெயர்ந்து லண்டனில் வாழ்பவருமான மு.புஷ்பராஜன்; பல்வேறு இதழ்களிலும், இணையத்தளங்களிலும் அவ்வப்போது எழுதிய கலை, இலக்கியம் சார்ந்த 19 கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இவரது ஏனைய நூல்கள்: அம்பா, மீண்டும் வரும் நாட்கள், வாழ்புலம் இழந்த துயர், வலை உணங்கு குருமணல்.




நூல் : வேப்பமரம் (நாவல்), ஆசிரியர் : கலையார்வன், வெளியீடு : ஜெயந்த் சென்றர், இல. 28, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம். முதற்பதிப்பு : ஐப்பசி 2013, விலை : 300.00

யாழ்ப்பாணம், குருநகரைச் சேர்ந்தவரும், பல நூல்களை எழுதி வெளியிட்டவருமான கலையார்வன் (கு.இராயப்பு) எழுதிய இரண்டாவது நாவலாக 'வேப்பமரம்' வெளிவந்துள்ளது. இவரது முதலாவது நாவல் 'உப்புக்காற்று' ஆகும். "வேப்பமரம் போர்க்காலச் சூழலில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வின் ஒரு பகுதியை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது" என பேராசிரியர் கலாநிதி ம.இரகுநாதன் தனது வாசிப்புக் குறிப்பில் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார்.




நூல் : காற்றை அழைத்துச் சென்றவர்கள் (கவிதைத் தொகுதி), ஆசிரியர் : ஜமீல், வெளியீடு : புதுப்புனைவு இலக்கிய வட்டம், மருதமுனை. முதற்பதிப்பு : ஜுன் 2013, விலை : 250.00.

கிழக்கிலங்கையின் அம்பாறை மாவட்டத்தின் மருதமுனைக் கிராமத்தைச் சேர்ந்த ஜமீல், ஈழத்தின் குறிப்பிடத்தகுந்த கவிஞர்களில் ஒருவராவார். இவரது தனித்தலையும் பறவையின் துயர்கசியும் பாடல்கள், உடையக் காத்திருத்தல் ஆகிய கவிதைத் தொகுப்புகளைத் தொடர்ந்து, மூன்றாவது நூலாக 'காற்றை அழைத்துச் சென்றவர்கள்' வெளிவந்துள்ளது. "சிறுவர்களின் வெளியை அதன் அரசியல் அர்த்தத்துடன் முன் வைப்பது ஜமீலின் கவிதைகள்தான். சிறுவர் களுக்காக, அவர்கள் சார்பாக முற்றும் ஒரு கவிதைச் செயலை முன் வைக்கிறார் என்ற வகையில் மிக முக்கியமானவராக எனக்கு ஜமீல் தெரிகிறார்" என இந்நூலில் றியாஸ் குரானா குறிப்பிட்டுள்ளார்.



நூல் : இதுவும் ஒரு கதை (சிறுகதைத் தொகுதி), தொகுப்பு : வேலாயுதம் சிவராஜா (வரணியூரான் - ஜுனியர்), வெளியீடு : மகாஜனசபை, அளவெட்டி, முதற்பதிப்பு : ஆடி 2012, விலை : (குறிப்பிடப்படவில்லை).

அளவெட்டியுடன் தொடர்புடைய எட்டுப் படைப்பாளிகளின் பதினைந்து சிறுகதைகளைக்கொண்ட தொகுப்பாக அமைந்துள்ள இந்நூலில், வரணியூரான் (ஜுனியர்), இந்திரஜித், வ.வசந்தகுமார், பசுபதி உதயகுமார், மாலாதேவி மதிவதனன், த.தனசீலன், ந.ஸ்ரீஸ்கந்தராஜா (மில்ஸ்ரீ), பத்மாஷனி மாணிக்கரட்ணம் ஆகியோரின் சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன.



நூல் : மரணம், இழப்பு, மலர்தல் (இழப்பிலிருந்து வளர்ச்சியை நோக்கி ஒரு பயணம்), தொகுப்பும், ஆக்கமும் : மீராபாரதி, வெளியீடு : பிரக்ஞை, கனடா, முதற்பதிப்பு : மே 2013, விலை : (குறிப்பிடப்படவில்லை).

"ஈழத்து தமிழ் சமூகம் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக வன்முறைகளையும் போரையும் சந்தித்து வந்திருக்கின்றது. இதனால் பல மரணங்களையும் இழப்புகளையும் சந்தித்திருக்கின்றது. இறுதியாக தன் இனம் அழிக்கப்பட்டதை சாட்சியாக இருந்து பார்த்துள்ளது. இந்த அனுபவங்களிலிருந்தும், பாதிப்புகளிலிருந்தும் உடனடியாக மீள்வது என்பது சாத்தியமில்லாத ஒன்று. ஆனாலும் அதற்கான முயற்சிகள் இப்பொழுதே மேற்கொள்ளப்படவேண்டும். இவ்வாறான முயற்சிகள் மூலம் சிறிய உதவிகள், பங்களிப்புக்களையாவது நாம் செய்யலாம். இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே இந்நூல் வெளியிடப்படுகின்றது" எனக் குறிப்பிடும் மீராபாரதி, தான் எடுத்துக்கொண்ட விடயத்துக்கு அமைவாக இந்நூலில் ஆழமாகவும், ஆக்கபூர்வமாகவும் கருத்துக்களை பகிர்ந்தளித்துள்ளார். அனைவருக்கும் அவசியமான நூலாக இது அமைந்துள்ளது.



நூல்: அப்பாவின் சித்திரங்கள் (கவிதைகள்), ஆசிரியர் த. அஜந்தகுமார், வெளியீடு: புதிய தரிசனம், யார்வத்தை, வதிரி, கரவெட்டி. பதிப்பு: 5.3.2013.

அமரத்துவமடைந்த சின்னத்துரை தருமராசா அவர்களின் 31 ஆம் நாள் நினைவாக வெளியிடப்பட்டுள்ள இந்நூலில் தன் தந்தையுடனான நினைவுகளை கவிதைகளாக உருக்கமாக பதிவு செய்துள்ளார் அஜந்தகுமார். இச்சிறு நூல் அழகுற வடிவமைக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# தொலைவு

**கீதா கணேஷ்**

"அர்ச்சனா"

"அவிட்ட நட்சத்திரம்"

"தவிட்டிலும் பொன் விளையும்" குறிப்புகள் கொடுக்கும் போதெல்லாம் இதையும் சேர்த்துச் சொல்லிக் கொள்வாள் அம்மா.

தங்கையின் முதற் பிரசவத்திற்காய் அவுஸ்ரேலியா சென்றிருந்தாள். இனிமேல் துடக்குக் கழித்துத்தான் அவள் வருகை.

தைத்துக் கொண்டிருந்த பொத்தானின் துளையில் ஊசியைக் குத்திவிட்டு தேநீர் கலந்து குடிக்கும் போது அவன் நினைவு கௌவிக் கொண்டது.

மூன்று நாட்களாய் அழைப்பில்லை.

மூன்று வருடங்கள் அவனைப் பிரிந்திருந்ததை விடவும் நீண்ட யுகங்களாய்த் தோன்றிய மூன்று நாட்கள். இறுதியாகக் கதைக்கும் போது ஏதோ கென்பி(க)ரன்ஸ்சுக்குச் செல்வதாகக் கூறியிருந்தான்.

"படுக்கப் போகும் போதாவது அவன் அழைப்பு வரும்"

மனம் திறந்து அவனுடன் மூன்று நாட்களையும் சொல்லி விட வேண்டும். ஆனால் ஒரு நாள் கூட தன் அலுவலகம், சக ஊழியர்கள், நண்பர்கள்..... எவற்றையும் பகிர்ந்து கொண்டதில்லை.

என் குரல் அவன் செவி வழியாய் ஊடுருவி உள்ளத்தைக் குளிர்விக்க வேண்டும் என்ற அவாவை அவன் குரல் உணர்த்தியதில்லை.

"பாவம், ஒழுங்காகச் சாப்பிடுவாரா?... சாப்பிடும் போது என் நினைவு ஆட்கொள்ளுமா?" மூன்று வருடங்களானாலும் நினைவுகள் புனிதமாய் புதியனவாய் ஊற்றெடுத்துக் கொண்டிருந்தன.

"அச்சு சேர்ட் தைச்சு முடிஞ்சுதா?" குறும்புக்கார பிரவீனுடன் அவன் பெரியம்மாவும் வாசலில். நாளைக்குத் தான் போடப்போகும் புதுச் சேர்ட் பற்றிய கற்பனையில் அவன். இன்றே பாடசாலையில் தன் நண்பர்களுக்கு அறிவித்திருந்தான். தன் வாகுப்பாசிரியைக்குக் கூட இதைக் கூறியிருந்தான். அவன் கனவு 'புதுச் சேர்ட்டில்'.

பிள்ளைகளின் செல்லக் கதைகளில் மூழ்கும் அவளுக்கு பிரவீனில் தனிப்பிடிப்பு.

சைவ சமயம் படிக்கும் போது, உயிர்களைக் கொல்லக் கூடாது என்றும் சுற்றாடலில் போசாக்கான உணவுகளாக மீன், இறைச்சி உண்ண வேண்டும் என்றும் படித்துக் குழம்பினான்.

"எப்படிக் கொல்லாமல் உண்பது?"

தண்ணீரைக் குடித்து, மீனையும் விழுங்கினால் என் வயிறு மீன் தொட்டி ஆகிவிடுமா? தேம்பி அழுததில் மிஸிஸ் இராமநாதனுக்கு சிரிப்புப் பொத்துக் கொண்டு வரும்.

எதிர்காலத்தின் சிறந்த ஆராய்ச்சியாளன்.

புதிய சேர்ட் அவனை எடுப்பாகக் காட்டியது. காற்சட்டைப் பொக்கற்றுக்குள் கைகளை நுழைத்து நிமிர்ந்து நிற்கிறான். அச்சுவுக்கு மனம் கொள்ளாத மகிழ்ச்சி சிரிப்பாக வெளிப்பட்டு அவன் கன்னத்தில் கிள்ளி விடுகிறாள்.

கென்பி(கு)ரன்ஸ் இன்னமும் முடியாமல் இருக்குமா? முடிந்ததும் எடுப்பன் என்றவர்.

தோசை மா நன்றாகப் புளித்திருந்தது.

காலையில் பிரவீன் அவன் அப்பாவுடன் புதுச் சேர்ட் அணிந்து செல்கிறான். பின்னால் தரணியின் தோளைப் பற்றிப் பிடித்தபடி வர்ஷா மென்மையான பச்சை நிறச் சாறியில். அதன் பிளவுஸ் கூட அச்சு தைச்சது தான்.

வெளிநாட்டுக்கு போனாலும் தையலுக்கு மவுசு குறையாது. அம்மா அடிக்கடி புழுகுவாள். வூள் நூலில் அழகிய சட்டைகள், வர்ண முத்து மாலைகள், தொப்பி, கால்மேசு எல்லாம் தன் கைப்படச் செய்து கனடாவுக்கும் லண்டனுக்கும் அனுப்புவாள்.

"அவ்விடத்திற்கு தவிட்டிலும் பொன் விளையும்."

சுட்டு விரலில் ஊசி ஏறி இரத்தம் மினுங்கியிருந்த இடம் சுகப்பட்டிருந்தது.

உள்ளத்தின் அடியில் ஒரு நெருடல், ஏக்கம்.

**புதிய சேர்ட் அவனை எடுப்பாகக் காட்டியது. காற்சட்டைப் பொக்கற்றுக்குள் கைகளை நுழைத்து நிமிர்ந்து நிற்கிறான். அச்சுவுக்கு மனம் கொள்ளாத மகிழ்ச்சி சிரிப்பாக வெளிப்பட்டு அவன் கன்னத்தில் கிள்ளி விடுகிறாள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அச்சு கோயிலுக்குப் போய் அர்ச்சனை செய். பிறந்த நாளைவிட கலியாண நாள் முக்கியம். வாற வருசம் கலியாண நாளுக்கு நீ போயிருவாய். காலையிலேயே அம்மா உட்பட்ட உறவுகளின் வாழ்த்துக்கள் வந்து குவிந்தன. சென்ற வருடமும் இதே மாதிரி வாழ்த்தியதாய் நினைவு.**

"அம்மா என்னை மட்டும் ஏன் இப்படி? தவிட்டிலும் பொன் விளையும் என்பதை நிரூபிக்கக் களமிறங்கினாயா? அம்மம்மாவும் தவிட்டில் பொன் விளைவதை நிஜமாக்க நினைத்திருக்கலாம்........ நான் ஜனனித்திருக்கமாட்டேன். அவள் செய்தது தப்பா? நான் அதன் பலிக்கடாவா? அம்மா! நீ பாவம் என்ன செய்வாய்? வாழ் நாள் பூராய் உனக்கு டொலர் அனுப்பிய மாமா, என்னை ஏற்றுமதி செய்யக் கேட்டதில் தப்பில்லை."

மாமா!

உறவுகளிலும், தான் பிறந்த மண்ணிலும் அடங்காப் பற்றுடைய சந்நியாசி.

ஐந்து வயதில் அச்சுவை தன்னோடு அணைத்து முத்தமிட்டுப் புகைப்படம் பிடித்தது. இப்பொழுதும் அச்சுவுக்கு அம்மா நினைவுபடுத்திக் காண்பிக்கும் நிகழ்வுகளின் கணங்கள்.

அச்சுவுக்கு வெளிநாட்டில் நிரந்தர வதிவிடம் கிடைக்குமென்பதை அவள் வெள்ளைத் தோல் மூலம் உறுதி செய்த மாமா, கனடாவில் பிறந்த யாழ்.இந்து வேளாளனைத் தேடிப் பிடித்தார்.

அம்மா உறுதிப்படுத்தி விட்டாள்.

"தவிட்டிலும் பொன் விளையும்"

இரண்டு வயதுக் குழந்தைக்கு அளவான லூள் சட்டை அழகாகப் பின்னப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அதற்கேற்ற பொருத்தமான தொப்பி, கால்மேசு எல்லாம் ஜோடியாய். ஒரே நிறத்தில் சிருஷ்டிக்கப்படும்.

சிருஷ்டிப்பு, ரசனை இவை இல்லாமல் அவள் எதிலும் முழுமை அடைவதில்லை.

எதிலுமே அப்படித்தான்.

ஆடைகள் கழுவி உலர்த்திப் போடும் போதும் ரசனை.

"அவளுக்கு விசர் வெயில்ல நிண்டு காயுது."

பஞ்சாபிகள் தத்தம் சோடிகளுடனும், மேற்சட்டை அதன் பாவடைக்குப் பக்கத்திலும். ஒரு போதும் ஒரு பாவாடைக்கு இரண்டு சட்டைகளையோ ஒரு சட்டைக்கு இரண்டு பாவாடைகளையோ ஜோடியாக அணியலாம் என நினைத்ததில்லை. எல்லாம் தனித்தனிச் சோடிகளாக.

தம் பாரங்கள் நீங்கி, உலர்ந்து மெலிதாகக் காற்றில் அசைகையில்... அவை பலதைப் பேசும், சிரிக்கும், மனிதத் தசையின் வியர்வைகளை நீக்கிக் களித்த மகிழ்வில், விடுதலை உணர்வை, இயற்கையை ரசிக்கும்.

"உனக்குச் சரியான பைத்தியம்தான்"

லூள் சட்டை முழுமை பெறுவதாய்த் தெரியவில்லை.

நெருடல்

பிரகாஷ் என்ன செய்வான்? என் கைப்பட சமைத்த உணவிற்காய் காத்திருந்து சலித்து விட்டானோ?

"அச்சு"

"நீங்களா? பிரகாஷ்"

"காசு அனுப்பியிருக்கிறன்"

"பிரகாஷ்! நீங்க எப்பி..."

"வேலைல இருக்கிறன் பிறகு எடுக்கிறன்"

எனக்குப் பிடித்த விடயங்களை, என் நண்பிகளை, நெருக்கமாய் பழகிய தர்முவை, என் கடந்த காலங்களை, என் குட்டி இலங்கைத் தீவின் இந்த மொட்டை மாடியில் நிலா வெளிச்சத்தில் அப்பிடியே ஒப்புவிக்க வேண்டும்.

ஐந்து மணிக்கு கன்னங்களில் வியர்வை வழிய வர, வாசலில் காத்து நின்று அவரின் பெரிய பையை வாங்கி சூடாய்த் தேநீர் ஊற்றி,

விடுமுறை நாட்களில் முழுவதுமாய் இருவரும் எல்லாவற்றையும் தாண்டி, எங்கேனும் போய் இயற்கையில் மூழ்கி மனதைச் சுதந்திரமாய் விட்டு,

"இலக்கிய விழாக்களில், நூல் வெளியீடுகளில் இலயித்து அவை பற்றி விவாதித்து..." சீ... வெறும் தையல்காரியாய் மட்டும் இப்போது ஆகிவிட்டாய்."

சிறிய லூள் சட்டைக்கு நூல் போதாதிருந்தது.

"ஒரு நிமிடத்தை எத்தனை டொலராக்குவதென்பது மாப்பிள்ளையைக் கேட்டுத்தான்." மாமா அகந்தையாய் சொல்லிச் சிரித்தது, ஆயிரம் நாட்கள் கடந்தும் ஒலிக்கிறது.

அனுப்பப்பட்டிருக்கும் பணத்தை எடுக்காமல் விட்டாலென்ன?

பிரகாஷ் நீ இதை ஒரு குறுந்தகவலாய் அனுப்பியிருக்காலம். உன் நிமிடங்களை அநியாயமாக்கிவிட்டாய்.

நாக்கைத் தொங்கப் போட்டபடி வெயிலின் தகிப்பில் நாய் ஓடுகிறது. மரங்கள் அசைவற்று காற்றுக்காய்த் தவமிருந்தன.

அவள் மெல்லிய விரல்களை நெருக்கிப் பிடித்தபடி ஏக்கம் நிறைந்த முகத்துடன் நிற்கும் அவன் குனிந்து அவளைக் கேட்டும் எதற்கும் பதிலில்லை.

விறுமனாய் நிற்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அவன் பாவம். எதுவாயிருந்தாலும் சாதிக்காதே, எதையேனும் வாயைத் திறந்து கதையேன்.”

அவளுக்கருகில் போய் கூற வேண்டும் போலிருந்தது அச்சுவுக்கு.

இருவருக்கும் பசித்திருக்க வேண்டும். வெள்ளவத்தை ‘சென்னை வெயிட்ரேரியன்’ வரவேற்கிறது.

எழுபத்தையாயிரத்து ஐநூறு ரூபாய் வந்திருந்தது.

பிரகாஷ் நீ அனுப்பியது எனக்குப் போதாது. என் ஏக்கத்தை, தனிமையை, கனவுகளை, நீ என்னுடையவனாவதற்கும் நான் உன்னுடையவளாவதற்கும். எதற்குமே... ஆதலினால் உன் டொலர்களை அம்மாவின் கணக்கில் வைப்பிலிட்டேன்.

“புதன் கிழமை. புதுவருட விருந்திற்கு வரச்சொல்லி அழைப்பு வந்தது. அவற்ற செலக்ஷன் தான் இது. அவரும் இதே பேப்பிள் களறில சேர்ட்.” பிரவீனும் அம்மாவுடன் வந்திருந்தான். சாறி வித்தியாவுக்கென்று சொல்லிச் செய்தானோ? அத்தனை அழகாய்...... அவனும் பக்கத்தில் பேப்பிள் சேர்ட்டுடன் நிற்பதாய் கற்பிதத்தில் பார்க்கிறாள்.

திருமணப் புகைப்படத்திற்காய் பிரகாஷ் தன்னருகில் நின்றான் மூன்று வருடங்களுக்கு முன்.

“சோடிப் பொருத்தம் சுப்பர்” சொல்லாதவர்களே இல்லை.

திருமணம்.

அன்பான மனைவி.

அவள் கைப்படச் சமைத்த உணவு.

வம்சம்.

குழந்தைகள்.

சிறு குழந்தையாய் தூங்கிக் கொண்டிருக்கும் அவனை... ஈரக் கூந்தலுடன் மெல்ல தலை கோதி எழுப்ப, உதய கால அணைப்பில் தன் நிலை இழக்கும் சூடான தேநீர்...

அவன் வரையில் எல்லாமே பூச்சியம் பாகையில்.

பருகாமல் காத்துக் கிடந்த அந்த தேநீர் இட்ட சாபமோ?

“அவனுக்காய் என் கைப்பட எப்போதாவது தேநீர் ஊற்றினேனா?”

சடங்குகள் முடிந்து மறுவாரமே அவன் கனடாவுக்குரிய பிளைற்றிலும் வந்திருந்த உறவுகளுடன் ஒருத்தியாய் முப்பத்திரண்டாவது வயதில் மனைவி பட்டம் சூட்டப்பட்ட என்னை இலங்கையும் வரவேற்றது.

“மாப்பிள்ளை நல்ல பணக்காரனாம்”

“நீ நினைச்ச மாதிரியே அம்சமா இருக்கிறானா?”

“இனி எப்ப அச்சு உனக்கு பிளைற்?”

தன்னைக் கட்டுப்படுத்தியிருந்த பிளாஸ்ரிக் ‘பின்’னை மீறி எதற்கோ துடித்துப் போய் நீலக் கோடு போட்ட சட்டை அங்கலாய்த்துக் கொண்டிருந்தது ஜன்னல் வழியாய்த் தெரிகிறது. ஓ... பக்கத்தில் கூடவே காற்றுக் குளித்துக் கொண்டிருந்த, அதனுடன் அணியும் பாவாடை கீழே. தன் சோடியை அண்ணார்ந்து பார்த்தபடி....

18.01...

“அச்சு கோயிலுக்குப் போய் அர்ச்சனை செய். பிறந்த நாளைவிட கலியாண நாள் முக்கியம். வாற வருசம் கலியாண நாளுக்கு நீ போயிருவாய்.” காலையிலேயே அம்மா உட்பட்ட உறவுகளின் வாழ்த்துக்கள் வந்து குவிந்தன. சென்ற வருடமும் இதே மாதிரி வாழ்த்தியதாய் நினைவு.

“வாற வருசம் அவரிட்டப் போயிருவாய்.”

“பிரகாஷ் எனக்கும் கூறு. நினைவுகள் கடந்து எப்படி இறுக்கமாக இருக்க வேண்டும் என்று? உன் விடயத்தில் மட்டும் நானும் உன்னைப் போல் இறுக்கமாக இருந்து விடுகிறேன். கட்டிய கணவனுக்கேற்ப மனைவி மாற வேண்டுமாம்.”

“தெரியுமா? இன்று எங்கள் கலியாண நாள்.”

வாற வருசமாவது உன்னுடன் சேர்ந்து திருமண நாளைக் கொண்டாட வாழ்த்தினார்கள்... ஆனால் நீ...

நிகழ்வுகளின் கணங்களை மீட்டிப் பார்ப்பதற்காய் திருமண நாளில் இருவரும் சோடியாக எடுத்த பிறேம் போட்ட பெரிய படம் சுவரில் தொங்கிக் கொண்டிருக்கிறது இப்போதும்.

“அச்சு தையலை விட்டிடாத வாற வருசம் அங்க போய் வடிவா ஓடர் எடுத்துத் தைக்கிற மாதிரிப் பழகு. புதுசா வாற டிசைன் எல்லாம் பழக வேணும். உனக்கென்ன வீட்டில இருக்கவே கை நிறைய உழைக்கிற மகாராசி.”

“அம்மா! பயப்படாதே, நான் போகாவிட்டாலும் உனக்கு தவிட்டிலும்...” ■




## தமிழ்ச் சிறுகதைகள் ஆங்கிலத்தில்

ஈழத்து எழுத்தாளர்கள் 12 பேரின் தமிழில் எழுதப்பட்ட 11 சிறுகதைகள், கவிஞர் சோ.பத்மநாதனின் முயற்சியில் ஆங்கிலத்திற்கு மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு ‘Tamil Short Stories from Sri Lanka’ என்னும் பெயரில் நூலாக வெளிவந்துள்ளது. ஓட்டமாவடி அறபாத், உமா வரதராஜன், செழியன், எஸ்.சிறிதரன், அல் அஸ்மத், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், ரஞ்சகுமார், திருக்கோவில் கவியன்பன், செங்கை ஆழியான், நந்தி, கோகிலா மகேந்திரன் ஆகியோரால் எழுதப்பட்ட சிறுகதைகள் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இதனை எஸ்.கொடகே சகோதரர்கள் பிரைவேட் லிமிட்டெட் வெளியிட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சி.விமலன்**

# பா.அகிலன், மனோகரி கவிதைகளில் கிறிஸ்தவக் குறியீடுகள், கதைகளின் தாக்கம்

*நீ ஒரு நகரத்தை நெடுநாளாய் முற்றுகையிட்டு, அதைப்பிடிக்கும் பொருட்டுச் சுற்றிலும் கொத்தளங்களைக் கட்டியெழுப்ப வேண்டும் போது, நீ கோடரியை ஓங்கிப் பழமரங்களை வெட்டவும் வேண்டாம்; சுற்றுப்புறத்திலுள்ள பலவகை மரங்களை அழிக்கவும் வேண்டாம். அது மரமேயொழிய வேறன்று. அது உன் பகைவரோடு சேர்ந்து கொண்டு உன் மீது போருக்கு வராதன்றோ?*

**- உப ஆகமம் 20:19**


ஈழத்துக் கவிஞர்களில் பா.அகிலன் அவர்களும் மனோகரி அவர்களும் குறிப்பிடத்தக்கவர்களாக விளங்குபவர்கள். இவர்களில் பா.அகிலன் வெளியிட்ட 'பதுங்குகுழி நாட்கள்', 'சரமகவிகள்' கவிதைத் தொகுப்புகள் ஈழத்துக் கவிதைப்பரப்பில் பலரது கவனத்தையும் ஈர்த்திருந்தவை. 2000ஆம் ஆண்டு வெளிவந்த இவரது கன்னிக் கவிதைத் தொகுப்பான 'பதுங்குகுழி நாட்கள்' 1995ஆம் ஆண்டு படையினர் யாழ்ப்பாணத்தை கைப்பற்றியதனால் பொது மக்கள் இடம்பெயர்ந்த அவலம் உட்பட பல்வேறு வாழ்வியல் நெருக்கடிகளையும் சிறப்புறப் பதிவு செய்திருந்தது.

இரண்டாவது கவிதைத் தொகுப்பான 'சரமகவிகளை' முள்ளிவாய்க்காலில் முடிவுற்ற ஈழவிடுதலைப் போராட்டத்தின் அவலங்களை; குறிப்பாக காயம், வலி, இழப்பு, தேகவியோகம் என்பவற்றின் அடிப்படையில் அவர் ஆக்கி இருந்தார். இக் கவிதைகள் வெளிப்படுத்திய உணர்ச்சிப் பிரவாகத்தோடு 'சரமகவிகள்' என்ற பெயரும் தொடர்புபட்டிருந்ததால் நூலின் வடிவமைப்பையும் கல்வெட்டு வடிவிலேயே உருவாக்கி இருந்ததும் குறிப்பிடத்தக்கது. தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் கவிதை உலகிற்கு அறிமுகமான பா.அகிலன், குறைவான கவிதைகளையே எழுதியிருந்தாலும் விமர்சகர்களின் கணிப்பில் தவிர்க்க முடியாத ஈழக்கவிஞராக திகழ்கின்றார்.

அவ்வாறே மனோகரி 'சரிநிகர்' இதழில் குறைவான கவிதைகள் எழுதிக் கவனிப்புப் பெற்றி ருந்தாலும் ஒரு பெண்ணின் அகவுணர்வுகளை அதிகம் பிரதிபலித்த கவிதை எழுதியவராக தன்னை இனங் காட்டியுள்ளார். குறிப்பாக அத்தகைய கவிதைகளில் 'நதி' என்ற படிமத்தினை பல்பரிமாணத்தில் கையாண்டுள்ளமை அவரின் சிறப்பு எனலாம். 2013 டிசெம்பர் மாதம் இவரது 'மழுங்கடிக்கப்பட்ட அடையாளங்களும்' கவிதைத் தொகுப்பு வெளிவந்துள்ளது.

எழுத்தாளர்கள், கவிஞர்கள் தமது கருத்துக்களை எளிதாகப் புரியவைப்பதற்கும் கால மாற்றத்திற்கு ஏற்ற சிந்தனைகளைப் பரப்புவதற்கும் யாவரும் அறிந்த புராண, இதிகாச, விவிலியக் கதைகளின் ஊடாக அவற்றை வெளிப்படுத்தும் பொழுது அது சமூகத்தில் உள்ள பல்வேறு தரப்பினரையும் இலகுவில் சென்றடைகின்றது. இதற்கு அவர்கள் கையாளும் உத்தியே தொன்மம், குறியீடு என்பனவாகும்.






இக்கட்டுரையானது பா.அகிலன் எழுதிய 'பதுங்குகுழி நாட்கள்' மற்றும் 'சரமகவிகள்' ஆகிய இரண்டு கவிதைத் தொகுப்புக் களிலும் மனோகரி எழுதிய 'மழுங் கடிக்கப்பட்ட அடையாளங்களும்' கவிதைத் தொகுப்பிலும் கிறிஸ்தவ மதக் குறியீடுகள், கதைகள் எவ்வாறு கையாளப்பட்டுள்ளன என்பது குறித்து ஆராய்கிறது.



தனது கவிதைகளில் கிறிஸ்தவ மதக் குறியீடுகள், கதைகள் கையாளப்பட்டது குறித்து 'பதுங்குகுழி நாட்கள்' கவிதைத் தொகுப்பில் பா.அகிலன் எழுதி உள்ள 'பின்னுரைக்குப் பதிலாக சொற்களின் யாத்திரை' என்ற குறிப்பில்;

"இந்து, கிறிஸ்தவ மதங்கள் சார்ந்த ஐதீகங்கள் எனது கவிதைகளில் ஊடாடுகின்றன. பல கவிதைகளில் கிறிஸ்தவக் குறியீடுகளும், கதைகளும் உள்வாங்கப்பட்டுள்ளன. மனித அவலத்தைப் பேசுமிடங்களில் அது எனக்கு மிகவும் நெருக்கமானதாக இருப்பதாக நானுணர்கிறேன். சனம் பெருத்த நகரில் தனித்திருக்கிறாளே... எரோமியா (பைபிளில்) புலம்புகையில் எனது குலைத்தெறியப்பட்ட கிராமங்களும், நகரங்களும் வெறிச்சோடிப் போன அவற்றின் தெருக்களும்தான் சமாந்தரமாக நினைவுகொள்ளப்படுவதாகத் தோன்றும்."

என்று குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பதாண்டு கால யுத்தம் ஏற்படுத்திய வடுக்களில் சொந்த ஊர்களைவிட்டு ஏதிலிகளாக இடம் பெயர்ந்து இன்று யுத்தம் முடிந்து ஐந்து ஆண்டுகள் கழிந்தும் கூட அவர்களது சொந்த ஊரைக் காண முடியாத துயரம் ஈழத்தமிழர் பலருக்கும் நிகழ்ந்திருப்பது நாம் அறிந்தது தான். இவ்வாறு சொந்த ஊரை விட்டு பிரிந்து சென்ற துயரத்தை 'பதுங்குகுழி நாட்கள் - III' எனத் தலைப்பிட்ட கவிதையில் கவிஞர்;

"பெரிய வெள்ளி
உன்னைச் சிலுவையில் அறைந்த நாள்.
அனற்காற்று
கடலுக்கும், தரைக்குமாய் வீசிக்கொண்டிருந்தது,
ஒன்றோ இரண்டோ கடற்காக்கைகள்
நிர்மல வானிற் பறந்தன.
காற்று பனைமரங்களை உரசியவொலி
விவரிக்க முடியாத பீதியைக் கிளப்பிற்று
அன்றைக்குத்தான் ஊரிற் கடைசி நாள்

கரைக்கு வந்தோம்,
அலை மட்டும் திரும்பிப் போயிற்று.
சூரியன் கடலுள் வீழ்ந்த போது
மண்டியிட்டழுதோம்.

ஒரு கரிய ஊளை எழுந்து
இரவென ஆயிற்று.

தொலைவில்
மயான வெளியில் ஒற்றைப் பிணமென
எரிந்து கொண்டிருந்தது எங்களூர்,

பெரிய வெள்ளி
உன்னைச் சிலுவையில் அறைந்த நாள்."

என்று உணர்வு பூர்வமாக தான் அடைந்த துயரத்தை குறியீடாக இயேசுபிரான் சிலுவையில் அறையப் பட்ட பொழுது அவர் பட்டபாடுகளுக்கு இணையாக இக் கவிதையில் பதிவு செய்கின்றார்.

அவ்வாறே யாழ்ப்பாணத்தை 1995ஆம் ஆண்டு படையினர் கைப்பற்றிய பொழுது அன்றைய காலகட்டத்தில் நிலவிய நெருக்கடியான சூழ்நிலையை நத்தார் தினத்தோடு ஒப்பிட்டு அவர் எழுதிய 'யாழ்ப்பாணம் 1996 - நத்தார்' கவிதையில் மிகக் கூர்மையாக அவதானிக்கலாம்.

"......
இவ்வருடம் நீர் பிறந்தபோது
அடைக்கப்பட்டிருந்தன தேவாலயங்கள்
கைது செய்யப்பட்டிருந்தது
நள்ளிரவு மணியோசை

மறுதலிக்கப்பட்ட புனித இரவில்
மத்தலோனா
அழுதாள், புலம்பினாள், மன்றாடினாள்
தன் தலைமுறைகளுக்காக,
தீனமான தாயின் குரலின் கீழ் குருதி
விளக்கற்ற கரிய தெருக்களில்
பவித்திரமான அவளது கண்ணீர்.

ஊரடங்கிய இரவில்
பிதாவே, நீர் பிறந்த போது
அன்னியராய் இருந்தோம்
எங்கள் நகரில்,
மந்தைகளாக நடத்தப்பட்டோம்
எங்கள் முற்றங்களில்.
......"

எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்விடப் பெயர்வு குறித்து மனோகரி 'ஏதிலிகள்' என்ற தலைப்பில் கவிதை புனைந்திருந்தாலும் அதில் இக் கட் டுரை எடுத்துக் கொண்ட கருப்பொருளை விளக்கும்படியான எடுத்துரைப்பு முறை இல்லாததால் அதை இவ்விடத்தில் தவிர்த்துக் கொள்கிறேன்.

கிறிஸ்தவ மதத்தில் சுவிசேஷங்கள் முக்கிய இடம் வகிப்பவை. இயேசுநாதரை விசுவாசிப்பதற்காக மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய மார்க்கங்கள் குறித்து அவரின் சீடர்களான யோவான், மாற்கு, மத்தேயு போன்றவர்களாலும் சீடர்களின் சீடரான லூக்காவினாலும் எழுதப் பட்டவை இந்த சுவிசேஷங்கள். (க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியில் சுவிசேஷம் என்பதற்கு நற்செய்தி என்று பொருள் இடப்பட்டுள்ளது.)

ஆனால் பா.அகிலனால் 'சுவிசேஷங்கள்' என்ற தலைப்பில் எழுதப்பட்ட கவிதைகளில் கற்பனையிலும் நினைக்க முடியாத கொடூர அனுபவங்கள் புதிய சொல்லாட்சிகளின் ஊடாக புதுமையாக வெளிப் படுத்தப் பட்டிருந்தன. 'சரமகவிகள்' நூலில் இடம்பெற் றுள்ள சுவிசேஷம் 01, சுவிசேஷம் 02, சுவிசேஷம் 03 என்ற தலைப்பிட்ட கவிதைகள் இதற்குச் சிறந்த எட்டுக்காட்டுக் களாகின்றன.

***சுவிசேஷம் 02***

"தீரா மது மாந்தியும்
மாமிச வாடையால் உசுப்பப் பெறுபவனும்
தேகம் முழுவதும் குறி திறந்தவனும்
பச்சோந்தியும்
அன்பு காய்ந்தவனுமாகிய
அவன் எனப்படும் இவனுக்கும்
இவன் எனப்படும் அவனுக்கும்
இவனவனெனப்படும் அவனிவனுக்கு
வெளிப்படுத்தப்பட்ட சுவிசேஷம்

அழுக்கே
மலவாயே
தேகமொரு படகு
படகோட்டி பாக்கியவான்
நீர் கடந்து நீர் கடந்து
நீர் திறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரை திறந்து
அவனே வெளியேறிச் செல்கிறான்"

என்ற கவிதையை ஆதாரமாகக் காட்டலாம்.

அதே சமயம் மனோகரியின் கவிதைகளில் பெரும் பாலானவை பரிசுத்த ஆகமத்தில் கூறப்பட்ட கதைகளை, சம்பவங்களை மறுவாசிப்புச் செய்வதாக உள்ளது என்பதற்கு நல்ல சமாரியனின் கதையை 'எதார்த்தம்' என்ற கவிதையில்

"கெட்ட குமாரன்
வீடு திரும்பினான்

கறைபடிந்த கால்களின்
அரங்கேற்றம்!

தந்தையுடன்
மாடமாளிகையின்
ஆடம்பரங்கள் அனைத்தும்
அவனை வரவேற்றன

நேர்மையும் உண்மையுமியல்பேயான
நல்ல குமாரன்
காணாமற் போனான்!"

என்று இன்றைய காலகட்டத்தில் அத்தகைய சம்பவம் எவ்வாறான கண்ணோட்டத்தில் நோக்கப்படும் என்பதையும் சரிவரப் புரிந்துகொண்டு கவிதை புனைந் துள்ளார். இதே நல்ல சமாரியனின் கதையை 'சந்தோஷ வேதனை' என்ற கவிதையில்

"இயேசுவே!
உன் அன்னையின்
வேதனையும் நீ அறிந்ததுதான்
உன்னைச் சுமந்தவள்
சுமந்தவை ஏராளம்
உன்னை உலகிற்குதிர்த்த
உவகையதிலுமதிகம்
இது 'ஒரு சந்தோஷ வேதனை'

இந்த கிறிஸ்துமஸ் மரமும் அப்படியே
தானே சிவந்து
தன்னை உதிர்த்து
உலகை மகிழ்வித்த
மடிதல் தான்

ஒரு நல்ல சமாரியன்
காலத்தே கடமை செய்தது போல்....

உங்கள் பழிகளும் பாராட்டுக்களும்
என்ன செய்து விடும்?

என்று இன்னொரு பரிமாணத்தில் அதனைப் பதிவு செய்திருக்கிறார் மனோகரி.

'பாடுகள்' என்ற கவிதையில்

"......
பாவப்பட்டோருக்காய்
சிலுவை சுமந்தவனே!
அவதாரங்களின் மீதான ஆணியடிப்புக்கள்
ஒருபோதும் வலித்ததில்லை
நீ....
மனிதன் என்பதால்
உனக்குள் மனிதம் இருந்ததால்
வலித்தது!

அழுத காற்றுக்களை சுவாசித்தபடி
தொடர்ந்த உனது பயணம்....

இயேசு பிதாவே!
மரியா மேல் கல்வீச
ஒரு யோக்கியனும்
இங்கே -
இன்னமும் அகப்படவில்லை"

என்பதன் ஊடாக தேவகுமாரனான இயேசுவை புனிதராக்கிப் பார்க்கும் நிலையில் இருந்து விலகி பாவப்பட்ட மக்களின் பாடுகளைச் சுமந்த, மனித நேயம் மிக்க ஒரு மனிதராகச் சித்திரித்ததோடு இந்தச் சமுதாயம் இன்னமும் பாவ காரியங்களைச் செய்து கொண்டு தான் இருக்கின்றது என்ற தனது ஆதங்கத்தையும் மனோகரி பதிவு செய்கின்றார்.

போர் ஏற்படுத்திய கொடூரங்கள் தமிழ் மக்களை எப்படி எல்லாம் சின்னாபின்னப்படுத்தி மரணம் ஒரு நிழல் போல அவர்களுக்கு வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து வந்த அவலத்தினை கன்னி மரியாளின் கண்ணீரினூடே தமிழ்த்தாய் ஒருத்தியன் வாழ்வோடு தொடர்புபடுத்தி 'ஒரு மரணத்தை எதிர்பார்த்து' என்ற கவிதையில்

"பரலோகத்திலிருக்கும்
கன்னி மரியாயே!
ஜனித்த நாளில் மட்டுமல்லாமல்
வாழும் வாழ்க்கையிலும்
ஒன்றாயினோம்
ஒரு மரணத்தை எதிர்பார்த்து

எப்போது
ஒரு தேவகுமாரனை
உன் கருப்பை உணரத் தொடங்கிற்றோ
அப்போதிருந்தே
ஒரு மரணத்தில் எதிர்பார்ப்பும்
உன்னிடம் இருந்திருக்கும்

எப்படி
அம் மாபெரும் மனிதனின்
ஜனனத்தில்
உனக்குப் பெருமை இருந்ததோ
அப்படியே
முட்கிரீடம் சுமந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலுவையிலறையப்பட்ட
அவரது
ஒவ்வொரு சிறு தசைநாரினதும்
வேதனையையும் நீ உணர்ந்தாய்

அந்தச் சிலுவையைத் தானும்
சுமக்கப் பிரியப்படும்
கன்னி மரியாயிவள்

தன் ஜனன நாளிலும்
இவளதிர்வு
ஒரு
மரணம் பற்றியதாகவே இருக்கிறது"

என்று அற்புதமாகப் பதிவு செய்கின்றார் மனோகரி.

அவ்வாறே சொல்லில் அடங்காத துன்பத்தை அடைந்த மனிதர்கள் திக்கற்றுத் திணறும் வேளையில் இறுதியாக சரணடைவது தெய்வத்திடம் தானே. அத்தகைய கையறு நிலையில் இவ்விரு கவிஞர்களிடமும் ஏற்பட்டுள்ள ஒற்றுமையினை

'நிகும்பலை யாகம்' கவிதையில்

"என் தேவனே! என் தேவனே!
என்னை ஏன் கைவிட்டீர்?
இயேசு பிரானின் புலம்பல்
தலைவிதியானது"

என்று மனோகரியும்

'பதுங்குகுழி நாட்கள் - IV' கவிதையில்

"ஆண்டவனே
ஆண்டவனே
எங்களை ஏன் கைவிட்டீர்?"

என்று அகிலனும் பதிவு செய்ததில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

ஈழத்தில் போர் ஏற்படுத்திய அனர்த்தம் பெரும் பாலான படைப்பாளிகளின் நம்பிக்கையை சீர்குலையச் செய்திருக்கிறது. மனோகரியின் ஒட்டு மொத்த மனப் பதிவை பற்றி குறிப்பிடும் கவிஞர் சோ.பத்மநாதன் 'வியர்த்தம்' கவிதையில்

"பிதாவே!
எந்த வசனம் எனக்குள்
கிரியை செய்யும்?
எது என்னைக் காக்கும்?"

என்ற வரிகளையும்
'இறுதிப்பரிசு' கவிதையில்

"போகிறேன்
இனி எந்த யுகத்திலும்
உங்களில் எவரையும்
சந்திக்க நான் விரும்பவில்லை"

என்ற வரிகளையும்

உதாரணமாய் சுட்டிக்காட்டி மனோகரி காணும், காட்டும் உலகம் ஏன் நமக்கு எந்த நம்பிக்கையையும் தருவதாய் இல்லை எனக் கேள்வி எழுப்புகின்றார். ஆனால் இவ்விடத்தில்

"......
குருதி படர்ந்து மூடிய
கடலின் ஆழத்துள்
இன்னும்
எங்களின் தொன்மைச் சுடர்கள் மோனத்திருப்பதை
நீயும் அறியாது விடின்
இன்றறிக,
'ஓராயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்த பின்'
ஓர் நாள் சூரியன் எழுந்து
புலர்ந்ததாம்"


என்ற அகிலனின் 'பதுங்குகுழி நாட்கள்' தொகுப்பில் உள்ள நம்பிக்கையினை மனதில் ஊட்டும் 'உன்னுடைய மற்றும் என்னுடைய கிராமங்களின் மீதொரு பாடல்' கவிதை எனக்கு நினைவுக்கு வருவதையும் தவிர்க்க முடியவில்லை.

எனவே மேற்கூறிய கவிதைகளை வகைமாதிரியாக வைத்துப் பார்க்கும் பொழுது மூன்று தசாப்த காலங்கள் ஈழத்தமிழர்கள் மீது திணிக்கப்பட்ட போராலும் அது ஏற்படுத்திய இடப்பெயர்வுகளாலும் போராட்டத்துடன் சம்பந்தப்படாத அப்பாவிக் குழந்தைகள், பெண்கள், ஆண்கள், முதியவர்கள் என்று ஒருவரையும் பேதம் பாராது சகல தரப்பிலும் சொல்லொணாத் துயரத்தை ஏற்படுத்தியிருந்தது. இப்போர் குறித்து தமது மன அவசங்களை பா.அகிலன் அவர்களும் மனோகரி அவர்களும் தமக்கே உரித்தான மொழிச் செதுக்கலின் ஊடாக வெளிப்படுத்தி இருந்தாலும் ஏற்கெனவே, கிறிஸ்தவக் குறியீடுகளையும் கதைகளையும் பொருத்தமுறத் தமது கவிதைகளில் கையாண்ட சில ஈழத்துக் கவிஞர்கள் வரிசையில் இவ்விரு கவிஞர்களையும் இணைத்து நோக்கவேண்டிய அவசியத்தை ஏற்படுத்தி உள்ளது. ■

**சு.குணேஸ்வரனின்**

## உள்ளும் வெளியும்

**(ஆய்வுக் கட்டுரைகள்)**




கவிதை நூலான 'மூச்சுக் காற்றால் நிறையும் வெளிகள்', கட்டுரை நூல்களான 'அலையும் உலைவும்', 'புனைவும் புதிதும்' மற்றும் மின்நூலான 'சொற்கள் தவிர்க்கப்பட்ட காலம்' ஆகியவற்றின் ஆசிரியரான சு.குணேஸ்வரனின் புதிய நூலாக 'உள்ளும் வெளியும்' வெளிவந்துள்ளது. ஈழம் மற்றும் புகலிடப் படைப்பிலக்கியங்கள் தொடர்பான ஒன்பது ஆய்வுக் கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. யாழ்ப்பாணம், திருநெல்வேலியிலுள்ள புத்தகக்கூடத்தின் (Book Lab) வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா என்னும் ஆசியாவின் அதிசயம்



காரைக்கவி

கருவறையில் நான் சிறையிருந்த வேளை
தரும் உதையெல்லாம் தாங்கினாய் வெளி
வரும்வேளை எதுவென்று தவித்து உயிர்
உருகினாய் உடல்வலி பொறுத்தாய்.

வேகமாய் நடந்தால் உள்ளிருக்குமெனக்கு
வியர்க்குமென்று பயந்து வீதியோரம்
தயக்கமாய் நடப்பாய் நின்று கையால்
தாங்கி வயிற்றைத் தயவாய் தடவுவாய்.

நீர்க்குடம் நடுவே நீந்துமெனக்கு குளிர்ச்
சுரம் வருமோவென சுடுநீரில் குளிப்பாய்
காரம் தின்றாலெனக்கு காந்துமோவென
வாரவிடுமுறை வாய்க்கு விடுவாய்.

வாந்தி வந்தால் வயிற்றைக் குமட்டி
வலிக்குமோ எனக்கென மாம்பிஞ்சு
வாங்கியுண்டாய் வாய் வயிற்றைக்கட்டி
வரும் கிரந்தி நோய் தவிர்த்தாய்.

பிரசவ விடுதியில் மறு பிறப்பெடுத்து உலக
பிரவேசம் தந்தாய் எனக்கு அம்மா
பிரவசவேளை உன்வலி என் மூச்சிறுக்க
பெரிதாக அழுதேன் வார்த்தை தடுக்க.

போவதறியாது போகும் மலம் துடைத்து
புகட்டிப்பாலுடன் அன்பூட்டி வளர்த்தாய்
என் அழுகை கேட்டு உன் முலை அழும்
உன் குரல் கேட்டு என் தலை எழும்.

கைகால் பிடித்து எண்ணெயில் கழுவி
கைவிரல் நகச்சூட்டுத்தண்ணியில் நீராட்டி
மையிருட்டுப் பொட்டுவைத்து கன்னத்தில்
மறுபொட்டு ஒன்றும் மறக்காமல் வைப்பாய்.

தடுக்குப்பாயில் கிடக்கும் ஓலை நெட்டி
தடுக்கி மேனி நொந்து தவிப்பேனென்று
பழஞ்சீலைப் பஞ்சணை பக்குவமாய் விரித்துப்
படுக்க வைத்துப் பக்கத்தில் பார்த்திருப்பாய்.

காற்றுப்பட்டு மேனி களைத்துப் போகுமென்று
இறப்பில் ஏணை கட்டி எடுத்து வளர்த்துவாய்
ஏணைக்குள் இருந்து எட்டிப் பார்க்கையில்
எடுத்தணைத்து இனிப்பாய்ச் சிரிப்பாய்.

நித்திரையில் நான்அழ நீயெழும்பித் தாலாட்ட
சித்திரை வெக்கையிலும் நித்திரை சுகமாய்வரும்
தத்தி நடை பழகி தவறி நான் விழ மனம்
தடுக்கி விழுந்து தாவி நீ எடுத்தணைப்பாய்.

சோற்றைப் பிசைந்து சிறுவுருண்டையாக்கி
சுற்றி ஓடும் என்னைத் துரத்தித் தீத்தி அன்புச்
சாற்றைப் பருக்கி சிந்தும் எச்சில் துடைத்து
காற்றில் தூக்கி காக்கா காட்டுவாய்.

அரிச்சுவடி எழுத அடம்பிடிக்க முற்றத்து மண்
விரித்துப் பலகையாக்கி முத்தத்தால் என் விரல்
நனைந்து சித்தமெல்லாம் என் சிறப்பை ஏங்கி
நினைத்து மனம் இனித்து எழுதப் பழக்கினாய்.

பள்ளிக்கு நடந்தால் என் பாதம் நோகுமென்று
அள்ளி இடுப்பில் வைத்து அசராமல் நடப்பாய்
உன்பாத வலி அளவு விளங்கவில்லை அன்று
என்பாதம் உடைந்த பின் விளங்குகிறது இன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு வயதில் அப்பா தவறிய போதிலும்
மறு வாழ்வை மறந்து மாடாய் உழைத்தாய்
சிறு குஞ்சைக்காக்கும் கோழி போல் அன்புச்
சிறகுக்குள் அணைத்துக் காத்து வளர்த்தாய்.

தந்தையுடன் கல்வி போகும் என்ற தத்துவம்
முந்தையருடன் முடிந்த முடிவாக்கி என்
தந்தையாய் தாதனாய் நல்ல தோழனாய்
எந்தாய் நீ எனக்கு வழி காட்டினாய்.

அம்மை வந்து வேதனையில் அவதிப்பட நான்
அம்மா நீ விரதம் காத்து உயிர் இளைத்தாய்
சும்மாவேனும் நீ மனம் சோர்ந்ததில்லை என்
அம்மா நீ தான் ஆசியாவின் ஆச்சரியம்.

முன்னவனாய் மாணவ முதல்வனாய் எனைஅவை
முன்னிருக்கச் செய்தாய் முழு மனிதன் ஆக்கினாய்
என்ன தவம் செய்தேன் கடவுள் உன்னை என்
அன்னை ஆக்கி ஆட் கொண்டதிற்கு.

பனங்காய் பிசைந்து நீ செய்யும் பணியார
மணம் ஊர் முழுக்க ஒருக்கால் சுற்றிவரும்
விடியல் வேளை மீன் போட்டு நீ காய்ச்சும்
ஒடியல் கூழ் குடிக்க உள்ள நோய் ஓடும்.

பழஞ் சோற்றுக்குள் பழைய கறி ஊற்றிக்
குழைத்து பாச ஊறுகாய் சொட்டுச் சேர்த்து
பூவரசம் இலையில் நீ போடும் உருண்டைக்கு
சமரசமாய்ப் போகும் எந்தச் சச்சரவும்.

பனம் பாணியில் ஊறிய பனாட்டுத் துண்டுடன்
பக்குவமாய் உடைத்த தேங்காய்ச்சொட்டுடன் நீ
தினம் தரும் சுவை இன்னும் திகட்டவில்லை
மனம் வரும் எண்ணத்தில் வலி உணர்கிறேன்.

சும்மா கிடந்த காலில் சொறி வந்தது போல்
அம்மா நாங்கள் அகப்பட்டோம் வந்த சண்டையில்
சொறியச் சொறியச் சுகமாய் இருந்தது தினஞ்சனம்
சொரியல் சொரியலாய் சவமாய் விழுந்தது.

செல்வந்த எங்கள் செந்நெல் விளை ஊர்
ஷெல் வந்த ஊராய் சிதறி எரிந்தது உள்ள
ஊர் முழுக்க உலா வந்தோம் ஏதிலியாய்
வேரற்ற மரமாய் மனம் விறகாகிப் போனாய்.

பொருள் தடை வாழ்வின் பொதுத்தடையாகி
பொருளற்ற வாழ்வால் மனம் பொருமியது சனம்
அருள் தரும் ஆண்டவனும் அகப்பட்டான் தடைக்குள்
இருளுக்குள் இருந்தான் விளக்கெரிய நெய்யின்றி.

இருளுக்குள் ஆண்டவன் இருந்து பழகியதால்
அருள் கொடுக்க அவனுக்கு பார்வை பத்தாதென்பாய்
பொருளற்ற போதும் இருக்கும் பொருள் கொண்டு
வருகின்ற பொழுதெல்லாம் வடித்தாய் கஞ்சி.

பதுங்கு குழிக்குள் பயந்து நான் பதுங்கும் வேளை
பதுங்காமல் குழி வாசலில் படுத்திருப்பாய் நீ
பாய்ந்து வரும் எறிகணை உனைத்தாண்டி குழிக்குள்
பாய்ந்து எனை தாக்காதென பாவம் நினைத்தாய்.

காற்றைச் சுவராக்கிச் சித்திரம் வரைந்து இலைச்
சாற்றைப் பிழிந்ததில் இலக்கியம் எழுதினர் பிற
மாற்றுக் கருத்தின்றி மணலைக் கயிறாக்கி சிறுநீர்
ஊற்றில் பயிர் செய்யும் உத்தியை நீ நம்பவில்லை.

நடை தளர்ந்து உடல் இளைத்து திரை ஓடி
நரை வேய்ந்து நாடி நரம்பு விடை கொடுத்து
விலக நாள் பார்க்கும் வேளையிலும் என்
உலக வாழ்வு உயர்வே உன் நினைவில் உள்ளது.

உண்ணும் பருக்கை ஒவ்வொன்றிலும் உன்முகம்
உறக்க வினாடி ஒவ்வொன்றிலும் உன் நினைவு
மறக்க முடியவில்லை உன் மடி சுகம் நான்
இறக்கும் வரையிலும் என் ஏக்கம் தீராது.

நான் சிரிக்க நீ சிரித்தாய் நான் அழ நீ அழுதாய்
நான் புசிக்க நீ பசித்தாய் உன் மூச்சாய் நான் இருந்தேன்
உனக்காக நானென்று உள்ளளவும் நினைத்திருந்தாய்
என் வலி உணர்ந்த உன்வலி நான் உணரவில்லை


**கலைக்கான பணியில்**

**திருமறைக் கலாமன்றம்**

**50 ஆண்டுகளை நோக்கி...**

**1965 - 2015**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்கம் நிறைந்த பார்வையாளர்களுடன் நடந்தேறிய நாடக விழா

செந்தூரன்



மண விலங்குகள்

மார்ச் மாதம் முதலாம், இரண்டாம் திகதிகளில் திருமறைக் கலாமன்றம் இல 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள தனது கலைத்தூது கலையகத்தில் 'நாடக விழா' ஒன்றினை நடத்தியது. முதல் நாளில் மூன்று நாடகங்களும், இரண்டாம் நாளில் நான்கு நாடகங்களுமாக மொத்தம் ஏழு நாடகங்கள் விழாவில் அரங்கேறின. நலிந்து செல்லும் அரங்கப் பண்பாட்டிற்கு உயிர்ப்பளிப்பதனை நோக்கமாகக் கொண்டு நடத்தப்பட்ட இந்த நாடக விழாவானது அரங்கம் நிறைந்த பார்வையாளர்களின் வரவேற்போடு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நாடக விழா பின்வரும் மூன்று வகைகளில் முக்கியத்துவம் மிக்கதாக விளங்கியது.

❖ எம்மிடையே நடைமுறையிலிருந்த பல்வகை நாடகங்களையும் ஒரே அரங்கில் அரங்கேற்றியமை.

❖ சம காலத்தில் பேசப்பட வேண்டிய பல்வேறு சமூகப் பிரச்சினைகளையும் பேசியமை.


❖ நலிந்து செல்லும் அரங்கப் பண்பாட்டிற்கு புத்தெளிச்சி ஏற்படுத்தியமை என்பதாகும்.

எம் மத்தியில் பல்வகை நாடகப் போக்குகள் காணப்படுகின்றன. சிலர் ஒரு சில நாடக முறைமைகளுடனேயே தம்மை தேர்ச்சிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். ஆனால் திருமறைக் கலாமன்றம் எல்லா வகை நாடகங்களையும் பயில்வுக்குட்படுத்தி வந்துள்ளமையின் விளைவாக பாடசாலை நாடகம் (நிற்க கற்க), நவீன பெண்ணியல் அரங்கு (மண விலங்குகள்), நவீன குறியீட்டரங்கு (எட்டு முள வேட்டி), சிறுவர் நாடகம்

நாடகப் பேராசன் குழந்தை ம.சண்முகலிங்கம் மங்கல விளக்கேற்றுகையில்...



நிற்க கற்க





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கடமை வீரன்), யதார்த்த நாடகம் (எதற்கும் ஒரு காலமுண்டு), நாட்டுக்கூத்து (குவேனி), இசை நாடகம் (சத்திய வேள்வி) என பல்வகை நாடகங்களையும் ஒரே அரங்கில் கொண்டுவந்து குவித்தது பலருக்கும் பயன் தரத்தக்க ஒன்றாக அமைந்தது.

இன்று எம்மவர்கள் சினிமாவுக்குள்ளும், மெகாத் தொடர்களுக்குள்ளும் தம்மை அமிழ்த்தி கற்பனாவாத உலகுடன் வாழும் சூழலில், சமூகத்தில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகளும் பேசப்படாமலே சமூகத்திற்கு நஞ்சாக மாறிக் கொண்டிருக்கும் சூழலில் நாடக விழா வில் அவை பேசப்பட்டமை குறிப்பிடத்தக்கது. போட்டி மிகுந்த இலக்கற்ற கல்வி, வேலையில்லாப் பிரச்சினை, கலாசாரப்பிறழ்வுகள், நவீன தொழில்நுட்பங்களுக்கு அடிமையாகுதல், சீதனப் பிரச்சினை, குடும்ப வன்முறை, பால் வயதுத் திருமணம், எமது சமூகத்தின் ஒடுக்கு முறை கலாசாரம், எமது இனம் ஒடுக்கப்பட்ட தொன்மை வரலாறு என பல்வேறு விடயங்களையும் நாடகங்கள் பேசியமை பாராட்டத்தக்க விடயமாகும்.

அத்துடன் நாடக நிகழ்ச்சிகளுக்கு பார்வையாளர் வருவது குறைவு என்ற விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும் நாடக விழா அரங்கில் நிறைந்த பார்வையாளர்கள் பிரசன்னமாகி இருந்தமை ஆச்சரியப்படத்தக்கதொன்றாகக் காணப்பட்டது. நாடகங்கள் இவ்வாறு தொடர்ச்சியாகப் போடப்பட்டால் நிச்சயமாக பார்ப்போர் சமூகம் கட்டி எழுப்பப்படும் என்ற யதார்த்தத்தினை நாடக விழா சுட்டி நின்றது.

இவற்றுக்கு அப்பால் நாடகங்களில் நடிப்பு, வேட உடை, ஒப்பனை, ஒளிவிதானிப்பு, காட்சி விதானிப்பு என ஒவ்வொரு அம்சங்களும் பாராட்டும்படியாக அமைந்தன. உயர் கலைத்துவம் சார்ந்த வகையில் நாடகங்கள் மேலும் செம்மையுறவேண்டிய தேவையைக் கொண்டிருந்தாலும், விழாவாக நடத்தப்படும் பொது நிகழ்வில் அத்தகைய செம்மையை கொண்டு வருவது கடினம். எனினும் ஒப்பீட்டு ரீதியாக எல்லா அரங்க வளங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள திருமறைக் கலாமன்றத்திடமிருந்து அதிகம் எதிர்பார்க்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

விழாவில் யாழ்.பல்கலைக்கழக நாடகமும் அரங்கக் கலைகளும் துறை விரிவுரையாளர் க.ரதீதரன், உளவளத் துணையாளரும் கலை இலக்கியப் படைப்பாளியுமான திருமதி கோகிலா மகேந்திரன், வழக்கறிஞரும், தேசிய கலை இலக்கியப் பேரவையை சேர்ந்தவருமாகிய சோ.தேவராஜா ஆகியோர் உரை நிகழ்த்தினார். மூன்று வெவ்வேறு தலைமுறை நாடகவியலாளர்களான இவர்கள் மூவரின் கருத்துக்களும் எமது சமூகத்தில் ஆரோக்கியமான அரங்க வளர்ச்சி ஏற்பட வேண்டும் என்ற கருத்தின் பாற்பட்டவையாக இருந்தன.

மொத்தத்தில் நாடக நிகழ்வுகள் பலவற்றை ஒன்றிணைத்தும், ஆரோக்கியமான பல விடயங்களை பேசியும், இன்றைய காலத்துக்கு தேவையான செயற்பாடாக திருமறைக் கலாமன்றத்தின் நாடக விழா அமைந்தது என்பதில் இரண்டாம் கருத்து இருக்க முடியாது. திருமறைக் கலாமன்றம் இதுபோன்ற நாடக விழாக்களை தொடர்ச்சியாக நடத்த வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும். ■


எட்டுமுள வேட்டி


எதற்கும் ஒரு காலமுண்டு


கடமை வீரன்


குவேனி


சத்திய வேள்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதங்கள்

'கலைமுகம்' இதழ் 56 கிடைத்தது. எனது 'காலப்பதிவாகும் புனைகதையுலகம்' கட்டுரையைப் பிரசுரித்தமைக்கு மனமார்ந்த நன்றி - எனினும் அக் கட்டுரையில் ஓர் அச்சுப்பிழை நேர்ந்துவிட்டது. 'வெள்ளிப் பாதசரம்' என்பது 'வெள்ளிப் பாதரசம்' என அச்சாகி விட்டது. எப்படி இத் தவறு நேர்ந்ததெனத் தெரியவில்லை.

கலைமுகத்தில் அருள்பணி வி.பி.தனேந்திராவிற்கு இவ்வளவு விரைவில் அஞ்சலிக் குறிப்பு வெளியாகுமென நான் எதிர்பார்க்கவில்லை. அவரது திடீர் மரணம் என்னையும் வெகுவாகப் பாதித்தது. உங்கள் மூலமாகவே அவர் எனக்கும் நண்பரானார். வயதிற்குப் பொருந்தாத மென்போக்காளராக ஒவ்வொரு அசைவிலும் தன்னை வெளிப்படுத்திக் கொண்டார். குறுகிய வாழ் நாள்களில் அவரது படைப்பாக்க முயற்சியும் பதிப்புத்துறை சார்ந்த ஈடுபாடும் விதந்து போற்றத்தக்கவை. திருமறைக் கலா மன்றத்தில் அவரைச் சந்தித்து அளவளாவிய நெருக்கடியான காலம் என் கண்முன்னே விரிந்து செல்கிறது. உங்களது அஞ்சலிக் குறிப்பு மனம் நெகிழ வைத்தது.

கேதீஸ்வரனின் 'சிறிய நல்ல விடயம்' சரளமான மொழி நடையில் புனையப்பட்ட ஒரு சிறப்பான காலப்பதிவு. முக்கியமான கட்டங்களையெல்லாம் பூடகமாகக் கடந்து செல்லும் அவருக்கு எனது பாராட்டு உரித்தாகுக. தவத்திரு. தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா நினைவாகத் செ.திருநாவுக்கரசு எழுதிய 'தமிழ், தமிழர், தமிழ்த்தேசியம், தனிநாயகம் அடிகளார்; ஒரு பார்வை' முக்கியமானது. அறியப்படாத பல விடயங்களைப் பொருத்தமாக எடுத்துக் காட்டியுள்ளார். அவருக்கும் எனது பாராட்டு. கதிர்காமநாதனின் 'புதுச்சட்டை' புதியகளம் தானென்றாலும் அவரது எள்ளல் முத்திரை விழவில்லை. கிருமிநாசினி கவிதைக்குக் கோ.கைலாசநாதன் வரைந்துள்ள ஓவியம் கலைநுட்பம் வாய்ந்தது. சம காலத்தில் வெளிவரும் இதழ்களுள் கலைமுகத்தின் வடிவமைப்பு தனித்துவமானது. பலத்த சிரமங்கள், நெருக்கடிகளுக்கு மத்தியிலும் காலந்தாழ்த்தியேனும் தொடர்ந்து 'கலைமுகம்' வெளிவந்து கொண்டிருப்பது அளப்பெருஞ்சாதனை தான். புத்தக விமர்சனக் குறிப்புகள் கட்டிறுக்கமாக அமைந்துள்ளதையும் குறிப்பிட விரும்புகிறேன். உங்களது பெருமுயற்சி தொடர வாழ்த்துகிறேன்.

**இராகவன்**

கரவெட்டி

---

'கலைமுகம்' 56ஆவது இதழை முழுவதுமாக கருத்தூன்றி வாசித்தேன்.

இதழின் வடிவமைப்பு மிகவும் நேர்த்தியாக உள்ளது.

தென்னிந்திய இதழ்களைப் பார்த்து அதிசயப்பட்ட எமக்கு எம்மாலும் இது போன்ற இதழ்களை வெளியிட முடிவது சந்தோஷத்தைத் தருகின்றது.

அருள்பணி வி.பி.தனேந்திரா குறித்து செல்மர் எமில் எழுதிய நினைவுகள் கண்ணீரை வரவழைத்தது. ஈழத்து எழுத்துலகின் புதிய விடிவெள்ளிகளில் ஒருவரின் மறைவு பேரிழப்பேயாகும்.

சு.குணேஸ்வரனின் நாவல் திறனாய்வு மிகவும் தரமானது, காத்திரமானது.

கவிதைகளும் சமகாலத்தைக் காட்டும் காலக் கண்ணாடிகளாகவே வந்துள்ளன.

வாசிப்பைத் தூண்ட வேண்டிய இலத்திரனியல் யுக ஆட்சியில் இது போன்ற பருவ இதழ்களின் வரவும், விற்பனை வாய்ப்பும் அவசியமானதாகும்.

வாசிப்பில் நேசம்மிக்க யாவரும் இதுபோன்ற இதழ்களை வாங்கியும், சந்தைப்படுத்தியும் உதவ வேண்டும் என்பது எனது வேண்டுகோள்.

**வே.தபேந்திரன்**

'தேன்தமிழ்'
கைதடி வடக்கு, கைதடி.

---

'கலைமுகம்' 56ஆவது காலாண்டு வெளியீட்டை வாசித்ததில் மிகுந்த மகிழ்ச்சி.

தரமான, காத்திரமான, கலைத்துவமான ஒரு சஞ்சிகையாக வழமை போன்று இம்முறையும் சிறப்பாக வெளிவந்துள்ளது கலைமுகம்.

இதழ் வடிவமைப்பு, அட்டைப்படம், கருத்தோவியங்கள் யாவும் கச்சிதமாக உள்ளன. ஒவ்வொரு படைப்பும் மிகக் கனதியாக அமைந்துள்ளது. சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், நூல் விமர்சனங்கள், அறிமுகங்கள் சிறப்பாக உள்ளன. அதிலும் 'நூல் விமர்சனங்கள்' சிறப்பாக அமைந்துள்ளமை பாராட்டக்கூடியதாக உள்ளது.

கவிதைகளில் வேற்று மொழி - மொழி பெயர்ப்பு கவிதைகள் கிடைப்பது வரவேற்புக்குரியதே. எனினும் இன்னும் காத்திரமான கவிதைகளை மொழி பெயர்ப்பு செய்யலாம் எனத் தோன்றுகிறது. உள்ளூர் கவிஞர்களின் காத்திரமான கவிதைகளுக்கு இன்னும் இடங்கொடுக்கலாம்.

கருத்தோவியம் ஒன்றை வெளியிட்டு அதற்கான கவிதைகளை வாசகர்களிடமிருந்து சேகரித்து பிரசுரித்தல், மற்றும் சிறுகதை, கட்டுரை போட்டிகளை நடத்துதல் சமூகத்துக்கும் சஞ்சிகைக்குமிடையேயான ஈடுபாட்டை அதிகரிக்கும். எனவே இது பற்றி சிந்திப்பது காத்திரமானதாக அமையும்.

மேலும் காலாண்டு இதழ்களை காலந்தாழ்த்தாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட சிரமங்களுக்கு மத்தியிலும் முனைந்து வெல்வது ஆரோக்கியமாக அமையும்.

ஒட்டு மொத்தத்தில் கலை, இலக்கிய, சமூக காலாண்டு இதழான 'கலைமுகம்' காலத்தின் சுவடாக கலைப்பணி ஆற்றிவருவது வரவேற்று பாராட்டத்தக்க தேயாகும். இதன் இடையறாத வெளியீட்டில் நாமும் தோழமையுடன் பயணிப்போம்!

**ஆ.ஜென்சன் றொனால்ட்**

உசன், மிருசுவில்.

---

'கலைமுகம்' இதழ் 55இல் சி.ரமேஷ் எழுதிய 'ஈழத்து நவீன தமிழ்க் கவிதையின் நிகழ்வெளி' கட்டுரையும் அதனூடே வெளியிடப்பட்ட கவிதைத் தொகுதிகள் பற்றிய விபரமும் பயனுடையதாக இருந்தது. மேற்படி கவிதைத் தொகுதிகளில் சிலவற்றையாவது பெற்றுக்கொள்ள விருப்பம்தான் ஆனால் முகவரிகள் தெரியவில்லை.

மற்றைய கட்டுரைகளும், கவிதைகளும் சோடை போகவில்லை. 'வரப்பெற்றோம்' பகுதியைக் காணவில்லை. இருந்தாலும் 'கலைமுகம்' சிறப்பானதாகவே வெளி வந்துள்ளது.

**செ.கனகரெத்தினம்**

அன்புவழிபுரம்,
திருகோணமலை.

## இரக்கும் துயர்

**பொலிகையூர் சு.க.சிந்துதாசன்**

கோடழியும்
வட்டத்துக்கு வெளியே
காற்றின்...
தடங்களிலேறி
விலகிப் போகிறேன்,
மேகத்தைப் போல.

அடைபட்டிருக்கும்
குருவியின் சிறகுகள்...
வெட்டப்பட,
துடித்துவிழும் அதன் ஓலம்
கூட்டின்,
கம்பிகளில்
பட்டுத் தெறிக்கிறது.

அந்தர வெளியொன்றில்
தொங்கியபடி,
விம்மித்ததும்புகிறேன்.

அறுந்துபோன
குருவியின் சிறகுகள்...
கூட்டைச் சுமந்தபடி
பறந்தெழுகிறது,
நான் தொங்கும்
அந்தர வெளிநோக்கி.




***With Best Compliments***

***from***


**CDB**

**Citizens Development**
**Your Friend**

**No. 208, Stanley Road,**
**Jaffna.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# O/L மற்றும் A/L இன் பின்னர்...



## யாழ் நகரில்

## Edexcel HNDs in...

- Quantity Surveying
- Civil Engineering
- Biomedical Science
- Law
- Business Management
- Computing

Leading to BSc (Hons) / BA (Hons) / B Eng (Hons) / LLB (Hons) from more than 105 Universities in UK , USA, Australia & Canada etc.......

உயர் கல்வித் துறையில் 15 வருட சிறந்த அனுபவத்துடன் இலங்கையின் முதற் தர உயர்கல்வி நிறுவனமாக தெரிவு செய்யப்பட்டுள்ள BCAS CAMPUS இன் யாழ் வளாகத்தில் உயர் தேசிய டிப்ளோமா (HND) தொடர்வதற்கான வாய்ப்பு

மேலுள்ள துறைகளில் HND ஐ நிறைவு செய்யும் மாணவர்கள் இலங்கையில் அல்லது 105 க்கு மேற்பட்ட பிரித்தானிய அமெரிக்க, அவுஸ்ரேலிய மற்றும் கனடா போன்ற நாடுகளின் தலை சிறந்த பல்கலைக்கழகங்களில் தமது பட்டப்படிப்பின் இறுதியாண்டினை பூர்த்தி செய்வதற்கான வாய்ப்பு

கடந்த 15 வருடங்களில் HND உயர்கல்வி வழிமுறையூடாக (Pathway) சர்வதேச பட்டப்படிப்புகளை பூர்த்தி செய்து இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உயர் தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொண்ட ஆயிரக்கணக்கான மாணவர்களைப் போன்று நீங்களும் வெற்றியாளர் ஆகலாம்.

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131

15 YEARS of Trust & Excellence in Higher Education

ISO 9001:2008 CERTIFIED

www.MacroAdz.com

Colombo | Dehiwela | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org